வெளியீடு 03-03-2000 Issued 03-03-2000

65
2001

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மே 17, 1999 - தொகுதி 83 - எண் 1

Monday, 17th May, 1999—Volume 83 - No. 1

பேரவைச் செயலகம், சென்னை - 600 009
sembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

D
V24, 31'N99
N99.83.1
22.1.202

[Price Rs. 3.00

17-05-1999

# உள்ளடக்கம்


பக்கங்கள்

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் ix-xii

Personnel of the Government of Tamil Nadu xiii-xvi

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் xix-xx

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) xxi-xxxi

1. **வினாக்கள்-விடைகள்--**

உடுக்குறியிட்ட வினாக்கள் 1-36

2. **தகவல் கோரல்--**

(அ) தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டை அமல்படுத்த அமைக்கப் பெற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் குழு அளித்த அறிக்கையை வெளியிடுதல் 37-39

(ஆ) எம்.ஜி.ஆர். சமாதியின் முன்பு காலணிகளைப் பாதுகாக்க ஏற்பாடு 39-41

3. **அறிக்கைகள் அளித்தல்--**

(அ) பொதுக் கணக்குக் குழு 41

(ஆ) பொது நிறுவனங்கள் குழு 41

பக்கங்கள்

4. **அறிவிப்புகள்**--


(அ) தமிழ்நாடு விற்பனை வரி, கேளிக்கைகள் வரி, ஆடம்பர வசதி வரி (பூசல்களைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 1999 (ஆ.இ.) — 42

(ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 (ஆ.இ.) — 43

(இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 (ஆ.இ.) — 44

(ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 (ஆ.இ.) — 45

(உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 (ஆ.இ.) — 46

(ஊ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 (ஆ.இ.) — 47

(எ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 (ஆ.இ.) — 48

(ஏ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 (ஆ.இ.) — 49

(ஐ) தமிழ்நாடு உணவகங்களிலும் தங்கும் விடுதிகளிலும் உள்ள ஆடம்பர வசதிகளின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 (ஆ.இ.) — 50

(ஒ) தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்பு திருத்தச் சட்டமுன்வடிவு, 1999 (ஆ.இ.) — 140-141


221202



D
V24, 31'N 99
NO.S. 831

பக்கங்கள்

**அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)**--


(அ) தமிழ்நாடு விற்பனை வரி, கேளிக்கைகள் வரி, ஆடம்பர வசதி வரி (பூசல்களைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 1999 — 42

(ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 — 43-44

(இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 — 44-45

(ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 — 45-46

(உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 — 46-47

(ஊ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 — 47-48

(எ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 — 48-49

(ஏ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 — 49-50

(ஐ) தமிழ்நாடு உணவகங்களிலும் தங்கும் விடுதிகளிலும் உள்ள ஆடம்பர வசதிகளின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 — 51

(ஒ) தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவுச் சட்டமுன்வடிவு, 1999 — 51-52

(ஓ) நிலம் கையகப்படுத்துதல் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 — 52-53

(ஔ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 — 53-54

| | பக்கங்கள் |
|---|---|
| 6. அரசினர் சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)-- | |
| (அ) தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்ற (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 | 54-60 |
| *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 54,56-59,60 |
| *திரு. வி. கே. லட்சுமணன் | 54-56 |
| (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 | 60-90 |
| மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 60,63,73.74, 75-76,77-79, 80,81,82,89-90 |
| திரு. சி. ஞானசேகரன் | 61-68,74-75, 78,82 |
| மாண்புமிகு திரு. ஆலடி அருணா | 65,66 |
| திரு. கே. சுப்பராயன் | 68-70,71 |
| திரு. ச. அழகிரி | 70 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 71-74 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | 76-77,81,88 |
| டாக்டர் அ. செல்லக்குமார் | 79 |
| திரு. மு. அப்பாவு | 80 |
| *மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி | 81 |
| மாண்புமிகு திரு. துரைமுருகன் | 82-83 |
| திரு. எஸ். திருநாவுக்கரசு | 83-85 |
| திரு. ஆர். சொக்கர் | 85 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 85-89 |
| (இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 | 61-89,90-92 |
| மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 90,91 |





| | பக்கங்கள் |
|---|---|
| 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)--தொடர்ச்சி | |
| (ஈ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 | 61-89,92-93 |
| மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 92,93 |
| (உ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 | 61-89,93-106 |
| மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 94,105 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | 94 |
| திரு. ஆர். சொக்கர் | 94 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 95 |
| (ஊ) தமிழ்நாடு நகரப் பரப்பிடங்களில் உள்ள விலங்குகள் மற்றும் பறவைகள் (கட்டுப்படுத்துதலும் ஒழுங்குமுறைப்படுத்துதலும்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1999 | 106-113 |
| மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 106,111-112,113 |
| திரு. சி. ஞானசேகரன் | 106-110 |
| *திரு. நா. பெரியசாமி | 110-111 |
| (எ) தமிழ்நாடு ஹேக்னி வாடகை வண்டிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 | 113-117 |
| மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி | 114,115-116, 117 |
| திரு. சி. ஞானசேகரன் | 114-115 |
| (ஏ) தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 | 117-119 |
| மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி | 118,119 |

| | பக்கங்கள் |
|---|---|
| 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)--தொடர்ச்சி | |
| (ஐ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 | 119-127 |
| *மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் | 119-120,122, 124-126,127 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 120-121, 123-124 |
| திரு. சி. வேலாயுதன் | 121 |
| திரு. சி. ஞானசேகரன் | 122-123 |
| (ஒ) தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் மாற்றுதல்) திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல் சட்டமுன்வடிவு, 1999 | 127-129 |
| மாண்புமிகு திரு. க. சுந்தரம் | 127-128,129 |
| (ஓ) தமிழ்நாடு பிழைப்பூதியப் படித்தொகை வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 | 129-135 |
| மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் | 129,130,132-133,134-135 |
| திரு. கே. சுப்பராயன் | 130-131,133 |
| திரு. சி. ஞானசேகரன் | 131 |
| (ஔ) தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 | 130-133, 135-137 |
| மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் | 135,136 |





| | பக்கங்கள் |
|---|---|
| 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)--தொடர்ச்சி | |
| (அஅ) தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் [வேலையாட்களுக்கு நிலையான தகுதி (அந்தஸ்து) வழங்குதல் திருத்தச்] சட்டமுன்வடிவு, 1999 | 137-138 |
| மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் | 137,138 |
| (அஆ) ஊதியம் வழங்கல் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 | 139-140 |
| மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் | 139,140 |
| (அஇ) தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்பு திருத்தச் சட்டமுன்வடிவு, 1999 | 141-147 |
| மாண்புமிகு திரு. ஆலடி அருணா | 141,144-146,147 |
| திரு. சி. ஞானசேகரன் | 141-142 |
| *திரு. நா. பெரியசாமி | 142-143 |
| திரு. சி. வேலாயுதன் | 143-144 |
| திரு. ஜி. நிஜாமுதீன் | 144 |
| (அஈ) தமிழ்நாடு வழக்குரைஞர்களுக்கான எழுத்தர்களின் நலநிதிச் சட்டமுன்வடிவு, 1999 | 148-157 |
| மாண்புமிகு திரு. ஆலடி அருணா | 148,153-156,157 |
| திரு. குழந்தை தமிழரசன் | 148-149 |
| *திரு. அ.லெ. சுப்பிரமணியன் | 149-150,155 |

| | பக்கங்கள் |
|---|---|
| 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)--தொடர்ச்சி | |
| (அசு) தமிழ்நாடு வழக்குரைஞர்களுக்கான எழுத்தர்களின் நலநிதிச் சட்டமுன்வடிவு, 1999 | 148-157 |
| திரு. சி. ஞானசேகரன் | 150-151 |
| *திரு. நா. பெரியசாமி | 151-153 |
| (அஉ) தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 | 157-161 |
| *மாண்புமிகு திரு. இ. பெரியசாமி | 157,159-160 |
| திரு. சி. ஞானசேகரன் | 158 |
| (அஊ) இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 | 161-163 |
| *மாண்புமிகு திரு. இ. பெரியசாமி | 161-162,163 |
| 7. அரசினர் தீர்மானம்-- | |
| விதி 32-ஐத் தளர்த்தல் | 163-164 |
| 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- | 164-167 |




## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர்--நீதிபதி செல்வி எம். பாத்திமா பீவி

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :**
பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.

2. கல்வி அமைச்சர் : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :**
தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :**
மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.

4. வருவாய்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :**
வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :**
நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப்பணித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. துரைமுருகன் :**
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :**
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி**... 

10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:**
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும இந்து சமய அறநிலையத் துறை.

11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. கா.நா. நேரு :**
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை. கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. பால்வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. க. சுந்தரம் :**
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :**
தொழிலாளர் நலன், மக்கள்தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. சட்டத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா :**
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :**
கைத்தறி, துணித் தொழில்.

16. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் :**
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. வனத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :**
வனம், சின்கோனா மற்றும் சுற்றுச் சூழல், மாசுக் கட்டுப்பாடு.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :**
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19\. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :
கிராமக் குடிசைத் தொழில்களை உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

20\. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப் படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

21\. கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் : மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் :
கால்நடைப் பராமரிப்பு.

22\. சமூக நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன் :
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.

23\. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.

24\. சுற்றுலாத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன் :
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25\. கதர்த் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்

26\. மீன் வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :
மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—JUSTICE SELVI M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1\. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2\. **Minister for Education** .. **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3\. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4\. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5\. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko. Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

6. Minister for Agriculture .. The Hon. Thiru Veerapandi S. Arumugam:
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives. Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. Minister for Public Works .. The Hon. Thiru Duraimurugan:
Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. Minister for Transport .. The Hon. Dr. K. Ponmudi:
Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.

9 Minister for Highways .. The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:
Highways and Ports.

10. Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments .. The Hon. Dr. M. Thamizhkudimagan:
Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

11. Minister for Food, Public Distribution System and Co-operation .. The Hon. Thiru K.N. Nehru:
Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

12. Minister for Milk .. The Hon. Thiru K. Sundaram:
Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.



13. Minister for Labour .. The Hon. Thiru A. Rahman Khan:
Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

14. Minister for Law .. The Hon. Thiru Aladi Aruna:
Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money lending and Legislation on Chits.

15. Minister for Handlooms .. The Hon. Thiru N.K.K. Periasamy:
Handlooms, Textiles.

16. Minister for Backward Classes .. The Hon. Thiru M.R.K. Panneerselvam:
Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. Minister for Forest .. The Hon. Thiru Pongalur N. Palanisamy:
Forest, Cinchona, and Environmental Pollution Control.

18. Minister for Housing .. The Hon. Thiru K. Pitchandi:
Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. Minister for Rural Industries and Registration .. The Hon. Thiru I. Periasamy:
Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

| | |
|---|---|
| **20. Minister for Information, Publicity and Printing** | .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity. Film Technology and Cinematography Act. Stationery and Printing and Government Press. |
| **21. Minister for Animal Husbandry** | .. **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry. |
| **22. Minister for Social Welfare** | .. **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare. Beggars Home. Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| **23. Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare. Hill Tribes and Bonded Labour. |
| **24. Minister for Tourism** | .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| **25. Minister for Khadi** | .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board. Bhoodan and Gramdan. |
| **26. Minister for Fisheries** | **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைத் தலைவர்
மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

பேரவைத் துணைத் தலைவர்
மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. சி.டி. தண்டபாணி
டாக்டர் காஞ்சனா கமலநாதன்
திரு. பெ. ஆசையன்
டாக்டர் ஆ. ஞானசேகரன்
டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்
திரு. வை. சிவபுண்ணியம்

செயலாளர்
திரு. டி. சாலமன் ஜெயபால்

53-106—2

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி அனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 4. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 5. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 6. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 7. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 8. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 11. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 12. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 13. | திரு. சௌரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 14. | திரு. க. சம்பதராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 15. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 16. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 17. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| 18. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 19. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| 20. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 21. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 22. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 23. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 24. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 25. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 26. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம.ஏ | .. சார்புச் செயலாளர் |
| 27. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 29. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| 30. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. தலைமை நிருபர் |
| 31. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| 32. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 33. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 34. | திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 35. | திரு. நா. நடராஜன், பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| 36. | திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 37. | திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. தலைமை நிருபர் |
| 38. | திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| 39. | திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல்., | .. சார்புச் செயலாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | .. அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | .. மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. | .. புவனகிரி |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. | .. அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. வி. | .. கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. | .. மேட்டுப்பாளையம் |
| 10 | அழகராஜா, திரு. என்.ஆர். | .. தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. | .. சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. | .. கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், திரு. வ. | .. செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | .. ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | .. பவானிசாகர் |
| 18. | ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். | .. வில்லிவாக்கம் |
| 19. | ஆலடி அருணா, திரு. | .. ஆலங்குளம் |
| 20. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |

| | | |
|---|---|---|
| 21. | ஆறுமுகம், திரு. தி.ப. | .. திருச்செங்கோடு |
| 22. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |
| 23. | ஆனந்தன், திரு. பால. | .. வந்தவாசி (செ.வ.) |
| 24. | இரகுமான்கான், திரு. அ. | .. இராமநாதபுரம் |
| 25. | இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | .. மேலூர் |
| 26. | இராசமாணிக்கம், திரு. பி. | .. ஒரத்தநாடு |
| 27. | இராசன், திரு. வி. பி. | .. ராஜபாளையம் (செ.வ.) |
| 28. | இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. | .. ஆண்டிமடம் |
| 29. | இராமசாமி, டாக்டர் வை. | .. பண்ருட்டி |
| 30. | இராமசாமி, திரு. கே.ஆர். | .. திருவாடனை |
| 31. | இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். | .. கம்பம் |
| 32. | இராமச்சந்திரன், திரு. சி.இரா. | .. தொண்டாமுத்தூர் |
| 33. | இராமச்சந்திரன், திரு. மா. | .. திருவோணம் |
| 34. | இராமலிங்கம், திரு. ஏ. | .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 35. | இராமலிங்கம், திரு. செ. | .. திருவிடைமருதூர் |
| 36. | இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். | .. பள்ளிப்பட்டு |
| 37. | இராமஜெயம், திரு. ந.பூ. | .. மயிலாப்பூர் |
| 38. | இராஜ ரெட்டி, திரு. ச. | .. தளி |
| 39. | இராஜேந்தர், திரு. டி. | .. பூங்கா நகர் |
| 40. | இளங்கோ, திரு. கோ. | .. அவினாசி (செ.வ.) |
| 41. | ஈஸ்வரன், திரு. ரா. | .. வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 42. | உதயசூரியன், திரு. தா. | .. சங்கராபுரம் |
| 43. | உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | .. தஞ்சாவூர் |



| | | |
|---|---|---|
| 44. | கணேசன், திரு. ஐ. | .. எடப்பாடி |
| 45. | கணேசன், திரு. கே. சி. | .. ஜெயங்கொண்டம் |
| 46. | கருணாநிதி, கலைஞர் மு. | .. சேப்பாக்கம் |
| 47. | கருப்பசாமி, திரு. சொ. | .. சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 48. | கருப்பண்ண உடையார், திரு. ந. | .. பாபநாசம் |
| 49. | கருப்புசாமி, திரு. டி. | .. உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 50. | கன்னையன், திரு. க. | .. தொட்டியம் |
| 51. | காஞ்சனா கமலநாதன், டாக்டர் | .. கிருஷ்ணகிரி |
| 52. | காந்தி, திரு. ஆர். | .. இராணிப்பேட்டை |
| 53. | கிருஷ்ணசாமி, டாக்டர் க. | .. ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 54. | கிருஷ்ணன், திரு. எஸ். வி. | .. நாங்குநேரி |
| 55. | கிருஷ்ணன், திரு. சீ. வெ. | .. வேடசந்தூர் |
| 56. | குண்டன், திரு. டி. | .. உதகமண்டலம் |
| 57. | குத்தாலம் பி. கல்யாணம், திரு. | .. குத்தாலம் |
| 58. | குமாரதாஸ், டாக்டர் தே. | .. கிள்ளியூர் |
| 59. | கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. | .. கும்மிடிப்பூண்டி |
| 60. | குழந்தை தமிழரசன், திரு. | .. விருத்தாசலம் |
| 61. | கோதண்டம், திரு. ஏ. | .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 62. | கோபால், திரு. பா | .. மேட்டூர் |
| 63. | கோபு, திரு. சி. | .. அணைக்கட்டு |
| 64. | கோமதி சீனிவாசன், திருமதி | .. வலங்கைமான் (செ.வ.) |
| 65. | கோவிந்தன், திரு. ப. | .. தாரமங்கலம் |
| 66. | கோவிந்தன், திரு. வெ. | .. பேரணாம்பட்டு (செ.வ.) |

67. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
68. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்
69. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்
70. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு
71. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்
72. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
73. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
74. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)
75. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்
76. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)
77. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
79. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)
80. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
81. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்
82. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
83. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி
84. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
85. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி
86. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்
87. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்
88. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்
89. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்
90. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
91. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)
92. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
93. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
94. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்
95. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்
96. சுப்பிரமணி என்கிற சி.சு.மணி, திரு. சி. .. திருவள்ளூர்
97. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு
98. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி
99. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி
100. சுரேஷ் ராசன், திரு. என். .. கன்னியாகுமரி
101. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி
102. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)
103. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்
104. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை
105. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை
107. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்
108. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
109. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை
110. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி

111. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
112. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
113. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
114. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
115. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
116. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
117. தங்கவேலன், திரு. சுப. . கடலாடி
118. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
119. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் (மேற்கு)
120. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
121. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
122. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
123. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
124. தனபாலன், திரு. கே. ஆர். ஜி. .. சேலம்-1
125. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
126. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
127. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
129. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
130. திருவேங்கடம், திரு. பெ.சு. .. கலசப்பாக்கம்
131. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
132. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்
133. துரைமுருகன், திரு. .. காட்பாடி
134. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி



135. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
136. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
137. நடராஜன், திரு. த. .. செஞ்சி
138. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
139. நன்னன், திரு. கொ.வீ. .. செங்கம் (செ.வ.)
140. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
141. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
142. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
143. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. .. நெல்லிக்குப்பம்
144. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
145. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
146. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
147. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
148. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
150. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
151. பன்னீர்செல்வம், திரு. எம். ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
152. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
153. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
154. பாலகிருஷ்ணன், திரு. சோ. . முதுகுளத்தூர்
155. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
156. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை
157. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை

158. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்

159. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)

160. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)

161. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்

162. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி

163. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு

164. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை

165. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா.)

166. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்

167. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்

168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்

169. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்

170. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)

171. மகேந்திரன், திரு. இரா. .. நாட்றாம்பள்ளி

172. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்

173. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)

174. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்

175. மணி, திரு. டி. .. விளவங்கோடு

176. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்

177. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்

178. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்

179. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு



180. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்

181. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)

182. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி

183. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்

184. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை

185. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)

186. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி

187. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை

188. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)

189. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்

190. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்

191. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்

192. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்

193. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்

194. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்

195. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்

196. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்

197. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்

198. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்

199. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)

200. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்

201. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி

202. ரவிசங்கர், திரு. கு. .. விளாத்திகுளம்

203. ராசேந்திரன், திரு. ஏ. .. போளூர்
204. ராணி, செல்வி க. .. தலைவாசல் (செ.வ.)
205. ராமசாமி, திரு. ஏ.எம். .. ஆத்தூர்
206. ராமச்சந்திரன், திரு. செ. .. திருப்பரங்குன்றம்
207. ராஜு, திரு. எஸ். .. பொள்ளாச்சி
208. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. .. சத்தியமங்கலம்
209. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். .. காங்கேயம்
210. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் (கிழக்கு)
211. வல்லரசு, திரு. பி.என். .. உசிலம்பட்டி
212. வாசுகி முருகேசன், திருமதி .. கரூர்
213. விஜயகுமார், திரு. கே.எம். .. சாத்தூர்
214. விஜயன், திரு. டி.சி. .. திருவொற்றியூர்
215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. .. வீரபாண்டி
216. வீரப்பன், திரு. கே.கே. .. கபிலர்மலை
217. வெங்கடசாமி, திரு. பி. .. ஓசூர்
218. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி
219. வெங்கடாசலம், திரு. ஜி.எல். .. பாலக்கோடு
220. வெங்கடேசன், திரு. ச. க. .. மதுராந்தகம்
221. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். .. காவேரிப்பட்டினம்
222. வெங்கிடு, திரு. ஜி. பி. .. கோபிச்செட்டிப் பாளையம்
223. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். .. அரூர் (செ.வ.)
224. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்



225. வேலாயுதன், திரு. சி. .. பதமநாபபுரம்
226. வேலுசாமி, திரு. வ. .. மதுரை (கிழக்கு)
227. வேல்சாமி, திரு. க. .. நாமக்கல் (செ.வ.)
228. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி
229. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்
230. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். .. திருச்செந்தூர்
231. ஜோதிகண்ணன், திரு. மு.ந. .. முசிறி
232. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
233. ஆன் டி' மான்டி, திருமதி .. நியமனம்
234. வெற்றிடம் .. திருவட்டாறு
235. வெற்றிடம் .. நத்தம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**வைகாசி 3, பிரமாதி — திருவள்ளுவர் ஆண்டு 2030**

**1999 மே 17, திங்கட்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்*
*தீரா இடும்பைத் தரும்".*

ஆராயாமல் ஒருவரைத் தேர்வு செய்து ஏற்றுக்கொள்வதும், ஆராய்ந்து தேர்வு செய்து ஏற்றுக்கொண்டபின் அவரைச் சந்தேகப்படுவதும் தீராத துன்பத்தைத் தரும்.

### 1. வினாக்கள் — விடைகள்

**உடுக்குறியிட்ட வினாக்கள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 761, திரு. ப. மோகன் கந்தசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**761—**

**இலக்கியப் பாடப் பிரிவுகள்**

***23462—திரு. ப. மோகன் கந்தசாமி:**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழ் இலக்கியம், வரலாறு இல்லாத பாடப் பிரிவுகளை அனுமதிப்பதில்லை என முடிவெடுக்க அரசு முன்வருமா?

[1999 மே 17

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ் இலக்கியம், வரலாறு இல்லாத பாடப் பிரிவுகளை அனுமதிப்பதில்லை என முடிவெடுக்க இயலாத நிலை உள்ளது.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இன்றைய மாணவச் செல்வங்களுக்கு, நம்முடைய நாட்டினுடைய வரலாறு, சுதந்திரப் போராட்ட வரலாறு போன்ற பல வரலாற்று நிலைகள் தெரியாத சூழ்நிலை இருக்கிறது. அதுபோன்று இலக்கியம் என்று எடுத்துக்கொண்டால், காளமேகப் புலவர், மதுரைக் கவிராயர் போன்றவர்களால் சிலேடைக் கவிதை, சீட்டுக் கவிதை எனப் பல்வேறு கவிதைகள் அந்தக் காலத்திலே இயற்றப்பட்டவை உள்ளன. இப்போது குழந்தைகளுக்கு இலக்கிய உணர்வு இல்லாத காரணத்தால், இலக்கண உணர்வு இல்லாத காரணத்தால், அவைகள் எல்லாம் என்னவென்றே தெரியாத சூழ்நிலை இருக்கின்றது. எனவே நம்முடைய பாடப் பிரிவுகளிலே, இலக்கியம், History—Indian History, Modern History போன்றவற்றைச் சிறிதளவாவது வைத்தால் ,சிறப்பாக இருக்குமென்று கருதுகிறேன். அரசு அதைச் செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்கப்பட்டிருக்கிற கேள்வியையொட்டித்தான் துறையைச் சார்ந்தவர்கள் விடையளிப்பார்கள். கேட்கப்பட்டிருக்கிற கேள்வியிலே உள்ள கருத்து, தமிழ் இலக்கியமும், வரலாறும் இல்லாத பிற பாடப் பிரிவுகளை அனுமதிப்பதில்லை என முடிவெடுக்க அரசு முன்வருமா என்பது. அவை இல்லாத பாடப் பிரிவுகள் என்பது Physics, Chemistry, Mathematics, Biology, அப்படிப்பட்ட பாடப் பிரிவுகள் இருக்கின்றன. ஆனால் தமிழ் மொழி என்ற முறையில் படிக்கின்ற பாடப் பிரிவில் இலக்கியம் நிச்சயமாக இடம் பெறுகிறது. சிறப்புத் தமிழ் படிக்கிறபோது, அந்தத் துறையில் இலக்கியங்கள் ஏராளமாக இடம் பெறுகின்றன. வரலாறு என்ற துறையில் சிறப்பாக வரலாறு இடம் பெறுகிறது. தமிழ் இலக்கியப் பாடத்திலேயே மிகச் சிறந்த தலைவர்களைப் பற்றிய கட்டுரைகள் வருகிறபோது, அந்தத் தலைவர்களைப் பற்றிய செய்தி, இடம் பெறுகிறது. Plus 2 வகுப்புக்கு முன்னால் உள்ள பல வகுப்புகளில் இலக்கியம் இடம் பெறுகிறது. அதனுடைய விளைவைத்தான் திரு. மோகன் கந்தசாமி அவர்கள் மாணவர்களிடத்திலே பார்க்கவில்லையென்று நான் கருதுகிறேன். ஆனால் அவையெல்லாம் இடம் பெறுகின்றன.



1999 மே 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் சொன்னதைப்போல, தமிழ் மொழியைப் பொறுத்தவரையில்தான், அவருடைய கேள்வி பொருந்தும் என்று நானும் நினைக்கின்றேன். ஆனால் தமிழ் மொழி வரலாற்றிலே, தமிழ் மொழிப் பாடங்களிலே தமிழுக்காக அரிய தொண்டு செய்த தேவநேயப்பாவாணர், மறைமலையடிகளார் போன்றவர்களைப் பற்றிய, தனித் தமிழ் இலக்கியங்களில் பல்வேறு வகைகளிலே தமிழுக்குத் தொண்டாற்றிய அருந்தவப் புதல்வர்களைப் பற்றிய விரிவான வரலாற்றைப் பாட நூலாக ஆக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. இராமன் அவர்கள் சொல்கிறபோது இரண்டு பெயர்களைச் சொன்னார். நான் சொல்ல ஆரம்பித்தால் 20 பெயர்களைச் சொல்வேன். ஆனால் பாடக் குழு, ஒவ்வொரு ஆண்டும் பாடப் பிரிவில் மறைமலையடிகள், மு.வ. அவர்கள், நாவலர் சோமசுந்தர ப்ாரதி அவர்கள் மற்றும் திரு.வி.க. போன்றவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளை ஏதேனும் ஒரு வகையில் இடம் பெறச் செய்து வருகிறார்கள். மாறி மாறித்தான் இடம் பெறும். எல்லோருடைய கட்டுரைகளையும் ஒன்றாகச் சேர்த்துப் படிக்க வேண்டுமென்றால் அது முதுகலைப் பட்டப் படிப்பிலேதான் அவ்வளவு பேர்களுடைய கட்டுரைகளையும் ஒன்றாகப் படிக்கக்கூடிய வாய்ப்பு வரும். ஆனால் அவர்களைப் பற்றிய எண்ணங்கள் வருகிற அளவிற்கு இடம் பெறும். பாரதியாரோ, பாரதிதாசனோ, தேசிய விநாயகமோ, நாமக்கல்லாரோ அல்லது புதிய கவிஞர்களோ இடம் பெறக்கூடிய நிலையில்தான் இலக்கியக் கட்டுரைகளைக் கொண்ட தமிழ்ப் பாடம் அமைகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

முற்பகல் 9-35

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1 முதல் 5 வகுப்புகள் வரை கண்டிப்பாக அனைவரும் தமிழில்தான் பாடம் கற்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்குமா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அரசுப் பள்ளிக்கூடங்களில், ஒன்றியப் பள்ளிக்கூடங்களில், 1 முதல் 5 வரையில் தமிழ் நிச்சயமாக இடம் பெறுகிறது. 3-வது, 4-வது 5-வது வகுப்புகளில் ஆங்கிலமும் ஓரளவுக்குப் பயிற்றுவிக்கப்படுகிறது. பயிற்றுவிப்பதிலே குறை இருந்தாலும் இருக்கலாமே தவிர, பாடத் திட்டத்திலே குறை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். பொன்முடி.

**திரு. எஸ்.எஸ். பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய காலகட்டத்தில் மழலையர் பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்ப்பது அவசியமான ஒன்றாக இருக்கிறது. ஆனால் அதிகமாக ஆங்கில மழலையர் பள்ளிகள்தான் உள்ளன. பொதுவாக அரசு இந்த மாதிரி நிலையில் குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்ப்பதற்கு, விழிப்புணர்வை உருவாக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில்—தொடக்கப் பள்ளிகளில் அரசுக்குப் பொறுப்பில்லாமல்—பெற்றோர்—ஆசிரியர் கழகத்தின் மூலம் மழலையர் பள்ளிகளை நடத்துவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி சற்று குழப்பமானது. கட்டாயமான கல்வியை 5 வயது முதல் 14 வயதுவரை அரசு தரக் கடமைப்பட்டிருக்கின்றது. கல்வி என்பதையேகூட 5-வது வயது முதல் வழங்கினால் போதும் என்பதுதான் மிகச் சிறந்த கல்வியாளர்களுடைய கருத்து. பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளை மழலையர் பள்ளிகளில் சேர்த்து, முன்கூட்டியே அவர்களை அறிவுள்ளவர்களாக ஆக்குகிற முயற்சிகளில் ஈடுபட்டிருப்பது, பெற்றோர்களைப் பொறுத்தது. தொடக்கப் பள்ளிகளையும், மழலையர் பள்ளிகளையும் இணைப்பது இயலாத காரியம். மழலையர் பள்ளிகளையும் தமிழில் நடத்த வேண்டுமென்று அரசு ஏற்கெனவே வேண்டுகோள் விடுத்து, 3 தனிப் பாடங்களில் 2 பாடங்களைத் தமிழில் நடத்துங்கள் என்று கேட்டுக்கொண்டு இருக்கிறது. 'தாய்த் தமிழ்ப் பள்ளி', 'தாய்த் தமிழ்ப் பயிற்சிப் பள்ளி', என்ற முறையில் ஒரு பள்ளிக்கூடம், மழலையர்களுக்காக முழுவதும் தமிழிலேயே நடத்தக்கூடிய நிலைமை தமிழ்நாட்டில் உருவாகி வருகிறது. அதனைச் சட்டமன்ற உறுப்பினர்கள் ஊக்கப்படுத்தலாம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களுடைய கருத்துக்களை, எழுத்துக்களைப் பள்ளிக்கூடங்களில் பாடமாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினருக்கே அதைப் பாடமாக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே மாணவர்களிடத்திலே அதைப் பரீட்சிக்க வேண்டிய அவசியமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, தமிழகத்தில் இப்பொழுது தொழிற்பயிற்சிக் கல்விக்கு Counselling முறை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. குறிப்பாக, Engineering College, Medical College போன்றவைகளில் Co-education- தான் ஆரம்ப காலத்திலிருந்து இருக்கின்றது. ஆனால் Polytechnic-களில் பெண்களுக்கென்று தனியாக Polytechnic-கள் இருக்கின்றன. அவைகளில் பூர்த்தி செய்த பின்னால்தான் மற்ற, ஆண்கள் படிக்கக்கூடிய Polytechnic-களில் பெண்களைச் சேர்த்துக்கொள்ளக்கூடிய முறையை இந்த அரசு அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி மூலக் கேள்வியிலிருந்து எழவில்லை. தனிக் கேள்வியாகக் கேட்டால், ஒருவேளை விளக்கமான விடை தர முடியும். இருந்தாலும் ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிப்பது, பிரிந்து தனித்தனியாகப் படிப்பது என்பது நிலைமையைப் பொறுத்ததே தவிர, அதிலே ஒன்றும் கொள்கை கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, 'தாய்த் தமிழ் மழலையர் பள்ளிகளைப் பற்றி' மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். புயல் போன்ற வேகத்தில் தாய்த் தமிழ் போதனையை தடுத்துக் கொண்டிருக்கிற ஆங்கில மழலையர் பள்ளிகளுக்கு எதிராக தன்னம்பிக்கையோடு தொடங்கப்பட்டிருக்கிற

தாய்த் தமிழ்ப் பள்ளி, பெற்றோர்களுடைய ஊக்கமின்மையாலும் பாதிக்கப்படுகிறது. எனவே மாநில அரசு, தாய்த் தமிழ்ப் பள்ளி, ஆங்கில மழலையர் பள்ளியை எதிர்த்துப் போட்டியிடுவதில் அதிகபட்சம் சிறப்பு முன்னுரிமை கொடுக்கிற நிலையை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தாய்த் தமிழ்ப் பள்ளி' 'தாய்த் தமிழ்ப் பயிற்சிப் பள்ளி' என்ற முறையில் நடைபெறுகிற பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களுடைய மிகுந்த ஈடுபாடு காரணமாக, அவர்கள் ஏற்படுத்துகின்ற நம்பிக்கையின் காரணமாக, பெற்றோர்களிடத்திலே மெல்ல செல்வாக்கு பெற்று வருகிறது. அதை ஊக்கப்படுத்தலாம், வளர்க்கலாம். ஆனால் மழலையர் பள்ளிக்கூட நிருவாகத்தை அரசு ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முடியுமே தவிர, பொறுப்பை ஏற்றுக்கொண்டு செயல்படுத்துவது என்பது நிதிநிலைக்கு இடம் தரக்கூடிய ஒன்று அல்ல. எல்லாவற்றையும்விட தாய் மொழிப் பற்றையே வளர்க்காமல், நாங்கள் தாய் மொழியிலே கல்வி வழங்குகின்றோம் என்று சொல்கிற அந்த முறை இருக்கிறதே, அது வெற்றி பெறுவதில்லை. தாய் மொழிப் பற்றுதான் கல்வியைவிட முன்னதாக நாட்டு மக்களுக்குத் தேவைப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 762, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

முற்பகல் 9-40

**762—**

**பல்கலைக்கழகம் தொடங்குதல்**

***23684—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்தில் பல்கலைக்கழகம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நிர்வாக மேம்பாட்டிற்காக, வசதிக்காக மாவட்டங்களைப் பல்வேறு அளவுகளிலே பிரித்து நிர்வகிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்பட்டு வருகிறோம். நேற்றுகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரியலூரைத் தனி மாவட்டமாக அமைக்கக்கூடிய சூழ்நிலை பரிசீலிக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். சென்னைப் பல்கலைக்கழகம் அன்று லண்டனை ஒத்த பல்கலைக்கழகமாக இருந்த நிலையை மாற்றி நிர்வாக வசதிக்காக, மேம்பாட்டிற்காக ஒவ்வொரு துறையிலும், மருத்துவத் துறை, தமிழ்த் துறை, வேளாண்மைத் துறை, கால்நடைத் துறை போன்ற பல்வேறு துறைகளிலும் பல்வேறு பல்கலைக்கழகங்களை ஏற்படுத்தி உள்ளோம். சேலத்தில் பெரியார் பல்கலைக்கழகம். என்று ஏற்படுத்தியிருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்வது, மண்ணின் மைந்தரான பெரியார் பிறந்த—அவர் தமிழகத்திற்கே சொந்தமாக இருந்தாலும்கூட— இடத்தில் உள்ள அந்தப் பல்கலைக் கழகத்திற்குப் பெரியார் பல்கலைக் கழகம் என்று பெயரிட வேண்டும். ஈரோட்டிலே பொறியியல் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள், அதேபோன்று ஆண்கள், பெண்கள் கலை, அறிவியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரி இப்படி எல்லாக் கல்லூரிகளும் இருக்கக்கூடிய சூழ்நிலையில், மூதறிஞர் இராஜாஜி அவர்களுடைய பெயரை சேலம் பல்கலைக்கழகத்திற்கு மாற்றியமைத்து, ஈரோட்டு மைந்தனான, தமிழுக்குச் சொந்தமான பெரியார் அவர்களுடைய பெயரை ஈரோடு பல்கலைக்கழகத்திற்கு வைப்பதற்கு அரசு பரிசீலிக்க வேண்டும். அவ்வாறு அரசு பரிசீலித்து ஆவன செய்யுமா என்று நான் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்திலேயிருந்து இப்படி ஒரு கேள்வி எழும்புவதற்கே இடம் இருக்கக்கூடாது என்றுதான் சேலத்திலே ஏறபடுத்தப்பட்ட பல்கலைக்கழகத்திற்குப் பெரியார் பெயர் சூட்டப்பட்டது. கோயம்புத்தூரில் ஒரு பல்கலைக்கழகம் இருக்கிறது;

[1999 மே 17

சேலத்தில் ஒரு பல்கலைக்கழகம் இருக்கிறது. ஈரோடு இடைப்பட்ட இடமாக அமைந்துவிட்டது. பழைய கோவை மாவட்டத்தில் ஈரோடு இடம் பெற்றிருந்ததையும் மாண்புமிகு உறுப்பினர் நினைவில் கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 763, திரு. ச.க. வெங்கடேசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**763—**

**நவீன அல்ட்ரா சவுண்ட் முறை**

***14879—திரு. ச.க. வெங்கடேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இருதயத்திற்குச் செல்லும் இரத்தக் குழாய்களில் ஏற்படும் அடைப்பைக் கரைக்க நவீன அல்ட்ரா சவுண்ட் முறையை அரசு பொது மருத்துவமனைகளில் பயன்படுத்த அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அல்ட்ரா சவுண்ட் கருவி இருதயத்திலுள்ள இரத்தக் குழாய்களில் உள்ள அடைப்புகளைக் கண்டறியும் சாதனமே தவிர அடைப்புகளைக் கரைக்கப் பயன்படுத்த இயலாது. ஆஞ்சியோகிராபி முறையிலும் மற்றும் டாப்ளர் முறையிலும் இவற்றைக் காணலாம். சென்னை அரசு பொது மருத்துவமனை இருதய சிகிச்சைத் துறையில் மிக நவீன சேத்லேப் கருவியுள்ளது. இக்கருவியைப் பயன்படுத்தி மிக நவீன இருதய சிகிச்சையான 'ஆஞ்சியோ பிளாஸ்டி' என்னும் சிகிச்சையை மேற்கொண்டு அறுவைச் சிகிச்சையின்றி, இருதயத்தில் இரத்தக் குழாயகளில் ஏற்படும் அடைப்பை நீக்கலாம். மேலும், இருதயத்திலுள்ள இரத்தக் குழாய்களில் ஏற்படும் கடினமான அடைப்புகளை ஸ்டெண்ட் ரோட்டோ பிளோட்டர் மற்றும் அதிரெக்டமி முறைகளாலும் நீக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 764, திரு கு. மனோகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.



1999 மே 17]

**764—**

**விளம்பரம் மூலம் அறிவுறுத்தல்**

***19463—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கவனக்குறைவாக மின்சாரத்தைப் பயன்படுத்துவதைத் தடுக்கப் பொதுமக்களுக்கு விளம்பரம் மூலம் அறிவுறுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கவனக்குறைவாக மின்சாரத்தைப் பயன்படுத்துவதைத் தடுக்க அரசு தலைமை மின் ஆய்வாளர் மின் உரிமம் வழங்கும் வாரியம் மூலம் சில நாளேடுகளில் விளம்பரம் செய்துள்ளார்.

(ஆ) அரசு தலைமை மின் ஆய்வாளர் மின் உரிமம் வழங்கும் வாரியம் மூலம் மழைக் காலங்களில் மின் விபத்தைத் தடுப்பதற்காக பொது மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தமிழ்ச் செய்தி விளம்பரத் துறை மூலமும் மற்றும் இந்து, தினத்தந்தி, மாலை முரசு, தினத்தூது போன்ற நாளேடுகளில் பத்திரிகைச் செய்தியாகப் பிரசுரித்துள்ளார்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். இப்போது சில நேரங்களில் திடீர் திடீரென்று மின்தடை ஏற்படும் சூழ்நிலையில் வெளியே செல்லும் சிலர் கவனக்குறைவாக Switch-களை off செய்யாமல் வீட்டைப் பூட்டிவிட்டுச் செல்லும்போது, மின்விசிறி, விளக்குகள், போன்றவை எரிந்து மின்சாரம் அதிக அளவுக்கு வீணாக அழிக்கப்படுகிறது. சில கிராமங்களில் காலை 8.00 மணிக்குக்கூட தெரு விளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன. அதைத் தடுக்கும்பொருட்டும், மின்சாரத்தைச் சேமிக்க ஏதுவாக புதிய சிக்கன நடவடிக்கையை மேற்கொள்ளவும் பொதுமக்களுக்கும் தலைவர்களுக்கும் அறிவுரைகளை வழங்க அரசு புதிய முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டைவிட்டு வெளியிலே செல்கின்றவர்கள் கவனக்குறைவாக மின்விசிறி மற்றும் விளக்குகளைப் போட்டுவிட்டுப்போனால் மின்சாரம் அதிகமாகும். அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். தமிழ்நாட்டிலே 1 கோடியே, 10 இலட்சம் பயனீட்டாளர்கள் (Consumers) இருக்கிறார்கள். இவர்கள் ஒவ்வொருவருடைய வீட்டிற்கும் போய் மின்சார வாரியம் ஒரு Switch வைக்க முடியாது. அப்படி மின்சாரத்தைச் சேமிக்க வேண்டுமென்று விரும்புகின்றவர்கள், போகின்ற நேரத்திலே Main Switch-ஐ off செய்துவிட்டுப்போனால் எல்லாம் தானாகவே நின்றுவிடும். எனவே அப்படிப்பட்ட முறைகளைக் கையாளலாம். மேலும் மின்சாரத்தைச் சிக்கனம் செய்ய வேண்டும் என்பதற்காக மின்சார வாரியத்தாலே பல கருத்தரங்குகள், பல சொற்பொழிவுகள், நடத்தப்படுவதோடு விளம்பரங்களெல்லாம் செய்யப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 765, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**765—**

**பாதாள சாக்கடைத் திட்டம்**

***7431—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதி, வேளச்சேரி வட்டத்தில் கட்டப்பட்டு வரும் பாதாள சாக்கடைத் திட்டம் எப்பொழுது செயல்படத் தொடங்கும்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தாம்பரம் தொகுதி, வேளச்சேரி வட்டத்தில் கட்டப்பட்டு வரும் பாதாள சாக்கடைத் திட்டத்தின் பணிகள் அனைத்தும் ஆகஸ்ட் 1999-ல் முடிக்கப்பட்டு, செப்டம்பர் 1999-ல் செயல்படத் தொடங்கும்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 766, திரு. செங்கை சிவம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**766—**

**சங்கீத நீரூற்று**

***22349—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மெரினா கடற்கரையில் சங்கீத நீரூற்று அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சென்னை மெரினா கடற்கரையில் சங்கீத நீரூற்று அமைக்க சென்னை மாநகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்கப்பூர் சந்தோஷ் கடற்கரையில் சங்கீத நீரூற்று மிகச் சிறப்பாக அமைந்திருக்கிறது. அப்படி மெரினா கடற்கரையிலும் அமைக்கப்படுமா? இதைத் தனியார் நடத்துகிறார்களா அல்லது இதை.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூல வினாவிற்கு, மாநகராட்சி ஏற்பாடு செய்யும் என்று அமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார். அப்புறம் என்ன?

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தனியாருக்கு விடப்பட்டிருக்கிறதா? எப்பொழுது பணி தொடங்கப்படும், இதனுடைய மதிப்பீடு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம், 12-8-1997 இல் ஓர் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

[1999 மே 17

இதற்காக விளம்பரம் செய்யப்பட்டு, "TAFSIL" என்ற புதுடெல்லியிலுள்ள நிறுவனம் திட்ட ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் திட்ட அறிக்கையையும் தந்திருக்கிறார்கள். அதுபற்றிப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். ஏறத்தாழ 6 கோடி ரூபாய் செலவில் இந்தத் திட்டம் தொடங்கி நடைபெறும். அநேகமாக எல்லா இடங்களிலும் பார்வையிட்டு செய்தவர்கள்தான் இதையும் பார்த்துச் செய்ய இருக்கிறார்கள். கூடுமானவரை நன்கு, சிறப்பாகத்தான் இது அமைக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 767, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**767—**

**தேயிலை உற்பத்தி**

***16981—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தரமான தேயிலை தமிழகத்தில் எந்தப் பகுதியில் உற்பத்தியாகிறது?

(ஆ) எவ்வளவு உற்பத்தியாகிறது?

(இ) அந்தத் தேயிலைத் தூளின் பெயர் என்ன?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நீலகிரி மாவட்டத்தில் உள்ள மலைப்பகுதியில் உள்ள தட்பவெப்ப நிலை தரமாக உள்ளதால் அங்கு விளைவிக்கப்படும் தேயிலை மற்ற தேயிலை ரகங்களைவிட உயர்ந்ததாகும்.

(ஆ) நீலகிரி மாவட்டத்தில் ஓராண்டுக்கு 80,477 மெட்ரிக் டன் தேயிலை உற்பத்தி செய்யப்படுகிறது.

(இ) உயரமான மலைப்பகுதிகளில் ஆர்த்தோடக்ஸ் மற்றும் சி.டி.சி. வகையான தேயிலை உற்பத்தி செய்யப்படுகிறது.



1999 மே 17]

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உற்பத்தியாகும் உயர் ரகமான தேயிலை தமிழகத்தில் விற்கப்படுகிறதா அல்லது அனைத்தும் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறதா? அப்படி வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுவதினால், நம் நாட்டிற்கு எவ்வளவு அன்னியச் செலாவணி கிட்டுகிறது? உயர்ரகமான அந்தத் தேயிலை உற்பத்தியை இன்னும் அதிகப்படியாக விளைவிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகிலேயே கிட்டத்தட்ட 38 நாடுகள் தேயிலை சாகுபடி செய்தாலும், இந்தியா, சீனா, ஸ்ரீலங்கா, இந்தோனேஷியா ஆகிய நான்கு நாடுகள்தான் தேயிலை உற்பத்தியில் அதிகப் பங்கு வகிக்கின்றன. இதிலே பெரும்பாலும் நம்முடைய உள்ளூர் தேவைக்குப் போக ஏற்றுமதியும் செய்யப்படுகிறது. ஜெர்மனி, ஃபிரான்ஸ் போன்ற ஐரோப்பிய நாடுகளுக்கும், ரஷ்யா மற்றும் அரேபிய நாடுகளுக்கும் மிகுதியாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதிலே நம்முடைய தேவையும் அடங்கும். ஆனால் அன்னியச் செலாவணி எவ்வளவு இதன் மூலம் கிடைக்கிறது என்ற அந்த விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் தரப்படும்.

(முற்பகல் [illegible]-50)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா.மு. முபாரக்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேயிலை உற்பத்தியில் தமிழகத்தில் நீலகிரி மாவட்டம் முதன்மை இடத்தை வகிப்பதோடு, சிறந்த தேயிலையையும் உற்பத்தி செய்து கொடுப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தத் தேயிலை உற்பத்தியை மேன்மேலும் பெருக்குவதற்கு சிறு விவசாயிகளுக்கு மானிய விலையில் தேயிலை நாற்றுக்கள் நம்முடைய அரசின் மூலமாக கடந்த இரண்டு ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகின்றன. மத்திய அரசின் Hill Area Development Programme-ன்கீழ் அதிக நிதி பெற்று நீலகிரி மாவட்டத்தில் இந்த ஆண்டு அதிக விவசாயிகளுக்கு மானிய விலையில் தேயிலை நாற்று வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு

[1999 மே 17

எழுப்பிய அந்த வினாவிற்கு நான் சொல்லவிரும்புவது, மாநில அரசாங்கம் தேயிலைச் செடியை உற்பத்தி செய்து சிறு விவசாயிகளுக்கு, தாழ்த்தப்பட்ட விவசாயிகளுக்கு மானியத்திலே வழங்குகிறது. அதைப்போல மத்திய அரசாங்கத்தினுடைய நிதி உதவியைப் பெற்றும் நாம் தேயிலைச் செடியை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கிக் கொண்டுதான் இருக்கிறோம் என்பதை இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 768, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**768—**

**மண் பரிசோதனை**

***21315—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளது நிலத்தை மண் பரிசோதனை நடத்தி ஆலோசனை கூறும் முறையை வேளாண்மைத் துறை கடைப்பிடித்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். (ஆ) மண்ணின் தன்மையை அறிந்து விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்குவதற்கும் மண்ணில் உள்ள சத்துக்களுக்கேற்ப உரமிட்டு உற்பத்தியைப் பெருக்குவதற்கும், தமிழ்நாட்டில் 19 மண் ஆய்வகங்கள் உள்ளன. மேலும் கிராமந்தோறும் சென்று விவசாயிகளிடமிருந்து நேரடியாக மண் மாதிரிகளைப் பெற்று, மண் பரிசோதனை மேற்கொண்டு, ஆய்வு முடிவுகளை அன்றே அளிக்க 16 நடமாடும் மண் ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய மண்ணைப் பொறுத்தளவிலே, உலகிலேயே மிக வேகமாக தன்னுடைய இயல்பான சத்தை இழந்து வருகிற மண்ணில் இந்திய



1999 மே 17]

மண்ணும் ஒன்று என்று ஐ.நா. சமீபத்திலே ஓர் அறிவிப்பிலே வெளியிட்டிருந்தது. உலகிலேயே மிக வேகமாக தன்னுடைய இயல்பான ச்த்தை இழந்து வருகிறது என்று சொன்னால், அதற்கான காரணமாக அமைந்திருப்பது Chemical கலந்த செயற்கை உரங்கள்தான். இன்றைக்கு மண்ணிலேகூட பல இடங்களில் மண்புழுக்களே இல்லை. மண்ணில் இயல்பாக இருக்கின்ற நுண்ணுயிர்ச் சத்துக்கள் எல்லாம் கொல்லப்பட்டு வருகின்றன. அதனால்தான் இயல்பான தன்மையை மண் இழந்து விடுகிறது என்று சொல்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புவது, இந்த விமர்சனத்தையும், விவரத்தையும் கவனத்திலே வைத்துக்கொண்டு தமிழ்நாட்டின் மண் வளத்தை இயல்பாகவும், இயற்கையாகவும் கூட்டுவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண் ஆய்வு மற்றும் செய்திகள் குறித்து விவசாயிகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குவது, கார அமில நிலை, மண்ணின் நிலை, கரையும் உப்பின் நிலை, சுண்ணம் மற்றும் மண்ணின் நயம், தழைச்சத்து, மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்து, நுண்ணோட்டங்கள், துத்தம், தாமிரம், இரும்பு மற்றும் மாங்கனீஸ சத்து போன்ற சத்துக்களை அறிந்து நாம் ஆய்வு செய்துதான் இவை போன்ற சத்துக்களை அறிந்து நாம் ஆய்வு செய்துதான் ஆலோசனைகளை விவசாயிகளுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம். இதில் மண்ணின் சத்து குறைந்து வருவதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது; மண்ணின் வளத்தைப் பெருக்கி, உற்பத்தியில் வளம் காணுவது எப்படி என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். மண் ஆய்வு செய்து அதற்கான ஆலோசனையை நாம் வழங்குகிறோம். அந்த மண்ணில் எந்தக் காலகட்டத்தில் எப்படிப்பட்ட உரமிட்டு பயிர் செய்தால் உற்பத்தி கூடுதலாகக் கிடைக்கும் என்ற ஆலோசனைதான் இந்த ஆய்வகம் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய தமிழகத்தில் நிறைய இடங்களிலே களர் நிலங்கள் விவசாயம் செய்யமுடியாத நிலையில் வீணாக இருக்கின்றன. அத்தகைய நிலங்களை தரமான நிலங்களாக ஆக்குவதற்கும் மற்றும் அரசு அந்தச் செலவினங்களை ஏற்று, அத்தகைய நிலங்களை

[1999 மே 17

வளப்படுத்திடவும் முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, களர் போன்ற நிலங்களை, நல்ல விளைச்சல் தரக்கூடிய நிலங்களாகக் கொண்டுவருவதற்கான அரசின் திட்டம் குறித்த நடவடிக்கையைப் பொறுத்தவரையில், சென்ற ஆண்டுகூட 8 மாவட்டங்களிலே அது எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. ஓர் ஏக்கருக்கு 800 ரூபாய் என்ற வீதத்தில் செலவழிக்கப்பட்டு, மண்ணின் தரம் உயர்த்தித் தரப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய இலாகா மண் பரிசோதனைகளைச் செய்தாலும்கூட, பொதுவாக விவசாயத்திற்கு கூலி ஆட்கள் கிடைக்காமல் அவர்கள் எல்லாம் கேரளாவிற்கு ஓடிவிடுகின்றார்கள். ஆகையினாலே விவசாய இலாகாவிலிருந்து எங்கெங்கெல்லாம் நிலங்களைக் கொடுக்கின்றார்களோ, அந்த இடங்களில் எல்லாம் என்னென்ன மரங்களை உற்பத்தி செய்யலாம் என்பதை தயவு செய்து ஆராய்ச்சி செய்து நிறைய மரங்களைக் கொடுப்பதற்கான முயற்சியினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண் பரிசோதனை ஆய்வு பற்றியதுதான் இந்த மூலக்கேள்வி. அதற்காகத்தான் இங்கே பதில் சொல்லி இருக்கின்றேன். ஆகவே, இந்த ஆய்வைப் பொறுத்தவரையில் எந்த மண்ணுக்கு என்னென்ன பழச் செடிகளை, என்னென்ன பயிர்களை நாம் பயிரிடலாம் என்ற ஆலோசனைகள் எல்லாம் வழங்கப்படுகின்றன. அந்த ஆலோசனையின்பேரில் விவசாயிகள் பயிர் செய்தால் அவர்களுக்கு அது இலாபகரமானதாக இருக்கும் என்பதற்காகத்தான் இந்த மண் ஆய்வு நடத்தப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 769, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.



1999 மே 17]

769—

## மண் அரிப்பைத் தடுத்தல்

***9996—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் பருவகாலங்களில் கூடுதல் மழை பொழிவதால மண் அரிப்பு ஏற்பட்டு அந்தப் பகுதிகளில் உள்ள நீர்த்தேக்கங்களில் வண்டல் படிந்து கொள்ளளவு குறைந்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மண் அரிப்பு ஏற்படாமல் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(இ) நீர்த்தேக்கங்களில் படிந்துள்ள வண்டல்களை விவசாயிகளே எடுத்துச் செல்வதற்கு அனுமதி அளிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மண் அரிப்பு ஏற்படாமல் தடுக்க, தடுப்புக்களான மணல்வாரி மற்றும் உபரிநீர் போக்கிகளுடன் கண்காணித்துப் பேணுதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(இ) விவசாயிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல மணல்வாரி மற்றும் உபரிநீர் போக்கிகள் அமைப்பதன் மூலம் நீர்த்தேக்கங்களில் ஏற்படுகின்ற மண்ணை ஓரளவு கட்டுப்படுத்த இயலும். ஆனால் Catchment area-விலே ஏற்படுகின்ற Soil Erosion-ஐக் கட்டுப்படுத்த இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெரு மழைக்காலங்களில் குறிப்பாக, Catchment area-வில் ஒருசில பகுதிகளிலே நிலச்சரிவு ஏற்பட்டு அங்கிருந்து மணல்பகுதிகள் நீர்த்தேக்கங்களை வந்தடைகின்றன. ஆகவே அவ்வாறு நிலச்சரிவு ஏற்படுவதைக் கண்டறிந்து, அந்தப் பகுதிகளிலே Check-Dam அமைக்கவும் மற்றும் வனத் துறையுடன் இணைந்து அந்தப் பகுதிகளிலே வன வளத்தைப் பெருக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1999 மே 17

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுவது உண்டு. பெருமழை பொழிகின்ற காலங்களில் சில நேரங்களில் மலைப்பகுதிகளிலே நிலச்சரிவு ஏற்படுகிறது. 1992 ஆம் ஆண்டு அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டு கடானா, இராம நதி, கருப்பா நதி மற்றும் குண்டாறு நீர்த்தேக்கங்களில் மண் படிந்துவிட்டது. அவற்றை அகற்றுவதற்கும் அல்லது விவசாயிகள் எடுத்துச் செல்வதற்கும் இப்போது நாம் அனுமதி அளித்திருக்கின்றோம். பெருமழை பொழிகின்ற காலங்களில் நிலம் சரிந்துவிடாமல் இருப்பதற்கு என்ன செய்யலாம் என்பது குறித்து நிரந்தரப் பரிகாரம் காண ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண் அரிப்பை மழைக்காலங்களில் போக்குவதற்கு அந்த மலைப்பாங்கான பகுதியிலிருந்து மழைநீர் வடிந்து வருகின்ற பகுதிகளில் சிறிய சிறிய Check-Dam கட்டுவதன் மூலமாக அந்தத் தண்ணீரைத் தேக்குவதற்கு வாய்ப்பாக அமையும். அதுபோன்று பெரிய அளவில் மண் சரிவுகள் பெருவாரியான நீர்த்தேக்கங்களில் எல்லாம் ஏற்பட்டு மண் நிரம்பி விடுகிறது. எனவே விவசாயிகள் உரமாக அதனைப் பயன்படுத்துகின்ற வகையில் அதனைத் தாராளமாக, இலவசமாக எடுத்துச் செல்வதற்கு சில தடங்கல்கள் உள்ளன. குறிப்பாக பேச்சிப்பாறையிலேயிருந்து மண்ணை எடுக்கின்றபோது, அது வனப் பகுதிக்கு உள்ளே வருகின்ற காரணத்தால்—அவர்களுக்கு இடைஞ்சல்கள் ஏற்படுகின்ற காரணத்தால்—அவர்கள் அதனை எடுத்துச் செல்ல முடியாத ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. எனவே, அந்தத் தடங்கலைத் தவிர்த்தால் ஏற்கெனவே நிரம்பி இருக்கின்ற மண்ணை விவசாயிகள் இலவசமாக எடுத்துச் செல்வதறகான வழிவகைகளை உருவாக்க இந்த இரண்டு துறைகளும் சேர்ந்து, ஒருமித்த கருத்தில் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண் அரிப்பைத் தடுப்பதற்காக மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் சொன்ன யோசனையும் கவனத்தில்கொள்ளப்படும். அங்கு இருக்கிற அந்த வண்டல் மண்ணை விவசாயிகள் எடுத்துச்



1999 மே 17]

செல்லலாம் என்பதில் எனக்கு மாறுபட்ட கருத்தில்லை. பேச்சுப்பாறையிலும் சரி, மற்ற இடங்களிலும் சரி, அப்படி எடுத்துச் செல்லலாம் என்று நான் முதலிலே அறிவித்தேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல், அதில் ஒரு சிறு பிரச்சினை உள்ளது. பெரும்பாலான நீர்த்தேக்கங்கள் காட்டுப் பகுதியில்தான் அமைந்திருக்கின்றன. மண்ணை எடுத்துக்கொண்டு வெளியே வந்தால் காட்டு இலாகாவினர், இதை எங்களுடைய உத்தரவு இல்லாமல் எப்படி எடுத்துக்கொண்டு போகிறாய் என்று மறிக்கிறார்கள். அதையும் மீறி வந்தால், Revenue இலாகாவினர் mineral என்று மறித்து விடுகிறார்கள். ஆகையால் இந்தத் தொல்லையே வேண்டாம் என்று விவசாயிகள் ஒதுங்கிவிட்டார்கள். ஆனால் மீண்டும் மாவட்ட ஆட்சியரிடத்திலே தெரிவித்து, இந்த நிலை ஏற்படாமல் காட்டு இலாகாவிற்கும், Revenue இலாகாவிற்கும் அறிவுறுத்தும்படி கேட்டுக்கொண்டிருக்கிறேன். பல மாவட்ட ஆட்சியர்கள் இதுகுறித்து நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். எங்கேயாவது புகார்கள் இருக்குமானால், மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே சொல்லி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலையில் மண் அரிப்பு ஏற்படுவதற்கு இன்னொரு காரணம், அங்கே வைரம் இருப்பதாக அறிந்து கேரள எல்லையிலிருந்து பலர் கள்ளத்தனமாக வந்து ஏராளமாகத் தோண்டிவிடுகிறார்கள். பல இடங்களில் 30 அடி, 40 அடி அளவிற்கு அகலமாகத் தோண்டிவிடுகிற காரணத்தினால், மண் இறுக்கம் குறைந்து அதெல்லாம் Loose soil ஆகி விடுகிறது. ஆகவே கள்ளத்தனமாக வைரம் எடுப்பவர்கள் நிலத்தைத் தோண்டுகின்ற நிலையைத் தடுப்பதற்கு வனத் துறையோடு சேர்ந்து பொதுப் பணித் துறை நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய இந்தச் செய்தியைப் படித்தால் இன்னும் பல இடங்களிலே இந்த வேலையை ஆரம்பிக்க நூற்றுக்கணக்கான ஆட்கள் இறங்கிவிடுவார்கள். வைரம் இருக்கிறதா என்பது எனக்குத் தெரியாது. ஆனால், Water spread area நம்முடைய எல்லைக்குள் இருக்கிறபோது, அங்கு தோண்டினால் தடுக்கலாம். ஆனால் சில இடங்களிலே water spread area கேரள மாநிலத்தை

ஒட்டியும் இருக்கிறது. சில நேரங்களிலே அவர்கள் செய்வதை நாம் தடுக்க முடியவில்லை. இருந்தாலும் இந்த மண் அரிப்பு போய் வைரம் கிடைப்பதற்கு ஒரு வழி சொல்லியிருக்கிறார் திரு. ஏ.எல்.எஸ். அவர்கள். அது குறித்து அரசு ஆய்வு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 770, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**770—**

## உபரி நீரைத் தேக்குதல்

***10595—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, சாத்தனூர் அணையிலிருந்து உபரியாக வெளியேறும் தண்ணீரை மேல்நிலைக் கால்வாய் மூலம் பல ஏரிகள் வழியே சமுத்திரம் ஏரி வரை விவசாயப் பாசனத்திற்கு விடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையைப் படிக்க, தாங்கள் அனுமதிக்கக் கோருகிறேன்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் சாத்தனூர் நீர்த்தேக்கத்தில் மழைக் காலங்களில் உபரியாக வெளியேறும் தண்ணீரை முழு நீர்மட்டக் கால்வாய் அமைத்து, சமுத்திரம் ஏரிவரை 28 ஏரிகளுக்கும் மற்றும் நந்தன் கால்வாய் மூலமாக 36 ஏரிகளுக்கும் பயன்பெறும்படியான திட்டம் சுமார் 27 கோடி ரூபாய் அளவில் தயாரிக்கப்பட்டு வருகிறது.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 40, 50 ஆண்டுகால விவசாயிகளின் கோரிக்கையான சாத்தனூர் அணையில் உயர்மட்டக் கால்வாய் அமைத்து திருவண்ணாமலை மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பாசன வாய்ப்புகள் ஏற்படுத்தித்தர 27 கோடி ரூபாய் செலவில் திட்ட மதிப்பீடு தயார் செய்து, அறிவித்து இருக்கின்ற தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும்,



பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் திருவண்ணாமலை மாவட்ட மக்களின் சார்பாக, விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 771, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**771—**

## பேருந்து வசதி

***10260—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஏமனூருக்கு பேருந்து வசதி செய்து கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரத்திலிருந்து ஏமனூர் செல்லும் தடத்தில் பன்னவாடிவரை மட்டுமே பேருந்து சென்று வர சாலையுள்ளது. பன்னவாடியிலிருந்து ஏமனூர் 12 கிலோ மீட்டர் தூரம் வனப்பகுதியில் அமைந்துள்ளது. தற்போது நடைபாதை வழியாகத்தான் உள்ளது. பேருந்தோ அல்லது சிறுவாகனமோ செல்லக்கூடிய அளவிற்கு யாதொரு சாலை வசதியும் கிடையாது. மேலும், ஏமனூர் மக்கள் மறுபக்கம் காவிரி ஆற்றைக் கடந்து சென்று வருவதையே விரும்புவதால் கோரிக்கை வழித்தடத்தில் பேருந்து இயக்க வேண்டிய நிலைமை நிலவவில்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பன்னவாடி வரையிலே பேருந்து செல்கிறது என்று சொன்னார்கள். பன்னவாடி, சேலம் மாவட்டத்தினுடைய கரையோரப் பகுதி. இது தருமபுரி மாவட்டத்தினுடைய எல்லையோரப் பகுதி மட்டுமல்லாமல் ஒரு

பக்கம் காடு சூழ்ந்திருக்கிறது. மற்றொரு பக்கம் காவிரி ஆற்றினுடைய கரையாக இருக்கின்ற காரணத்தினாலும், அந்தப் பகுதி மக்கள் ஒன்றிய அலுவலகத்திற்கு அல்லது வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கு வர வேண்டும் என்று சொன்னால்கூட, ஆற்றைக் கடந்து, சேலம் மாவட்டம், மேட்டூர், மேச்சேரி சென்று, நூற்றுக்கும் மேற்பட்ட கிலோ மீட்டர்வரை சென்று இங்கு வர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இதையெல்லாம் கவனத்திலேகொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே சிறப்புக் கவனம் செலுத்தி, பெண்ணாகரத்தையடுத்த ஒட்டனூரிலிருந்து காட்டு வழியாகச் செல்லக்கூடிய காட்டுச் சாலையை மேம்படுத்தி, அதிலே பேருந்து விடுவதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன். அதேநேரத்திலே அங்கே பிரசவம், பாம்புக்கடி என்று பல்வேறு அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டாலும்கூட இரவிலே இறந்துவிடக்கூடிய சூழ்நிலையைத் தவிர, வேறு எந்தப் பாதுகாப்பும் இல்லை. ஆகவே அதையெல்லாம கருத்திலேகொண்டு அங்கே அந்தச் சாலையை மேம்படுத்தி பேருந்து விடுவதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏமனூரில் வாழ்கின்ற மக்கள் பெரும்பாலும் செட்டிப்பள்ளி என்ற ஊருக்குச் சென்றுதான் தங்களுடைய அன்றாடத் தேவைகளுக்காகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்று என்னிடத்திலே கொடுக்கப்பட்டுள்ள குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அங்கேயுள்ள காவிரி ஆற்றைக் கடந்து சென்று பக்கத்திலே உள்ள செட்டிப்பள்ளி என்ற ஊரைத் தங்களுடைய தேவைகளுக்குப் பயன்படுத்திக்கொண்டு, அங்கேயிருந்து குளத்தூர், மேட்டூருக்குச் செல்வதுதான் அவர்களுக்கு வழக்கமாக இருக்கிறது. ஆகவே அவர்களைப் பொறுத்தவரையில் பெண்ணாகரத்திற்கு அதிகப் பயணங்கள் இல்லை. ஆகவே இந்த வழித்தடம் சீர் செய்யப்பட்டாலும்கூட மக்கள் அடர்வு போக்குவரத்திலே இருக்காது என்று அவர்கள் குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அந்த வழித்தடம் சீர் செய்யப்படுமானால் பேருந்துகளை விடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 772, திரு. ரா. சேதுநாதன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**772—**

## நியாய விலைக் கடைகளுக்கு விநியோகம்

***17189—திரு. ரா. சேதுநாதன்:**

*மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நியாய விலைக் கடைகளுக்கு லாரிகள் மூலம் அரிசி, சர்க்கரை போன்ற பொருட்கள் எடுத்துச் சென்று வழங்கும்போது லாரியிலிருந்து எடை போடாமல் பொருட்கள் வழங்கப்படாததை அரசு அறியுமா?*

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொது விநியோகத் திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவு நியாய விலைக் கடைகளுக்கு அனுப்பப்படும் அத்தியாவசியப் பொருட்களை முன்கூட்டியே சமச்சீர் செய்து வைக்கிறது. சமச்சீர் செய்யப்பட்ட பொருட்கள் சரியாக உள்ளதா எனப் பரிசோதிக்கக் கூட்டுறவுச் சங்க அலுவலர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். பரிசோதிக்கப்பட்ட பொருட்கள் நகர்வு செய்யப்படும்போது முதன்மைச் சங்க அலுவலர்கள் லாரியுடன் சென்று நியாய விலைக் கடைகளுக்கு வழங்க அனுமதிக்கப்படுகின்றனர். எனவே நியாய விலைக் கடைகளுக்கு அரிசி, சர்க்கரை போன்ற பொருட்கள் லாரி மூலம் எடுத்துச் சென்று வழங்கும்போது லாரியிலிருந்து மீண்டும் எடைபோட்டு வழங்கப்பட வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 773, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

[1999 மே 17

773—

### நியாய விலைக் கடை திறத்தல்

***23069—திரு. வை. சிவபுண்ணியம்:**

*மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மன்னார்குடி தொகுதி, பெருகவாழ்ந்தான் ஊராட்சி, மறவாதி கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை திறக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு விதிகளின்படி நகர்ப்புற நியாய விலைக் கடையில் குறைந்தது 800 குடும்ப அட்டைகளும், கிராமப்புற நியாய விலைக் கடையில் குறைந்தது 500 குடும்ப அட்டைகளும் இணைக்கப்பட வேண்டும். மறவாதி கிராம நியாய விலைக் கடையுடன் 327 குடும்ப அட்டைகளே இணைக்க முடியுமாதலால் அங்கு புதிய நியாய விலைக் கடை திறக்க வாய்ப்பில்லை. மேலும் மறவாதி கிராமம், தாய்க் கடையிலிருந்து 1 கிலோ மீட்டர் தூரத்தில் இருப்பதாலும் இலவசமாகக் கட்டடம் தர யாரும் முன்வராததாலும் அங்கு பகுதி நேர நியாய விலைக் கடை திறக்கவும் வாய்ப்பில்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருகவாழ்ந்தான் ஊராட்சி, மறவாதி கிராமம். பெருகவாழ்ந்தான் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலமாக எடுத்து திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருக்கிற கிராமம் ஆகும். அது மிகப் பெரிய கிராமம். ஆறு கிராமங்களை உள்ளடக்கிய கிராமமாக இருக்கிற மறவாதி கிராமத்தில பகுதி நேரக் கடைக்குரிய இடம் கிடைக்கவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் திரும்பவும் நேரிலே சந்தித்து, இலவசமாகவோ அல்லது வாடகைக்கோ கட்டடம் தருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கிறேன். ஆகவே மீண்டும் மறுபரிசீலனை செய்து பகுதி நேரக் கடையை ஏற்படுத்தித் தருவதற்கான முயற்சிகளை அவசியம் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1999 மே 17]

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி நேரக் கடையை ஆரம்பிப்பதற்கு 2 கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும்; 200 அட்டைகளாவது குறைந்தது இருக்க வேண்டும் என்று ஏற்கெனவே அரசு விதி இருக்கிறது. ஓரிடத்தில் சாதிப் பிரச்சினை ஏற்படுகிறது என்றால், ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி அந்த இடத்திலே கடையைத் திறக்கலாம் என்று சொல்லியும் இருக்கிறோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிக அத்தியாவசியம் என்று கருதினால், அந்தப் பகுதியிலே வாடகை இல்லாமல் கட்டடம் கூட்டுறவுச் சங்கத்திற்குத் தரப்படுமானால் அதைத் திறப்பதற்கு நிச்சயமாக இந்த அரசு முன்வரும். அதேநேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் ஒன்றை அறிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தாய்க் கடையிலிருந்து 2, 3 இடங்களிலே பகுதி நேரக் கடை என்று பிரிக்கப்படுமானால், அங்கு பணிபுரிகின்ற அலுவலர்கள் தாய்க் கடையை 2, 3 நாட்களுக்கு மூட வேண்டிய சூழ்நிலை வந்துவிடுகிறது. அப்படி மூடிவிடுகின்றபோது நியாய விலைக் கடை திறக்கவேயில்லை என்ற புகாரும் வந்துவிடுகிறது. அதையெல்லாம் கருத்திலேகொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அத்தியாவசியம் என்று கருதினால் நிச்சயமாக அரசு திறப்பதற்கு நடவடிக்கையை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 774, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

774—

### நீதிமன்றத்திற்குக் கட்டடம்

***15773—திரு. இரா. மணிமாறன்:**

*மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திண்டுக்கல் நகரில் உள்ள மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் போதுமான இட வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய கட்டடங்கள் எப்போது கட்டப்படும்?

[1999 மே 17

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றமும் மற்ற நீதிமன்றங்களும் திண்டுக்கல் நகரில் போதிய இடவசதியுள்ள அரசுக் கட்டடங்களில்தான் தற்போது செயல்பட்டு வருகின்றன. எனவே அங்கே புதியதாகக் கட்டடங்கள் கட்டுவதற்கான அவசியம் ஏதும் இல்லை.

முற்பகல் 10-10

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாகக் கட்டப்பட்டு பத்தாண்டுகளாக இயங்கிவருகின்ற அந்த நீதிமன்ற வளாகத்தில் கடந்த ஐந்தாறு ஆண்டுகளுக்குள் சில நீதிமன்றங்கள் புதியதாக உருவாகியிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் நீதிபதிகள் அமர்ந்து வழக்கு நடத்துவதற்கான சூழ்நிலை இல்லை என்று சொல்லி அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்; உச்ச நீதிமன்றத்திற்கும் எழுதியிருக்கிறார்கள். சென்ற ஆண்டு இந்தக் கேள்வியை நான் கேட்டபொழுது, சுற்றுச்சுவரும் வழக்கறிஞர்களுக்கான கட்டடமும் அதோடு சேர்த்து நீதிமன்றங்களுக்கான கட்டடங்களும் 63 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும் என்றும், அதற்கு உச்ச நீதிமன்ற அனுமதியை எதிர்பார்ப்பதாகவும் மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். இப்பொழுது அந்த அனுமதி கிடைத்து விட்டதா? அப்படிக் கிடைத்துவிடுமேயானால், அந்தப் பணி இந்த ஆண்டு தொடங்கப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர் நீதிமன்றத்திலேயிருந்து 35. பணிகள் குறித்து செயற்குறிப்பு அரசுக்கு வந்திருக்கிறது. அவற்றில் திண்டுக்கல்லைப் பொறுத்தளவில் அங்கே—Central Record Branch—ஒரு மைய ஆவண அறை கட்டுவதற்கு மட்டும் 45 இலட்சம் ரூபாயிலே மதிப்பீடு இருக்கிறது. அதை எந்த ஆண்டில் கட்ட வேண்டும், எப்படிக் கட்ட வேண்டும் என்ற விவரத்தை அரசு உயர் நீதிமன்றத்திலே கேட்டிருக்கிறது. பதில் வந்தவுடன் 45 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள மைய ஆவண அறை கட்டப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் (குறுக்கீடு) சத்தம் போட்டுக் கூப்பிட்டால் மட்டும் அனுமதித்து விடுவேனா?



1999 மே 17]

வினா எண் 775, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**775—**

**நீதிமன்றம் அமைத்தல்**

***25315—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டில் குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டில் குற்றவியல், உரிமையியல் நடுவர் நீதிமன்றம் அமைப்பதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்டராம்பட்டு தொகுதியில் இருக்கின்ற மக்கள் சுமார் 70, 80 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள செங்கம் வழக்காடு மன்றங்களுக்குச் செல்லுகின்ற காரணத்தினால் அவர்கள் 3 பேருந்துகள் மாறி மாறிச் செல்லுகின்ற நிலை இருக்கிறது. குறிப்பாக பெருங்களத்தூர், மோத்தக்கல் பகுதியிலே இருக்கின்ற மக்களெல்லாம் வழக்காடு மன்றங்களுக்கு காலதாமதமாகச் செல்லுகின்ற காரணத்தினால், அவர்களுக்குக் கூடுதலான தண்டனைகளும், பல வழக்குகள் அதனால் தள்ளுபடி செய்கின்ற நிலையும் இருக்கின்ற காரணத்தினால், தண்டராம்பட்டில் குற்றவியல், உரிமையியல் நீதிமன்றங்கள் தொடங்க வாய்ப்பு இல்லை என்றாலும், தண்டராம்பட்டு ஒன்றியத்தில் இருக்கின்ற மக்களுடைய வழக்குகளை திருவண்ணாமலைக்காவது மாற்றி—திருவண்ணாமலைக்குப் பேருந்து வசதி இருக்கின்ற காரணத்தினால், திருவண்ணாமலைக்காவது மாற்றுவதற்கு—மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு பல்வேறு நீதிமன்றங்களுக்கு ஒப்புதல் அளிக்க நாம் விரும்பினோம். ஆனால் நிதி நெருக்கடியின் காரணமாக

[1999 மே 17

3 நீதிமனறங்களுக்கு மட்டுமே ஒப்புதல் அளிக்க முடிந்தது. இராமேஸ்வரம், காட்டுமன்னார்கோயில், போச்சம்பள்ளி ஆகிய 3 இடங்களுக்குத்தான் ஒப்புதல் வழங்க முடிந்தது. அருமை நண்பர் குறைந்தபட்சம் திருவண்ணாமலைக்காவது மாற்றிக் கொடுக்க முடியுமா என்று கேட்டிருக்கிறார். இது நியாயமான கோரிக்கை. இதுகுறித்து நாங்கள் உயர் நீதிமன்றத்திற்குப் பரிந்துரை செய்து அவர்களுடைய கருத்தைப் பெற்ற பிறகு அதற்கான அதிகார வரம்பை மாற்றிக் கொடுப்பதற்கு முயற்சிப்போம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராதாபுரம் வட்டாரத்தில் உள்ள இராதாபுரத்தில் ஏற்கெனவே ஒரு குற்றவியல் நீதிமன்றம் 15 ஆண்டுகளுக்கு முன்னால் நடைபெற்று வந்தது. தற்போது அது நடைபெறவில்லை. ஏற்கெனவே அங்கே இருந்த வட்டாட்சியர் அலுவலகம் இப்போது புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதால் அந்த இடம் காலியாக உள்ளது. ஆகவே அங்கே குற்றவியல் நீதிமன்றம் நடத்துவதற்கு அரசுக்கு வாடகை இல்லாத கட்டடமே இருககின்றது. ஆகவே இராதாபுரத்தில் குற்றவியல் நீதிமன்றம் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து உயர் நீதிமன்றத்திலிருந்து நாம் செயற்குறிப்பைப்பெற வேண்டும். சாத்தான்குளத்திலே ஒரு நீதிமன்றம் அமைப்பதற்கு ஏற்கெனவே அரசு ஆணையிட்டுவிட்டது. அதை அவர்கள் இன்னும் செயல்படுத்தவில்லை. இவற்றையெல்லாம் பரிசீலித்து அதற்குப் பிறகுதான் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைப்பற்றி உயர் நீதிமன்றத்திலே கருத்தைப்பெற்று செயல்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. தளபதி.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மதுரையிலே நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டு சுமார் 25 ஆண்டுகளாகிவிட்டன. அதிகமான வழக்குகள் இருப்பதால், அதிகமான கூட்டம் வருகின்ற காரணத்தினால், அங்கே கழிப்பிட வசதியையும், மற்ற வசதிகளையும் அதிகப்படுத்தித் தர அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



1999 மே 17]

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது எல்லாம் சாதாரணப் பிரச்சினை. உயர் நீதிமன்ற நிர்வாகமே தானாக எடுத்துகொள்ளும். இதற்கு முக்கியமான கேள்வி நேரத்தை எடுத்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி, தாலுகா தலைமையிடம். அங்கே நீதிமன்றம் தொடங்குவதற்காக சென்ற ஆண்டு நாகப்பட்டினம் மாவட்டத் தலைமை நீதிபதி வருகை தந்து இடம் எல்லாம் தேர்வு செய்து தந்தார்கள். ஆனால் இதுவரையில் நீதிமன்றம் தொடங்கவில்லை. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேராவூரணியில் விரைவில் நீதிமன்றம் தொடங்க ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** பேரவைத் தலைவரவர்களே, ஒவ்வொரு தாலுகா தலைநகரிலும் குறைந்தபட்சம் ஒரு நீதிமன்றம் அமையவேண்டும் என்பதுதான் அரசின் கொள்கை. எனவே எந்தெந்த தாலுகாவில் நீதிமன்றம் இல்லை என்ற கணக்கை வைத்து இருக்கிறோம். என்றாலும் சில இடங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட நீதிமன்றங்களும் இருக்கின்றன. எனவே அடுத்து இருக்கின்ற இன்னொரு தாலுகாவில் ஒன்றுக்கு மேற்பட்ட நீதிமன்றங்கள் இருக்குமானால், அந்த நீதிமன்றத்தை மாற்றிக் கொடுப்பதன் மூலமாகவும், அப்படிக் கொடுப்பதற்கு வசதியில்லை என்றால், புதிய நீதிமன்றம் தொடங்குவதற்கும் அரசு திட்டமிட்டிருக்கிறது. என்றாலும், தற்போதுள்ள நிதி நெருக்கடியின் காரணமாக இந்த நீதிமன்றங்களையெல்லாம் திறக்க முடியாத நிலை இருக்கிறது. மனம் இருக்கிறது. ஆனால், பணம் இல்லை. அதைத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றங்களில் போதிய நடுவர்கள் இல்லாததால், வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. உதாரணமாக, ஓமலூரில் உள்ள இரண்டு நீதிமன்றங்களுக்கும் சேர்த்து ஒரே நீதிபதிதான் இருக்கிறார். ஆகவே வழக்குகள் முடிய காலதாமதம் ஏற்படுகிறது. இதுபோன்று காலியாக உள்ள பணியிடங்களில் நீதிபதிகளை நியமிக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1999 மே 17

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** தலைவா அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கிற சுமார் 400 நீதிமன்றங்களில் 40 நீதிமன்றங்களில், அடிமட்டத்தில் நீதிபதிகள் இல்லை என்ற விவரம் அரசுக்கும் தெரியும். இதைத் தேர்வாணையம்தான் உடனடியாக எடுத்து உயர் நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். உயர் நீதிமன்றம் அந்தப் பணியை முனைப்புடன் செய்யும் என்று எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. ஆவுடையப்பன்.

**திரு. இரா. ஆவுடையப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லையில், மாவட்ட நீதிமன்றத்திற்குச் சுற்றுச்சுவர் இல்லாத நிலையில், ஆடு, மாடுகள் எல்லாம் அந்தப் பகுதியில் வந்து படுத்துக்கொண்டு, ரொம்பவும் அசுத்தம் பண்ணக்கூடிய நிலை இருக்கிறது. மிகவும் சிறப்பாக, நல்லமுறையில் நீதிமன்றங்களுக்குக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்ற நெல்லை மாவட்ட நீதிமன்றத்திற்கு, சுற்றுப்புறச் சுவர் கட்டித்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப் போன்று, அந்த நீதிமன்றத்திற்குச் சுற்றுச்சுவர் தேவை என்பது உண்மைதான். அந்த நீதிமன்றத்திற்கு மட்டுமல்ல, எல்லா நீதிமன்றங்களுக்குமே சுற்றுச்சுவர் பாதுகாப்பு மற்றும் அதற்கான நிதி முறைகள் எல்லாம் தேவை என்பதில் அரசுக்கு இரண்டுபட்ட கருத்தே இல்லை. என்றாலும், நிதி இல்லை. 1922 ஆம் ஆண்டிலே எந்தக் கட்டணத்தை நாம் நீதி மன்றங்களுக்குச் செலுத்திக் கொண்டிருந்தோமோ, அதைத்தான் இன்னமும் செலுத்திக்கொண்டிருக்கிறோம். அதில் ஒரு பெரிய மாற்றத்திற்குப் பொதுமக்களும், வழக்கறிஞர்களும் ஒத்துழைத்தாலொழிய, இந்தச் சீர்திருத்தங்களையெல்லாம் நாம் எதிர்பார்க்கின்ற அளவுக்கு வேகமாக முடிக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாநகரில் நீதிமன்றங்கள் பல்வேறு இடங்களில் அமைந்திருக்கின்ற காரணத்தால், அவற்றை ஒருங்கிணைத்து ஒரே வளாகத்தில் கட்டுவதற்கான நிலைப்பாடு 1989-90 ஆம் ஆண்டில் வகுக்கப்பட்டு, கடந்த ஆண்டுகூட ஒருங்கிணைப்புக் கட்டடம் கட்டுவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. அதனுடைய நிலைப்பாடுகள் இப்போது எந்த அளவில் இருக்கின்றன? அதை உடனடியாகச் செய்வதற்கு அரசு முன்னுரிமை அளிக்குமா என அறிய விரும்புகிறேன்.



1999 மே 17]

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** பேரவைத் தலைவரவர்களே, மாவட்டத் தலைநகரங்களில் எங்கெல்லாம் நீதிமன்றங்கள் வாடகைக் கட்டடங்களில் இருக்கின்றனவோ அல்லது பல்வேறு பகுதிகளில் அமைந்து இருக்கின்றனவோ, அந்த இடங்களில் எல்லாம், அரசு கட்டடத்தைக் கட்டவும் அல்லது ஒருங்கிணைந்த நீதிமன்றங்களை அமைக்கவும் அரசுக்கு விருப்பம் இருக்கிறது இதில் ஒன்றும் மாறுபட்ட கருத்தே இல்லை. ஆனால் இப்போது நிலைமையே நிதிப் பற்றாக்குறைதான். நீதித் துறையைப் பொறுத்தவரையில், 10 ஆண்டுகளுக்கு முன்னால் நீதிமன்றத்தில் எவ்வளவு வரவு இருந்ததோ அந்த அளவுக்குத்தான் செலவும் இருந்தது. ஆனால் இன்றையதினம் அதிலே 25 சதவிகிதம் செலவுகள் அதிகமாகி இருக்கின்றன. வரவு குறைவாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 776, திரு. ப. கோவிந்தன், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**776—**

**கால்நடை மருத்துவமனை**

***19105—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊ. மாரமங்கலம், திண்டமங்கலம், கொளசம்பட்டி ஆகிய ஊராட்சிகளுக்குக் கால்நடை மருத்துவமனைகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது அரசிடம் இதுகுறித்து செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1999 மே 17

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா இரண்டாண்டுகளுக்கு முன்பாக எழுப்பப்பட்ட வினாவாகும். ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊ.மாரமங்கலத்திலே போன நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களால் கால்நடை மருந்தகம் வழங்கப்பட்டதற்கு மிக்க நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 777, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**777—**

**கால்நடை மருத்துவமனை**

***22617—திரு. மீ.அ. வைதியலிங்கம் :**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, செம்பாக்கம் பேரூராட்சி, வார்டு எண் 1 இல் ஓர் உதவி கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு ஏதுமில்லை. இதனால் இவ்வினாவிற்கு இடமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரூராட்சியைச் சுற்றி, சற்றொப்ப 1 இலட்சம் விவசாயிகள் வாழ்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்து ஏற்படுத்தித் தருவார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



1999 மே 17]

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் தொகுதி, செம்பாக்கம் பேரூராட்சியில் 1.6.1998 முதல் பார்வைக் கிளை நிலையம் ஒன்று தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. வாரத்தில், திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று நாட்களில் சேலையூர் கால்நடைக் கிளை நிலைய ஆய்வாளரால் கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் செம்பாக்கம் பேரூராட்சிக்கு அருகில், 2 கி.மீ தூரத்தில் சேலையூர் கால்நடைக் கிளை நிலையமும், 3 கி.மீ தூரத்தில் மாடம்பாக்கம் என்ற இடத்தில் கால்நடை மருந்தகமும் தற்போது செயல்பட்டு வருகின்றன எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின்படி, எதிர்காலத்தில் நிதி நிலைமையைக் கருத்தில்கொண்டு, இதைப் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 778, திரு. அ.வ. அப்துல் நாசர், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**778—**

**காலியிடங்களை நிரப்புதல்**

***2064—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத் துறையின் கீழ் இயங்கிவரும் பள்ளிக்கூடங்களில் உள்ள இடைநிலை ஆசிரியர் காலியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டத்தில் உள்ள ஆதிதிராவிட நலப் பள்ளிகளில் காலியாக உள்ள இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் ஏற்கெனவே நிரப்பப்பட்டுவிட்டன. அவ்வப் போது ஏற்படும் காலிப்பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1999 மே 17

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கேட்கப்பட்டு நீண்ட நாட்கள் ஆகிவிட்டன. இப்போதுதான் பதில் வந்திருக்கிறது. காலியிடங்கள் நிரப்பப்பட்டதற்காக நன்றியைத் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 779, திரு. செங்கை சிவம், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**779—**

**மீன் காட்சியகம்**

***11554—திரு. செங்கை சிவம் :**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி காந்தி மண்டபம் அருகில் மீன் காட்சியகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கழக அரசு, சென்னைக்கு அருகில், கடலுக்கடியில் Oceanarium அதாவது, கண்ணாடி இழையிலான கூண்டுகளை அமைத்து, சுற்றுலாப் பயணிகள் சென்று, கடலுக்கடியில் உள்ள இயற்கைக் காட்சிகளைக் காண வழிவகை செய்வதற்காக ஓர் ஆய்வை நடத்தியது. அது என்னவாயிற்று? அரசு ஏற்கவில்லை என்றாலும்கூட, தனியாருக்காவது B.O.T. என்ற திட்டத்தின்கீழ், வழங்கி, சென்னைக்கு அருகில் Oceanarium அமைத்து, சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய அளவில் இந்தத் திட்டத்தை அரசு நிறைவேற்றுமா என அறிய விரும்புகிறேன்.



1999 மே 17]

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவளம் அருகே உள்ள ஆளவந்தார் Trust-க்குச் சொந்தமான நெம்மேலி தேவநேரிக் குப்பத்தின் பக்கத்தில் இந்த Oceanarium அமைக்க, இடமெல்லாம் தேர்வு செய்யப்பட்டு, கடல் மீன் காட்சியகம் அமைப்பதற்காக மீன் வளத் துறையால் 81 ஆயிரத்து 765 ரூபாய் வழங்கப்பட்டது. இந்த இடம் ஆய்வு செய்யப்பட்டபின், 24.5.1996 அன்று மாண்புமிகு முதலமைச்சரவர்களை ஆஸ்திரேலியாவில் உள்ள Studio-C என்ற நிறுவனத்தினர் சந்தித்து, இதுபோன்று Oceanarium அமைக்க வேண்டுமென்று தெரிவித்தார்கள். ஆனால், தற்போது, அதை சுற்றுலாத் துறைக்குச் சொந்தமான முட்டுக்காடு என்ற இடத்தில் அமைப்பதற்காகக் கேட்டிருக்கிறார்கள். கூடிய விரைவில் கோவாவில் உள்ள தேசிய மத்திய கடல் ஆய்வு நிலையத்தை, அந்த இடத்தை ஆய்வு செய்யக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அந்த நிறுவனமானது கூடிய விரைவில் சென்னைக்கு வந்து, ஆய்வு நடத்தி, அதன்பின், திட்ட மதிப்பீடுகள் எல்லாம் தயாரிக்கப்பட்டபின் இந்தக் காட்சியகம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 780, திரு எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**780—**

**குளிரூட்டும் நிலையம் அமைத்தல்**

***14949—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் கடற்கரைப் பகுதிகளில் கிடைக்கும் கடல் உணவுப் பொருட்களைப் பதப்படுத்த ஒரு குளிரூட்டும் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள சிறிய மீன்பிடித் துறைமுகப் பகுதிகளிலே அதிகமாக மீன்பிடிப்புத் தொழில் செய்யப்படுவதோடு, அந்தப் பகுதிகளிலே அதிகமான அளவிலே இறால் மீன் உற்பத்திப் பண்ணைகளும் இருக்கின்றன. அந்தப் பகுதியிலே உற்பத்தியாகின்ற இறால் மீன்கள் மற்றும் கடல் உணவுப் பொருட்களைப் பதப்படுத்தி அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற வகையிலே, சேதுபாவாசத்திரத்திலே மீண்டும் மீன் பதப்படுத்தும் மற்றும் குளிரூட்டும் நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேதுபாவாசத்திரத்தில் 1972 ஆம் ஆண்டு பனிக்கட்டி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அது 1982 ஆம் ஆண்டுவரைதான் செயல்பட்டது. 1985 ஆம் ஆண்டு அதை மூடிவிட்டோம். காரணம் என்னவென்றால், அந்தப் பனிக்கட்டி நிலையத்தில் ஒரு நாளைக்கு 2 டன் பனிக்கட்டிகள் தயாரிக்கப்படும். ஆண்டுக்கு 300 டன் பனிக்கட்டிகளைத் தயாரிக்கிறார்கள். ஆனால் அங்குள்ள மீனவர்கள் ஆண்டு ஒன்றுக்கு 50 டன் பனிக்கட்டிகளையே வாங்கிப் பயன் அடைந்தார்கள். இதனால் அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டது. மேலும் தனியார் இதுபோன்ற பனிக்கட்டி தயாரிக்கும் நிலையத்தை ஏற்பாடுசெய்து, அதை மீனவர்களுக்குக் கடனாகவும் வழங்கி வருகிறார்கள். ஆகவே மீனவர்கள் தனியாருடைய பனிக்கட்டி நிலையங்களிலிருந்து பனிக்கட்டிகளை வாங்க ஆர்வம் காட்டுகிறார்கள். ஆகவே இதுபோன்ற நிலையத்தை ஏற்பாடு செய்யாது என்பதை அரசு கொள்கை முடிவாக எடுத்திருக்கிறது. மேலும் அங்கே இதுபோல சிறப்பாக இன்னும் அதிகமாக பனிக்கட்டிகள் தேவைப்படும் என்றால், மீனவர்கள் அதை விரும்புகிறார்கள் என்றால், நிச்சயமாக அதை ஆய்வு செய்து நிதிநிலைமைக்கேற்ப அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்- விடைகள் முடிவுற்றன.

---

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. தகவல் கோரல்

### (அ) தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டை அமல்படுத்த அமைக்கப்பெற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் குழு அளித்த அறிக்கையை வெளியிடுதல்

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் தலைவரவர்களே ....

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** பேரவைத் தலைவரவர்களே ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு பேரும் ஒரே நேரத்தில் எழுந்து நிற்கிறீர்கள். யாரை அனுமதிப்பது? டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** Point of Order, Sir தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீடு பற்றிய புள்ளிவிவரங்களைச் சேகரிக்கவும், அதேபோல, அவர்களுக்குண்டான இட ஒதுக்கீட்டை முறையாக அமல்படுத்தவும் நான் உள்பட, 10 சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பெற்று, அந்த அறிக்கையை நாங்கள் இந்த அரசுக்குச் சமர்ப்பித்திருக்கிறோம். ஆனால், அந்த அறிக்கையை இந்த அரசு வெளியிடாமல் கடந்த 12 ஆம் தேதி அன்று...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order என்பது, இந்த அவையின் நடவடிக்கைகளிலே ஏதாவது குறைகள் இருக்குமானால், ஒழுங்குப் பிரச்சினை இருக்குமானால் அதைப் பற்றி எழுப்பலாம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏதோ ஒரு குழுவைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார். இதை இந்த அவையிலே இப்போது எழுப்புவது முறைதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கிருஷ்ணசாமி, என்ன Point உங்களுடையது?

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அந்த அறிக்கையை வெளியிடாமல்...

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order என்றால், இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிற நிகழ்ச்சிகளில் ஏதேனும் மாற்றம் வேண்டுமானால்

அல்லது முறை தவறாக இருந்தால் எழுப்பலாமேதவிர, இந்த அவையில் எப்பொழுதேனும் எழுப்பக்கூடிய பிரச்சினையை, நினைத்தபோது எழுப்புவது இந்த அவையினுடைய முறைக்கு நியாயம் அல்ல. எனவே அவர் ஏதேனும் எழுப்ப வேண்டுமானால், அதற்கான குறிப்பை அவைத் தலைவருக்கு அனுப்பி, உரிய அமைச்சரைக் கேட்டு, அதற்குப் பிறகுதான் எழுப்பலாம் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் சொல்லிவிட்டீர்கள், உட்காருங்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் குழு அறிக்கையை வெளியிடவில்லை என்று சொல்கிறீர்கள். அது அரசாங்கத்தின் விருப்பம். நீங்கள் அதற்கு...(குறுக்கீடு) என்ன முக்கியம்?

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அதாவது, அந்த அறிக்கையையே கொடுக்காமல் ....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவரவர்களே, இது முறைகேடானது. நினைத்தபோது நினைத்ததை யாரும் இந்த அவையில் எழுந்திருந்து பேசலாம் என்ற நிலைமையை இது ஏற்படுத்துகிறது. எவ்வளவு பெரிய உரிமையாக இருந்தாலும், முறைப்படி எழுதி அனுப்பித்தான் அந்தப் பிரச்சினையை எழுப்ப வேண்டுமே தவிர, Point of Order என்ற முறையில் நினைத்த பிரச்சினையை எழுப்புவதைத் தாங்கள் அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு அனுமதி இல்லை; கிருஷ்ணசாமி உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதி இல்லை என்று சொன்னதற்குப் பிறகு, தாழ்த்தப்பட்ட மக்கள் என்று சொன்னால் என்ன அர்த்தம்? தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லாக் கட்சிகளிலும் இருக்கிறார்கள். எல்லோரும் அக்கறையாக இருக்கிறார்கள். முதலமைச்சர் அக்கறையாக இருக்கிறார்கள். நீங்கள் உட்காருங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இந்தக் குழு நியமிக்கப்பட்டது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுவதற்கு எந்த அறிவிப்பையும் எழுதிக் கொடுக்கவில்லை. இன்று காலையில் என்னுடைய அறைக்கு வந்தீர்கள். (குறுக்கீடு) அதையெல்லாம் அனுமதிக்க முடியாது, உட்காருங்கள். அனுமதி வேண்டுமென்று நீங்கள்



எழுதிக் கேட்டீர்களா? இது நாம் இரண்டு பேரும் வாதம் செய்கிற இடமா? நீங்கள் எந்த அறிவிப்பையும் எழுதிக் கொடுக்கவில்லை நான் உங்களுக்கு அனுமதி கொடுக்க முடியாது, உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவரவர்களே, நான் ஒன்றை எழுதிக் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எழுதிக் கொடுத்ததை எல்லாம் எடுக்க வேண்டுமென்று இருக்கிறதா? நீங்கள் வெட்டி விவகாரம் செய்து கொண்டிருக்கிறீர்கள். எழுதிக் கொடுத்ததை எல்லாம் எடுக்க வேண்டுமென்று இருக்கிறதா? அனுமதி கிடையாது, உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் தலைவரவர்களே ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்ன சொல்லப்போகிறீர்கள்?

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றாகச் செய்யுங்கள்.

*(டாக்டர் க. கிருஷ்ணசாமி வெளிநடப்புச் செய்தார்.)*

### (ஆ) எம்.ஜி.ஆர். சமாதியின் முன்பு காலணிகளைப் பாதுகாக்க ஏற்பாடு

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்ன point of order சொல்லப் போகிறீர்கள்? சிக்கிரம் சொல்லுங்கள்.

*முற்பகல் 10-30*

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், செய்தி மற்றும் விளம்பரத் துறை மானியத்திலே பேசலாம் என்று இருந்தேன்; எனக்கு அனுமதி இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நினைத்த துறைகளில் பேசுவதற்கு அனுமதிக்கப்படவில்லை என்பதற்காக, இப்போது வந்து point of order கேட்க முடியாது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இது முக்கியமான பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்த முக்கியமான பிரச்சினைக்கும் அனுமதி கிடையாது, உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு வரியில் நான் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன சொல்லப்போகிறீர்கள்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினை. அதாவது, மெரினா கடற்கரையில் இருக்கின்ற..... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும். திரு. சுந்தரம், நீங்கள் என்னைப் பார்த்துப் பேச வேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெரினா கடற்கரையில் அறிஞர் அண்ணா சமாதி மற்றும் டாக்டர் எம்.ஜி.ஆர். சமாதி ஆகிய இரண்டைப் பொறுத்தவரையில், அறிஞர் அண்ணா சமாதியைப் பார்க்கப் போகின்றவர்கள், அங்கே செல்கின்றபோது, காலணிகளை எல்லாம் கழட்டிவிட்டுச் செல்கிறார்கள். அதுபோல ....

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே இருந்து, அவை முன்னவர் என்ற முறையில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், நினைத்த பிரச்சினையை நினைத்தபோதெல்லாம் இந்த அவையில் யாரும் எழுப்புவதை அனுமதிக்க முடியாது. அனுமதிக்கக் கூடாது என்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒழுங்குப் பிரச்சினை, சட்டமன்ற நடவடிக்கை குறித்து ஒழுங்குப் பிரச்சினை என்றால், இன்ன முறை தவறி இந்தப் பிரச்சினை நடைபெறுகிறது என்ற ஒன்றுக்குத்தான் எழுப்பலாமே தவிர, அவரவர்களுக்கு ஆர்வம் இருக்கிற பிரச்சினை பற்றி எழுப்ப தாங்கள் அனுமதிக்க வேண்டாம் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் கூறி முடித்துவிடுகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, எம்.ஜி.ஆர். சமாதிக்குச் செல்லும்போது, காலணிகள் போட்டுக் கொண்டு செல்கிறார்கள். அறிஞர் அண்ணா சமாதியில் இருப்பதுபோல, எம்.ஜி.ஆர். சமாதிக்கு முன்னாலே பாதுகாவலரை நியமித்து, காலணிகளை அங்கே கழட்டிவிட்டுச் செல்வதற்கு வழிவகை செய்ய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நீங்கள் சொல்லிவிட்டீர்கள். எனவே இப்போது உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் point of order-ஐச் சொல்லிவிட்டீர்கள், உட்காருங்கள்.

## 3. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல் பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. ப. ரங்கநாதன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நூற்று தொண்ணூற்று ஒன்பது முதல் இருநூற்று இரண்டாவது வரையிலான (பதினோராவது சட்டமன்றப் பேரவை) நான்கு அறிக்கைகளை பொதுக் கணக்குக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. ஆ. நடராசன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

***திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூறு முதல் தொண்ணூற்று மூன்றாவது வரையிலான (பதினோராவது சட்டமன்றப் பேரவை) நான்கு அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 4. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு விற்பனை வரி, கேளிக்கைகள் வரி, ஆடம்பர வசதி வரி (பூசல்களைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 1999 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "*1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி, கேளிக்கைகள் வரி, ஆடம்பர வசதி வரி (பூசல்களைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*"

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு விற்பனை வரி, கேளிக்கைகள் வரி, ஆடம்பர வசதி வரி (பூசல்களைத் தீர்வு செய்தல்) சட்ட முன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). தமிழ்நாடு விற்பனை வரி, கேளிக்கைகள் வரி, ஆடம்பர வசதி வரி (பூசல்களைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 1999. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி, கேளிக்கைகள் வரி, ஆடம்பர வசதி வரி (பூசல்களைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்*"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

*மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



## 4. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

### (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "*1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*"

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்) —*தொடர்ச்சி*

### (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்*"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

*மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.*

[1999 மே 17

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

### (இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "*1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*"

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*தொடர்ச்சி*

### (இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்*"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
*மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.*



1999 மே 17]

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

*முற்பகல் 10-35*

## 4. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

### (ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "*1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*"

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்) —*தொடர்ச்சி*

### (ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்*"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

### (உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்."

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்) —*தொடர்ச்சி*

### (உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

### (ஊ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்."

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*தொடர்ச்சி*

### (ஊ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

[1999 மே 17

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி. அருணா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (எ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்."

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (எ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்ட முன்வடிவுகள். (அறிமுகம் செய்தல்). 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.



1999 மே 17]

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி. அருணா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஏ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்."

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஏ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்*"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஐ) தமிழ்நாடு உணவகங்களிலும் தங்கும் விடுதிகளிலும் உள்ள ஆடம்பர வசதிகளின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "*1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்களிலும் தங்கும் விடுதிகளிலும் உள்ள ஆடம்பர வசதிகளின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*"



## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்) —தொடர்ச்சி

### (ஐ) தமிழ்நாடு உணவகங்களிலும் தங்கும் விடுதிகளிலும் உள்ள ஆடம்பர வசதிகளின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). *1999* ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்களிலும் தங்கும் விடுதிகளிலும் உள்ள ஆடம்பர வசதிகளின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்களிலும் தங்கும் விடுதிகளிலும் உள்ள ஆடம்பர வசதிகளின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்*"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஏ) தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவுச் சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, *1999* ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவுச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவுச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. Speaker Sir, இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்படுவதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சேபிக்கிறது.

### (ஓ) நிலம் கையகப்படுத்துதல் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 10-40

### (ஔ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்ற (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல். 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்ற (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1999), மாண்புமிகு கல்வி அமைச்சர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்ற (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1999)@ ஆயவுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றமானது ஏறத்தாழ 6 ஆண்டுகள் கழித்து 5 ஆண்டுகளுக்கான அறிக்கைகளை ஒன்றாக இன்றைக்கு அனுப்பி இருக்கிறது. இந்த ஆண்டு அறிக்கைகளைப் படித்துப் பார்க்கும்போது, எல்லாம் வெறும் பரிந்துரைகளாகதான் சொல்லப் பட்டிருக்கிறதேயொழிய, எதையெல்லாம் அமல்படுத்தி இருக்கிறார்கள் என்று பார்த்தால், எதையும் அமல்படுத்தியதாகத் தெரியவில்லை. ஏற்கெனவே கல்வித் துறையைச் செம்மைப்படுத்துவதற்காக Radhakrishnan Commission, A.L. Mudaliar Commission, Kothari Commission என்ற Commission-கள் நியமிக்கப்பட்டன. National Policy on Education, New Education Policy என்று இராஜிவ் காந்தி காலத்தில்கூட வந்ததுண்டு— அதைப்போலத்தான், தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் இருக்கிறதேயொழிய, இது எதையும் அரசுக்குப் பரிந்துரை செய்து, அதை அரசு அமல்படுத்தியதாகத் தெரியவில்லை.

@ 10-5-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



சான்றாக, ஆண்டுக்கு இரு முறை விடுமுறை விடவேண்டுமென்று அவர்கள் பரிந்துரை செய்து இருக்கிறார்கள். ஆனால் இன்னும்கூட அது பின்பற்றப்படவில்லை என்பதைத்தான் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல accountability வேண்டுமென்று அவர்களுடைய பரிந்துரையில் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் பல்கலைக்கழகங்களிலோ, கல்லூரிகளிலோ அது வலியுறுத்தப்பட்டதற்கான எந்தச் சான்றும் நமக்குத் தெரியவில்லை. இப்போது இருக்கிற பாடத் திட்டங்களை நவீனமயப்படுத்த வேண்டுமென்று, காலத்திற்கு ஏற்றவாறு செய்ய வேண்டுமென்று அவர்கள் சொல்லி இருந்தாலும்கூட, அரசு, அரசு உதவி பெறும் கல்லூரிகளிலே இன்னும் பழைய பாடத் திட்டங்கள் மட்டுமே இருப்பதன் காரணமாக, மாணவர்கள் உதவி பெறாத கல்லூரிகளை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருக்கிறார்கள். அரசு, அரசு உதவி பெறும் கல்லூரிகளிலே கூட்டம் குறைந்து வருகிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல் தன்னாட்சிக் கல்லூரிகளை நிறைய தொடங்க வேண்டும் என்று பரிந்துரை செய்ததாகச் சொல்லி இருக்கிறார்கள் அவை தொடங்கப்பட்டதாகத் தெரியவில்லை. அதுமட்டுமல்லாமல் தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் கலைக் கல்லூரிகள் என்று எடுத்துக்கொண்டால் 366 கலைக் கல்லூரிகள் ஒட்டுமொத்தமாக இருக்கின்றன. அதிலே 60 அரசு கலைக் கல்லூரிகள்; 133 உதவி பெறும் கல்லூரிகள்; 173 உதவி பெறாத கல்லூரிகள் இருக்கின்றன. ஆக எப்படிப் பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றக் குழுவிலே தனியார் கல்லூரிகளுக்குப் பிரதிநிதித்துவம் இல்லையோ, அதேபோல இந்த மாநில உயர்கல்வி மன்றத்திலேயும் அதற்குரிய பிரதிநிதித்துவம் இல்லாமல் இருப்பதை என்னாலே பார்க்க முடிகிறது. தனியார் கல்லூரிகள் என்று சொன்னால், ஒன்று சுயநிதிக் கல்லூரி; இன்னொன்று உதவிபெறும் கல்லூரி. எனவே, இவ்வகைக் கல்லூரிக்கு ஒருவராக, ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலிருந்தும் அந்த மன்றத்திலே அவர்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், கல்லூரி பணி நாட்களை உயர்த்த வேண்டுமென்ற ஒரு நல்ல எண்ணம் இந்த மன்றத்திற்கு இருக்கிறது. அது எண்ண அளவிலே இருக்கிறதேயொழிய அதைச் செயல்படுத்தியதாகத் தெரியவில்லை. கல்லூரி நாட்கள் குறைந்தது 180 நாட்களாக இருந்து தீரவேண்டுமென்று பல்கலைக்கழக மானியக் குழு சொல்கிறது. இருந்தாலும்கூட அந்தக் காலகட்டங்களிலே கல்லூரி ஆசிரியர்கள் வேறு பணிக்குச் சென்றுவிடுவதன் காரணமாக 120 நாட்கள் மட்டுமே அவர்கள் கல்லூரிகளிலே பணியாற்றுகிற நிலைமை

இருந்து வருவதைப் பார்க்கிறோம். ஆகையினால் இந்த மன்றம், தன்னுடைய பரிந்துரையை அரசுக்குச் சொல்லி கல்லூரிகளிலே 180 நாட்கள் ஆசிரியர்கள் பணியாற்ற வழி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

அடுத்தபடியாக நீண்டநாட்களுக்கு முன்பாக 'அரசு கலைக் கல்லூரிகளிலேயும், உதவி பெறும் கலைக் கல்லூரிகளிலேயும் விதிக்கப்பட்டிருக்கின்ற சில கட்டணங்கள். குறிப்பாக, சோதனைக்கூடக் கட்டணம் பட்டப் படிப்பிற்கு 300 ரூபாய். முதுகலைப் படிப்பிற்கு 750 ரூபாய். நூலகத்திற்கு 30 ரூபாய். இது நீண்டகாலத்திற்கு முன்பாக விதிக்கப்பட்ட கட்டணங்கள். இந்தக் கட்டணங்களை மறுபரிசீலனை செய்து உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு மீண்டும் என்னுடைய கோரிக்கையாக அந்த உயர்கல்வி மன்றத்திலே—சுயநிதிக் கல்லூரிகளிலேயும் உதவி பெறும் கல்லூரிகளிலேயும் உள்ள சிறந்த, படித்த கல்வி சிந்தனையாளர்களை, நிருவாகிகளை இந்த மாமன்றத்திலே உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும் என்பதை வலியுறுத்தி என் உரையை நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது திருத்தச் சட்டம் ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக வந்திருக்கின்றது. தமிழ்நாடு உயர் கல்வி ஆய்வு மன்றத்தில் துணைத் தலைவரோ, செயலாளரோ முன்னாள் பல்கலைக்கழகத் துணை வேந்தர்களாக அமைந்து, உறுப்பினர்களாக வேறு சில துணை வேந்தர்களோ, கல்வித் துறையிலே மிக முக்கியமான இடத்தை வகித்தவர்கள் இடம் பெற்று, மாதம் ஒரு முறை அல்லது இரண்டு திங்களுக்கு ஒரு முறையாவது கட்டாயமாகக் கூடி, கல்லூரி, பல்கலைக் கழகங்கள் இவற்றில் எழுகிற பல்வேறு பிரச்சினைகளை ஆய்வு செய்து கருத்துரைகளை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி ஆய்வு செய்து வழங்கப்படுகிற அந்தக் கருத்துரைகளை துணை வேந்தர்களும், பல்கலைக் கழக அமைப்புகளும் மறுபடியும் அவரவர்களுடைய குழுக்களிலே வைத்து, உரிய முறையிலே சில மாற்றங்களை மெல்ல மெல்லக் கொண்டு வந்து கொண்டிருக்கின்றனர்.



இந்தத் திருத்தத்தினைப் பொறுத்தவரையில் இந்த ஆய்வுக் குழுக் கூட்டத்தில் பல்கலைக்கழகத்தினுடைய வேந்தராக இருப்பவர்களுடைய பிரதிநிதியாக ஒருவர் இடம் பெற வேண்டும் என்ற ஒரு கருத்து ஏற்பட்டு பல்கலைக்கழக வேந்தரும், தமிழ்நாடு ஆளுநருமாக இருப்பவருக்கு ஒரு நாளைக்கு 2, 3 மணி நேரம் நடைபெறுகிற இந்தக் குழுக் கூட்டத்தில், பல்கலைக்கழகக் கல்வி, உயர் கல்வியைப் பற்றி நடைபெறுகிற ஆய்வுகளை உடனுக்குடன் தெரிவிப்பதற்கு வாய்ப்பாக ஒருவர் இடம் பெற வேண்டுமென்ற கருத்து துணை வேந்தர்களுடைய கூட்டத்திலே இடம் பெற்று, அதன் காரணமாக, இதிலே, வேந்தராக இருக்கிற ஆளுநருடைய செயலாளர் 'Ex-Officio'-ஆக இந்தக் குழுவிலே இடம் பெற வேண்டுமென்பதுதான் இந்தத் திருத்தம். இதிலே ஒன்றும், யாருக்கும் கருத்து மாறுபாடு இருக்க அவசியமில்லை. இந்தக் குழு ஆண்டறிக்கையை இப்போது அனுப்பியதற்குக் காரணம், இடையிலே அவர்கள் பல பிரச்சினைகள குறித்து பல்கலைக் கழகங்களோடு தொடர்பு கொண்டு, அவற்றில் முடிவுக்கு வராத நிலைமை எல்லாம் இருந்தது. சில முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட வேண்டுமென்ற காரணத்தால் அறிக்கை வரவில்லை. ஏனென்றால், வெறும் வரவு-செலவு அறிக்கையாகத்தான் அந்த அறிக்கை இருக்கக்கூடிய நிலை இருந்தது.

கல்லூரிகளினுடைய பணி நாட்களை அதிகப்படுத்த வேண்டும், இல்லையானாலும் குறிப்பிட்ட நாட்களுக்குக் குறைந்து விடக்கூடாது, அதற்கு தொடக்கத்திலேயிருந்து ஆண்டு முடியும் வரையில் இடையில் 2 முறை வருகிற விடுமுறைகளை ஒரேயொரு விடுமுறையாக வைத்து, இரண்டு பருவங்களாக, term-ஆக கல்லூரி நடத்தப்படக்கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று விரும்பினார்கள். அது பல்கலைக் கழக அளவிலேயும், 'Autonomous Colleges'— தன்னாட்சி உள்ள கல்லூரிகள் அளவிலேயும் மறுபடியும் தீர்மானிக்க வேண்டிய ஒன்றாக இருக்கிறது. அதன் மூலமாக அதிக அளவிற்கு, மாணவர்களுக்குப் பயிற்சி தர முடியுமென்று எதிர்பார்க்கிறார்கள். அப்படி பெருமளவிற்கு ஆலோசனையாக வழங்குகிற கருத்தைத்தான் அந்த நிறுவனங்கள்— பல்கலைக் கழகமோ, தன்னாட்சிக் கல்லூரிகளோ பரிசீலித்து ஏற்றுக்கொள்ள வேண்டும். மெல்ல, மெல்ல ஏற்றுக்கொள்ள முற்படுவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். மற்றொன்று. அதிக தன்னாட்சிக் கல்லூரிகள் வேண்டுமென்பதை அரசாங்கம் ஆதரிக்கிறது. ஏறத்தாழ தமிழ்நாட்டிலேதான் 'Autonomous Colleges' எண்ணிக்கை அதிகம். இத்தகைய கல்லூரிகள் அதிக எண்ணிக்கையிலே வருவது

நல்லது என்ற ஒரு கருத்தைப் பொதுவாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆனால் தன்னாட்சிக் கல்லூரிகள் அதிகமாகிற காரணத்தால் சில குறைபாடுகள் ஏற்படுகின்றன என்ற ஒரு கருத்தும் இன்னொரு பக்கம் நிலவுகிறது. அதிலே ஆசிரியர்களாக இருப்பவர்களே பலபேர் தன்னாட்சிக் கல்லூரியாக வருவதை விரும்பாத, ஏற்காத ஒரு மனநிலையில் இருக்கின்றார்கள். ஒன்று அவர்களுடைய பொறுப்பு அதிகமாகிறது. அந்தப் பொறுப்பை அதிகப்படுத்திக்கொள்ள சில ஆசிரியர்கள் விரும்பவில்லை. இருந்தாலும்கூட, ஆசிரியர்கள் அதிகமாகப் பொறுப்பை உணர்ந்து பணியாற்றினால்தான் கல்வித் தரம் உயரும் என்பதில் ஐயமில்லை.

*முற்பகல் 10-50*

அதேபோல, பாடத் திட்டத்திலே சில மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று முறையில் ஆங்கில மொழியில் பெறுகிற கல்வி அன்றாட நடைமுறையில் செயல்படக்கூடிய ஆங்கில மொழி அறிவை வளர்ப்பதாக இருக்க வேண்டுமென்ற கருத்து, செயல்பாட்டு ஆங்கிலத்தை அதிகமாக அந்த மாணவர்கள் பெற வேண்டுமென்ற ஒரு கருத்து. மேலும், வெறும் இலக்கிய அறிவு என்ற நோக்கத்தைவிட, மொழி அறிவு என்ற நோக்கம் அதிகமாக இருக்க வேண்டும், அதற்கேற்ற கல்வி வழங்க வேண்டுமென்ற கருத்து இருக்கிறது. வேறுபல சீர்திருத்தங்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொன்னதைப்போல, பல்கலைக்கழகக் குழுக்களில் உதவி பெறாத கல்லூரிகளின் (Self-Finance Colleges) பிரதிநிதிகளும் இடம்பெற வேண்டும் என்ற ஒரு எண்ணம் இருக்கிறது. அதற்கான திருத்தங்கள் பல்கலைக்கழகச் சட்டத்திலேதான் கொண்டுவரப்பட வேண்டும். அதில் வேறுபல சீர்திருத்தங்கள், மாற்றங்கள் தெரிவிக்கப்படுகிற காரணத்தால் அதைப்பற்றி இன்னும்கூட முழு அளவுக்கு முடிவுக்கு வர முடியவில்லை. விரைவில் தகுந்த முடிவு எடுக்க முயற்சிக்கப்படும்

தமிழ்நாடு உயர்கல்வி ஆய்வு மன்றம் நம்முடைய தமிழ்நாட்டிலே அமைக்கப்பட்டதற்குப் பின்னர் பல்வேறு கருத்துக்கள் அவர்களால் எடுத்துவைக்கப்பட்டுப் பல்கலைக்கழகத்திலே இடம் பெற்றிருக்கின்றன என்பது உண்மை. அதைவிட முக்கியமான ஒன்று, Single window system என்ற மாணவர்கள் சேர்க்கை முறைக்கு தகுந்த ஆலோசனை வழங்கியவர்கள், இந்த உயர்கல்வி ஆய்வு மன்றத்தினுடைய துணைத் தலைவர் டாக்டர் அனந்தகிருஷ்ணன் அவர்களும், அவர்களைச் சேர்ந்தவர்களும் ஆவர். இது நம்முடைய முதலமைச்சர் அவர்களால்





உடனடியாகப் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட காரணத்தால், இன்றைக்கு இந்தியாவிலேயே நாம் ஏற்படுத்தியிருக்கிற ஒற்றைப்பலகணி மாணவர் சேர்க்கை முறை என்பது மாணவர்களுக்கு நல்ல வாய்ப்பு அளிப்பதாக அமைந்து இருக்கிறது. குறைகள் மிகப் பெருமளவுக்குக் குறைந்திருக்கின்றன. மாணவர்களிடத்திலே விருப்பப்படி கட்டணம் பெறுகின்ற வாய்ப்பைக் குறைத்திருக்கின்றோம். ஏழை மாணவர்கள் பயன் பெற்றிருக்கின்றார்கள். இன்னொரு பக்கம் கிராமப்புற மாணவர்கள் பயன் பெற்றிருக்கின்றார்கள். எனவே இப்படிப்பட்ட சில நல்ல காரியங்களுக்கு இந்த உயர்கல்வி ஆய்வு மன்றம் உறுதுணையாக இருக்கிறது என்பதைக் கூறி, இந்தத் திருத்தம் ஒரு குறிப்பிட்ட அளவிலே வருகிற திருத்தம் என்ற காரணத்தால், இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்ற (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/1999), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/1999)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 29-4-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தச் சட்டமுன்வடிவும், அடுத்து வரும் 3 சட்டமுன்வடிவுகளும் ஊராட்சிகள் தொடர்பானவை. எனவே கருத்துக்களைக் கூற விரும்பும் மாண்புமிகு உறுப்பினர்கள், இவை அனைத்துக்கும் சேர்த்து தங்கள் கருத்துக்களைக் கூறலாம். சட்டமுன்வடிவின்மீது கருத்துக்கள் கூறுவதற்கு வாய்ப்புத் தரப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் யாராவது பேச விரும்பினால் பேசலாம். (குறுக்கீடு) திரு. சி. ஞானசேகரன்.

முற்பகல் 10-55

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசால் இப்போது கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய 16 ஆம் எண்ணுள்ள சட்டமுன்வடிவை தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக நாங்கள் எதிர்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஏற்கெனவே 1994 ஆம் ஆண்டு, ராஜீவ் காந்தி கொண்டு வந்த பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின் அடிப்படையில் ஒரு சட்டம் இந்த மாமன்றத்திலே இயற்றப்பட்டது. அந்தச் சட்டத்தில் ஏற்கெனவே விதி 206-ன்படி பஞ்சாயத்து Union Vice Chairman-ஐ நீக்குவதற்கும், அதேபோல விதி 207-ன்படி பஞ்சாயத்து Union Chairman-ஐ நீக்குவதற்கும் விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல விதி 209-லே Vice Chairman-ஐ நீக்குவதற்கும, விதி 201-லே District Chairman-ஐ நீக்குவதற்கும் வழிமுறைகள் ஏற்கெனவே உள்ளன. 1994 ஆம் ஆண்டு சட்டத்தில் Removal of Chairman, Removal of Vice Chairman என்ற விதிகள் ஏற்கெனவே—உருவாக்கப்பட்டு அதற்கான பிரிவுகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த அரசு ஏற்கெனவே தேர்தல் வாக்குறுதியிலே சொன்னபடி உடனடியாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு எல்லாம் தேர்தல் நடத்துவோம் என்று சொல்லி, நடத்தி முடித்து கிட்டத்தட்ட 2½ ஆண்டுகாலம் ஆகிவிட்டது. இந்தச் சட்டத் திருத்தத்தை ஏற்கெனவே கொண்டுவந்ததற்குப் பின்னால் இதுமாதிரி பிரச்சினைகள் வருகின்றபோது அங்கே இருக்கக்கூடிய தலைவர்களையோ, துணைத் தலைவர்களையோ நீக்கக்கூடிய வாய்ப்புகள், வழிமுறைகள் ஏற்கெனவே இருந்து கொண்டிருக்கின்ற காரணத்தால் புதிதாக, 2½ ஆண்டுகள் கழித்து இந்த அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருப்பதை நாங்கள் கடுமையாக எதிர்க்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

தேர்தல் கால கூட்டணியின்போது தமிழ் மாநில காங்கிரசுக்கு 36 சதவிகிதம் என்று சீட்டுகளை வகுக்கின்றபோதுகூட, எந்தவிதமான நம்பிக்கை இல்லாத் தீர்மானமும் இதிலே கட்டாயமாக வராது. இருக்கக்கூடிய காலங்களில் ஏற்கெனவே தவறு செய்யக்கூடிய, குற்றம் சாட்டப்பட்டிருக்கக்கூடிய Chairman-களை, Vice Chairman-களை நீக்குவதற்கு வழிவகை இருக்கின்றது என்கின்ற காரணத்தாலே, இப்போது மிகவும் சுமூகமான முறையிலே எல்லா இடங்களிலும் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் இந்தப் பிரச்சினையை எழுப்பியபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோபத்தோடு எழுந்து உள்நோக்கத்தோடு இந்தச் சட்டம் கொண்டுவரப்படவில்லை, அப்படிப்பட்ட அற்ப புத்தி எனக்குக் கிடையாது என்று சொன்னார்கள். முதலமைசசர் அவர்களைப் பொறுத்தவரையில் எங்களுக்கு எந்தவிதமான ஐயமும் இல்லை, சந்தேகமும் இல்லை; உள்நோக்கம் அவருக்கு இருப்பதாக நாங்கள் சொல்லவில்லை. ஆனால் இந்தச் சட்டத்தை நீங்கள் கொண்டுவருகின்றபோது, குறிப்பாக எங்களுடைய மாவட்டத்தில், ஆலங்காயம் பஞ்சாயத்து யூனியனை எடுத்துக்கொண்டால், அங்கே ஆளுங்கட்சியைச் சார்ந்த இரண்டு நபர்களுக்குள்ளே பலத்த போட்டி ஏற்பட்டு கடந்த வாரம் அடிதடியில் முடிந்து, கிட்டத்தட்ட 3,4 வழக்குகள் பதிவாகியிருக்கின்றன. உங்களுடைய கட்சிக்காரர்களே குதிரை வியாபாரத்திற்குத் தயாராகி, அந்த பஞ்சாயத்து ஒன்றிய Chairman பதவியைப் பிடிக்க வேண்டுமென்று அவர்களே போர்க்களத்தில் குதித்து இருக்கிறார்கள். என்னுடைய சொந்த கிராமமான வெள்ளக்குட்டை கிராமத்தில் இருக்கக்கூடிய, 5,000 ஓட்டுக்களில் வந்திருக்கக்கூடிய உறுப்பினர் வெங்கடாசலம் என்பவரை, இப்போது Chairman-ஆக இருக்கக்கூடியவர் "என் மீது நீ, Removal of Chiarman-க்காக, இருப்பவர்களை எல்லாம் சேர்த்துக்கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே "நீ மனுவைக் கொடுத்திருக்கிறாய் என்று சொல்லி, எதிர்தரப்பினரை அடிக்க இருநா[illegible] மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, இப்போது Case and Counter என்று இரண்டுபேர் மேலேயும் வழக்கு பதிவு செய்யப்பட்டு, Chairman தரப்பார் இப்போது விடுதலையாகி வந்திருக்கிறார்கள். அதை எதிர்க்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர் தரப்பிலே இருப்பவர்கள் எல்லாம் இன்னும் மருத்துவமனையிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். எதற்காக இதைக் கூறுகிறேன் என்றால். . . (குறுக்கீடு)





*முற்பகல் 11-00*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகையில் தலையிடுவதற்கு வருந்துகிறேன். ஒரேயொரு விஷயத்தைச் சொல்கிறேன். இதற்கு முன்னாலே, 2½ ஆண்டுகாலம் நம்முடைய ஆட்சி நடைபெறுகிறபோது, அரசே அதை எடுத்துக்கொள்ளலாம், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்ற விதி இருக்கிறது அல்லவா, அந்த விதியின்கீழ் இதுபோன்ற பிரச்சினை ஏற்பட்டு, அதற்காக ஆள்தூக்கும் படலம் வந்து, அது Criminal Case-ஆகி உயர் நீதிமன்றம் வரை நடவடிக்கையில் வந்திருப்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? தெரியுமா, இல்லை, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுதே அவரை அமைச்சராக்கி விட்டீர்களா?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு வினாவை எழுப்பி இருக்கிறார்கள். இந்த முறை வந்த பின்னாலேயே, Removal of Chairman என்ற, 207-வது பிரிவின்கீழே முதன்முதலாக, மனுவைக் கொடுத்ததே, வேலூர் ஊராட்சி ஒன்றியத் தலைவரைப் பொறுத்த அளவிலேதான நான்தான் முதன்முதலிலே, என்னுடைய தொகுதியிலே ஏற்பட்ட நிகழ்வு குறித்து இந்த அரசாங்கத்திற்கு ஒரு மனுவைக் கொடுத்தேன். அதாவது திராவிட முன்னேற்றக் கழக மாவட்டச் செயலாளருக்கும், எங்களுக்கும் இடையே ஏற்பட்டிருக்கிற உடன்படிக்கையிலே, வேலூர் Panchayat Union Chairman பதவி தமிழ் மாநில காங்கிரசுக்கு ஒதுக்கப்பட்டது. ஆனால் அங்கே இருக்கக்கூடிய மாவட்டச் செயலாளர், அதை தனக்கு என்று வைத்துக்கொண்டு, அவர்களே ஆட்களைப் போட்டுக்கொண்ட காரணத்தினாலே, நாங்கள் பழிவாங்கப்பட்டோம். தமிழ் மாநில காங்கிரஸ் இல்லாமல், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அங்கே வந்தார் இருந்தாலும், அமைதியாக நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, திடீரென்று அவர்மீது பல குற்றச்சாட்டுகள், முதல் மனுவே — வேலூர் தலைவர் மீதுதான் வந்தது. அதில் அப்பொழுது எல்லோரும் கையெழுத்துப்போட்டு, அரசுக்கு அனுப்பினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த Council உறுப்பினர்கள்கூட அதிலே கையெழுத்து போட்டார்கள்; அதிலே

பணப்பரிமாற்றம் எல்லாம் ஏற்பட்டு, பிறகு அவரை விலைக்கு வாங்கிய செய்தி அரசுக்கு வந்து அப்படியே நின்றுவிட்டது. இதை எதற்காகக் கூறுகிறேன் என்று சொன்னால், ஏற்கெனவே இருக்கக்கூடிய விதிமுறைகளிலே, சுமூகமாகப் போய்க் கொண்டிருக்கிறபோதே இப்படிப்பட்ட பிரச்சினைகள் வருகிறபோது, இப்பொழுது திடீரென்று ஒரு சட்டத்தை இந்த அரசு கொண்டுவந்திருக்கிறது. ஏற்கெனவே ஒரு சட்டத்தை வைத்து நாம் தேர்தலை நடத்திவிட்டோம். 1994 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்தை வைத்துத்தான் தேர்தலை நடத்தினோம். அந்தத் தேர்தலை நம்பித்தான் எல்லோரும் தேர்தல் களத்திலே குதித்து, இப்போது வெற்றிபெற்று அவர்கள் ஆங்காங்கே Panchayat Union Chairman-களாக இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், 2-1/2 ஆண்டுகாலம் கழித்து, திடீரென்று அரசு இப்படிப்பட்ட ஒரு சட்டமுன்வடிவைக் கொண்டுவந்து இருக்கிறது. ஆளுங்கட்சியிலே இருக்கக்கூடிய முதல்வர் அவர்களுக்கு அந்த எண்ணம் இல்லாவிட்டாலும்கூட, ஆங்காங்கே இருப்பவர்களுக்கு இப்போது அந்த எண்ணம் வந்துவிடுகிறது. அப்படி வருகிறபோது, முதல்வர் அவர்களே தடுத்து நிறுத்தினாலும் முடியாமல் போய்விடும். இந்த குதிரை வியாபாரம் என்பது, மிக வேகமாக நடக்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பொறுத்த வரையில் அங்கே கோடிக்கணக்கிலே பரிமாற்றம் அங்கே நடக்கிறது என்று சொன்னால், இங்கே ஆயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில் பரிமாற்றம் நடந்து, யாரெல்லாம் இன்று சாராயத்தை விற்று பணக்காரர்களாக ஆகியிருக்கிறார்களோ அல்லது சந்தனக் கட்டையை வெட்டி பணக்காரர்களாக ஆகியிருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் Chairman ஆகிவிடலாம் என்ற எண்ணம் வந்து, அவர்கள் குதிரை வியாபாரத்திற்குத் தயாராகி, தமிழ்நாட்டில் பல இடங்களிலே அடிதடிகளும், ஆங்காங்கே சட்டம்-ஒழுங்கு கெடக்கூடிய நிலைகளெல்லாம் வரும் என்பதை உணர்ந்துதான் நாங்கள் அன்போடு, முதல்வர் அவர்களுக்கும், இந்த அரசுக்கும தெரிவித்துக்கொள்வதெல்லாம், ஏற்கெனவே இருக்கிற சட்டப்படியே நீங்கள், வருகிற இரண்டு ஆண்டுகளுக்கு விட்டுவிடுங்கள். ஏற்கெனவே நான் இந்த மாமன்றத்திலே சொன்னதுபோல, Panchayat Union Chairman-க்கும் District Chairman-க்கும் நேரடித் தேர்தலைக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையிலே ஒரு தீர்மானத்தைப் போட்டு — நாம் மத்திய அரசை வலியுறுத்தி அதற்கான சட்டத் திருத்தங்களையெல்லாம் கொண்டுவந்து, பிறகு — நீங்கள் ஒரு சட்டத்தை இயற்றிவிட்டு, அதற்குத் தகுந்தாற்போல



உறுப்பினர்களையும், தலைவரையும் தேர்ந்தெடுப்பீர்களென்று சொன்னால், இந்தப் பிரச்சினைக்கு இடமே இல்லாமல் போய்விடும். யாரும் எந்தக் குறையும் சொல்ல முடியாது. ஒரு சட்டத்தை வைத்து தேர்தலை நடத்திவிட்ட பிறகு, அதை நம்பி சிலபேர், Chairman-களாகவும், Councillor-களாகவும் வந்துவிட்ட பிறகு நீங்கள் அதை மாற்றுவது என்பது, இதனுடைய அடித்தளத்தைப் பாதிக்கும் என்ற காரணத்தினாலேதான், இந்த அரசுக்கு . . .

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பஞ்சாயத்தினுடைய பெருந்தலைவரையும், மாவட்டத் தலைவர்களையும் நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். மறைமுகத் தேர்தலின் மூலம்தான் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று அரசியல் சட்டமே சொல்கிறதே, அதை எப்படி நாம் திருத்த முடியும்? திருத்த வேண்டுமென்றால் ஒரு மாநில அரசு தீர்மானம் போட்டுக் கொண்டுவர முடியாது. மேற்கு வங்காளத்திலே மூன்று அடுக்கு முறையைத்தான் ஆதரிக்கிறார்கள். மகாராஷ்டிரத்திலே மூன்று அடுக்கு முறையைத்தான் ஆதரிக்கிறார்கள். ஆகவே இதற்கு ஒப்புதல் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதே நடைமுறையில் நடக்கக் கூடியதல்ல.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்வதெல்லாம் — இந்தச் சட்டம் வந்ததே, அடிப்படையிலே பஞ்சாயத்து ராஜ் சட்டம் ராஜீவ் காந்தி அவர்களால் கொண்டுவரப்பட்டு, பிறகு நரசிம்மராவ் அவர்கள் காலத்திலே ஏற்கப்பட்டு, பிறகு இங்கே கடந்த கால ஜெயலலிதா ஆட்சிக் காலத்திலே ஏற்கப்பட்டது — சட்டத்தை நாம் திருத்திக் கொள்ள முடியும். இது முடியாதது ஒன்றும் அல்ல. அரசமைப்புச் சட்டத்தையே நாம் பலமுறை திருத்திவிட்ட பிறகு, இதை நாம் எளிதாகத் திருத்த முடியும். இதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜீவ் காந்தி அவர்களால் இந்தப் பஞ்சாயத்து . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த விவாதம் தேவையில்லாதது. உட்காருங்கள். உறுப்பினர் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட இந்த அவையிலே ஒரு தீர்மானத்தைப்போட்டு, மத்திய அரசுக்கு நாம் எழுதி, நிச்சயமாக இதைப் பெறலாம் என்றுகூடச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி இருக்கிறபோது, நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அது முடியாது என்று கூறுகிறார்கள். நாம் முயற்சி செய்தால், நிச்சயமாக அதைச் சாதிக்க முடியும். ஆகவேதான் நான் மீண்டும் இந்த அரசை வலியுறுத்துகிறேன், நேரடித் தேர்தலை நீங்கள் கொண்டு வருவதற்கு....

முற்பகல் *11-05*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** அப்படி நான் சொல்லவில்லை. இயலாது என்று சொல்கிறேன். இன்றைக்கு இருக்கின்ற அரசியல் சூழ்நிலையில், ஏற்கெனவே இந்தச் சட்டத்திருத்தம் Select Committee-க்குப் போய், பல மாநில அரசுகளால் பரிசீலிக்கப்பட்டு, இந்த மூன்று அடுக்கு முறை ஏற்கப்பட்டிருக்கிறது. நமக்கு அதிலே உடன்பாடு இல்லை. உடன்பாடு இல்லை என்பதை ஏற்கெனவே, இந்த அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. அதற்குப் பிறகு இது நிறைவேறியிருக்கிறது. எனவே மீண்டும் நேரடித் தேர்தலைக் கொண்டு வரமுடியும் என்று நம்முடைய உறுப்பினருக்கு ஆசையாக இருக்கலாமே தவிர, எளிதில் நடக்கக்கூடிய காரியமல்ல என்றுதான் நான் சொல்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் மத்தியிலே வலுவான ஆட்சி வராது என்ற கற்பனையிலே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். வரக்கூடிய தேர்தலிலே ஒரு வலுவான, நிலையான ஓர் ஆட்சி நிச்சயமாகப் பாராளுமன்றத்திலே அமைந்து, இதுபோன்ற சட்டத்தை நிச்சயமாக (குறுக்கீடுகள்) ஆளுங்கட்சி நண்பர்கள் ஏதோ அவர்கள் தரப்பில் ஆரவாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். நாங்கள் இருக்கக்கூடிய பகுதியிலே நிச்சயமாக அது வரும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. (குறுக்கீடுகள்) ஆனால் மதவாத எதிர்ப்பு, ஊழல் எதிர்ப்பு என்கின்ற இரண்டு கொள்கைகளையும் நாங்கள் ஏந்தி எங்களுடைய பயணத்தை மிகச் சிறப்பாக நடத்திக் கொண்டு வருகின்ற நேரத்தில் வெற்றி நிச்சயமாக தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, இந்திய நாட்டிலே அது நிச்சயமாக....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இந்தச் சட்டமுன்வடிவிற்கு வாருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இப்போது நீங்கள் சிரித்தாலும் கூட....



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. யாரும் சிரிக்கவில்லை. நீங்கள் சட்டமுன்வடிவிற்கு வாருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய கருத்தாக தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி சார்பாக வலியுறுத்துவதெல்லாம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த அவையிலே தீர்மானத்தைக் கொண்டு வந்து, மத்திய அரசுக்கு எழுதி, அங்கே ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து, அதன் மூலம் நேரடித் தேர்தலை Panchayat Union Chairman-க்கும் District Chairman-க்கும் கொண்டு வருவதுதான் சாலப் பொருத்தமான ஒன்றாக இருக்கும். இந்தச் சட்டத் திருத்தம் எல்லாம் தேவையற்றது. இப்போதைக்கு நீங்கள் அதைக் கைவிடுவது நல்லது என்ற கருத்தை இந்த இடத்திலே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகத்தான் நம்முடைய ஆலங்காயத்திலே நடந்த நிகழ்ச்சியை நான் இங்கே சொன்னேன். இது பல இடங்களிலே நடக்கும். ஏனென்று சொன்னால், இப்போது எந்தவிதமான பிரச்சினைகளும் கடுமையாக வந்துவிடவில்லை. இப்போது இரண்டரை ஆண்டு காலமாக மிகச் சுமுகமாக நடந்து கொண்டிருக்கிறது. அவர்கள் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்கள்— அதிகாரிகளுக்குப் போய், இந்த அதிகாரத்தைக் கொடுக்கலாமா? மாவட்ட ஆட்சித் தலைவர் இங்கே ஓர் அறிக்கையை அனுப்பி, பிறகு இந்த அரசு அவர்களை நீக்க வேண்டுமென்று சொல்வதென்பது, அதிகாரிகள் கையிலே போய் கொடுக்கக்கூடிய நிலை இதை மாற்றி ஜனநாயக முறைப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு அதிகாரத்தைக் கொடுக்கலாம் என்ற ஒரு கருத்தை இங்கே மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் போன்றவர்கள் எல்லாம் சொல்லக்கூடும்; ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்கள் இங்கே சொல்லக்கூடும். நேற்றைக்குக்கூட, சன் டி.வி. நடத்திய கேள்வி நேர விவாதத்திலே சட்டத் துறை அமைச்சரும் கலந்துகொண்டு சொல்கிறபோது அரசுக்கு அந்த அதிகாரம் எதற்கு என்று சொன்னார்கள். அரசு ஒருவேளை செயல்படாமல் இருந்துவிட்டால், அந்த மனுவை வாங்கி வைத்துக்கொண்டிருந்தால், பிறகு என்னவாகும் என்றெல்லாம் கேட்டார்கள். இந்த அரசின்மீது இப்பொழுது எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய R.D.O. Panchayat Union Chairman குறித்து ஏதாவது குறை அல்லது குற்றச்சாட்டு அல்லது தவறு குறித்து விசாரணை செய்து, அதுபற்றிய அறிக்கையை அரசுக்கு அனுப்பினால் அரசு அதனை நிச்சயமாகப் பரிசீலித்து தகுந்த நடவடிக்கை எடுக்கும்

என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. அதேபோல District Chairman-ஐப் பொறுத்தளவில் மாவட்ட ஆட்சித் தலைவரோ அல்லது அவர்கள் நியமனம் செய்யும் அதிகாரிகளோ, விசாரித்து, அதுகுறித்து இந்த அரசுக்கு அறிக்கை அனுப்பினால் நிச்சயமாக அதனைப் பரிசீலித்து அவர்களை நீக்கக்கூடிய அதிகாரம் அரசின் கையிலே இருக்கிறது. நேர்மையாக, எந்தவிதமான உள்நோக்கம் அல்லது பழி வாங்குகிற எண்ணம் இல்லாமல், நேர்மையான முறையிலே நடவடிக்கை எடுப்பீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. ஆகவே இந்த அரசை நாங்கள் சந்தேகப்படவில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு இந்த அதிகாரத்தை நாம் கொடுத்துவிட வேண்டுமா என்றுகூட, ஒரு கட்டத்திலே பேசுகின்றபோது, அவர்களுக்கு தகுந்த அனுபவம் இல்லை, அங்கே இருக்கக்கூடியவர்கள், இப்போது கீழ்நிலையில் இருக்கக்கூடியவர்களெல்லாம் — பணத்தை யாரெல்லாம் கையில் வைத்துக்கொண்டிருக்கிறார்களோ அவர்கள் எல்லாம் முறைகேடான முறையிலே, திடீரென்று Chairman-களாக வந்துவிட வேண்டும் என்றும், எப்படியாவது Chairman seat-லே உட்கார்ந்து விட வேண்டுமென்றும் சொல்லிக் கொண்டிருக்கின்ற காரணத்தால், பணிவன்போடு மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன் — மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, உங்களுக்கு உள்நோக்கம் இருக்கிறது என்று நாங்கள் நிச்சயமாகச் சொல்லவில்லை — ஆங்காங்கு இருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கு அந்த எண்ணம் வந்துவிடும்; அப்படிப்பட்ட ஒரு குதிரை வியாபாரத்தை, அந்தப் போட்டியை நாம் எல்லா ஒன்றியங்களிலும் தொடங்கிவிட வேண்டாம் என்று நான் தெரிவித்து, இந்தச் சட்டத்தை தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக நாங்கள் கடுமையாக எதிர்க்கின்றோம். ஆகவே இந்த அரசு, இந்த எண்ணத்தைக் கைவிட்டு விட்டு நேரடித் தேர்தலுக்கு வழிவகை செய்வதோடு இப்போதைக்கு சட்டத் திருத்தத்தைக் கைவிடுங்கள் என்று பணிவன்போடு கேட்டு, இந்தச் சட்டமுன்வடிவை கடுமையாக எதிர்த்து அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் *11-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே முன்மொழியப்பட்டிருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்கள் மற்றும் மாவட்டத் தலைவர்களைத் தேர்ந்தெடுத்தவர்கள், தேர்ந்தெடுத்த நபர் தங்கள் நம்பிக்கைக்கு உத்தரவாதமாக நடந்துகொள்ளவில்லை என்று அறிகிறபோது, அவர்களைத் திரும்பப்



பெறுகிற ஜனநாயக ரீதியான உரிமைகளை நிலைநாட்டுகிற உள்ளடக்கம் இருப்பதால், இந்தச் சட்ட முன்வடிவை நான் வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு ஜனநாயக அரசியல் அமைப்பில், ஜனநாயகப் பிரச்சினைகளை நாம் வெறும் விருப்பு வெறுப்பு நிலைகளிலே இருந்து மட்டுமே அணுகிவிடக்கூடாது. பல்வேறு சிக்கல்கள், நெருக்கடிகள் இருந்தாலும்கூட, ஜனநாயக நெறிமுறைகள் காப்பாற்றப்பட வேண்டும் என்ற அம்சத்திலே நாம் பார்க்க வேண்டும். இந்தியாவினுடைய ஜனாதிபதியாக இருக்கிற ஒரு குறிப்பிட்டவர் அரசியல் சாசன நெறிமுறைக்கு விரோதமாக நடந்து கொண்டார் என்பது மெய்ப்பிக்கப்படுமானால், நாடாளுமன்றத்தின் 2/3 majority-யோடு அவர்மீது impeachment கொண்டு வரலாம் என்று இந்திய அரசியல் சாசனம் வழிவகை செய்திருக்கிறது. இந்தியாவினுடைய முதல் குடிமகன் என்ற முறையில் அவர் அத்தகைய சலுகைகளைப் பெற்றுவிடவில்லை, பெற்றுவிட இயலாது ஜனநாயகத்தில். ஒரு குறிப்பிட்ட elected members கூடி ஒரு பஞ்சாயத்துத் தலைவரை அல்லது மாவட்ட ஊராட்சிகளின் தலைவரைத் தேர்ந்தெடுத்துவிட்டால், அவர் தவறி நடந்தால் அல்லது அவர் ஜனங்களுக்கு விரோதமாகச் செயல்படுகிறார், நெறிமுறைகளுக்கு விரோதமாக இருக்கிறார் என்றால், அவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் முன்மொழிவதற்கு சட்டத்தில் வழிவகை வேண்டும். இப்போது, குறிப்பாக நம்முடைய நகர்ப்புற உள்ளாட்சிச் சட்டத்திலே பார்த்தால் அனேகமாக அதற்கு consent வந்திருக்கக்கூடும் என்று நான் நினைக்கிறேன். அந்தச் சட்டத்திலே நேரிடையாக நகராட்சித் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதால், removal தான் அங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. Removal என்றால் ¾ majority-யில் removal தீர்மானம் போட்டு மாநில அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று அதிலே வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இது நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்பட இயலாத அளவிற்கு 73-வது அரசியல் சாசன அடிப்படையிலே சிக்கல்கள் எழுந்துவிட்ட காரணத்தினால் இப்படி ஒரு பிரச்சினை நேர்ந்திருக்கிறது. ஆனால் சில நெருடல்கள் இருக்கின்றன; சில பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் அந்தப் பிரச்சினைகளின் காரணமாக நாம் ஒரு நெறிமுறையை விரோதித்துக்கொள்வது என்பது, நெறிமுறையை நிராகரிப்பது என்பது நாம் இன்றைக்குச் சொல்கிற இதே விஷயங்களே நாளை நமக்கு நேர் எதிராக வந்துவிடக்கூடும். ஏனென்றால், பல்வேறு

அலை அடிக்கிற போக்கு நிலவுகிறபோது பொதுவான நெறிமுறைகளில் நாம் நிலைகுத்தி நின்று வரவேற்கவில்லை என்றால், பின்னர் அது நமக்கே எதிர்மறையாக அமைந்துவிட வாய்ப்புகள் இருக்கும் என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் ஒரு விஷயத்தையும் கவனத்திலே கொள்ள வேண்டுமென்று நான் கருதுகிறேன். ஏன் என்றால், வெறும் ஊராட்சி ஒன்றியங்களிலே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற உறுப்பினர்கள் அல்லது மாவட்ட ஊராட்சிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற உறுப்பினர்களின் தகுதி நிலை குறித்து நான் விமர்சனம் செய்ய விரும்பவில்லை. பொதுவாக இந்திய அரசியலிலேயே நிலவுகிற பொதுப் போக்கு அங்கேயும். பிரதிபலிப்பாக நிகழக்கூடும். அப்படி நிகழ்கிறபோது, நம்முடைய ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் வரலாம். அப்படி வருவதையும் தடுப்பதற்கு, நாம் கட்சி மாறல் முறைகளைத் தடுப்பதற்குரிய வழிவகைகளைக் காண்பதும் நல்லது என்ற ஆலோசனையையும் நான் மாநில அரசுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே இங்கே முன்மொழியப்பட்டு இருக்கிற இந்தச் சட்ட முன்வடிவை ஜனநாயக உள்ளடக்கத்தின் அடிப்படையிலே நான் வரவேற்கிற அதேநேரத்திலே இது துஷ்பிரயோகம் செய்யப்பட மாட்டாது என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் உறுதியளித்திருக்கிறார்கள். மேலும் இத்தகைய நிலைமைகள் ஊக்குவிக்கப்பட்டுவிடக்கூடாது. ஏன் என்றால், சமூக விரோதிகள் பல வடிவங்களில் வரக்கூடும். இல்லை என்று மறுப்பதற்கு இல்லை. அரசியல் இலாபகரமான ஒரு தொழிலாக இப்போது கருதப்படுவதால், இந்த இலாபகரமான தொழிலில் தனக்குப் பொறுப்பு வேண்டும் என்று சில வியாபாரிகள் களம் இறங்கிவிடக் கூடும். அத்தகைய நிலைமைகளையும் சட்டத்தின் வாயிலாக, கவனத்தோடு கவனித்துத் தடுப்பதற்கும் வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று தெரிவித்து, இந்தச் சட்டத்தை ஆதரித்து, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of clarification. மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள், இதிலே எந்தவிதமான முறைகேடும் வராமல் இருப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஓர் உத்தரவாதம் அளித்திருப்பதாகச் சொன்னார்கள். அப்படி என்ன உத்தரவாதத்தை முதலமைச்சர் அவர்கள் அளித்திருக்கிறார் என்பதனை நான் அறிய விரும்புகிறேன்.



*முற்பகல் 11-15*

**திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஞானசேகரன் அவர்கள் பேசுகிறபோது குறுக்கிட்டுப் பேசினார்கள். பேசுகிறபோது வெளிப்படுத்தப்பட்ட விஷயம் என்னவென்றால் தேர்தல் நேரத்தில் ஏற்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் 36 சதமான இடங்களைப் பெற்றுக் கொண்ட நிலையில், 36 சதம் என்பது* minority. *ஆனால் குறிப்பிட்ட ஒரு சில இடங்களில் தலைவராக* T.M.C.-*யைச் சேர்ந்தவர்கள் வந்திருக்கிறார்கள்.* T.M.C-*யைச் சேர்ந்தவர்கள் தலைவர்களாக இருந்தாலும்கூட அவர்கள் தலைமையின்கீழ் இயங்குகிற நண்பர்கள்* minority-*ஆக ஆகிவிடுகிறார்கள். எனவே அரசியல் வேறுபாடு ஏற்பட்டுவிடுகிற காரணத்தால் அரசியல் உள்நோக்கத்தோடு தங்கள் நிலை கவிழ்க்கப்பட்டுவிடும் என்கிற அச்சத்தைத் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் நண்பர்கள் தெரிவித்தபோதுதான் அத்தகைய அச்சப்பாடு எங்களுக்கு இல்லையென்பதை இந்த அவையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி அவர் சொன்னதினுடைய உட்பொருள் அத்தகைய முயற்சிகளை அரசு ஊக்குவிக்காது என்பதாக நான் புரிந்துகொண்டேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. பி.ஆர். சுந்தரம்.*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரையில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த திரு. ஞானசேகரன் அவர்கள் கூறிய கருத்தை நான் பிரதிபலிக்கின்றேன். இந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ் மாநில காங்கிரஸ் ஆகிய இரண்டு கட்சிகளுக்கும் மட்டும் பொருந்துகின்ற மாதிரி இரண்டு பேரும் மாறி மாறிப் பேசுவதை நான் ஆட்சேபிக்கிறேன். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் இது தமிழகம் முழுவதும் உள்ள அனைத்துக் கட்சிகளுக்கும் பொதுவான சட்டம். ஆனால் இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெற்று கிட்டத்தட்ட 3 ஆண்டுகள் முடியப் போகின்ற சூழ்நிலையிலே இப்போது ஏன் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருகிறீர்கள் என்று அவர்கள் கேட்கின்ற கேள்வி நியாயமான கேள்வி. எப்போது உங்களுடைய உறவு சீராக இருந்ததோ அந்த நேரத்திலே அதையெல்லாம் மறந்துவிட்டீர்கள். உங்களுடைய உறவு (குறுக்கீடுகள்).*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும். உறுப்பினர், அவருடைய கருத்தைச் சொல்லிவிட்டுப் போகிறார். நீங்கள் ஏன் பதில் சொல்கிறீர்கள்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** உங்களுடைய உறவு, டெல்லி மாநகரிலே நீங்கள் எடுத்த முடிவு வேறுவிதமாகவும், அவர்கள் எடுத்த...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது, இந்தச் சட்டமுன்வடிவைப் பற்றிப் பேசுங்கள். நீங்கள் எங்கேயோ போய், இந்திய அரசியலுக்குப் போய்விட்டீர்களே? இதைப் பற்றி நீங்கள் சொல்லுங்கள். நீங்கள் அரசாங்கத்திற்கு உள்நோக்கம் இருக்கிறது என்று சொல்கிறீர்கள். அதைச் சொல்லி, பேச்சை முடித்துவிட்டுப் போங்கள். அதற்கு மேலே ஏன் பேசிக்கொண்டேயிருக்கிறீர்கள்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** 10 நிமிடங்கள் பேசிவிடுகிறேன். கடைசி நேரம்தானே. ஆகவே, அவர்களுக்கு இருக்கிற பயம் நீங்கள் ஏற்கெனவே கூறியபடி தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும் பெருந்தலைவர்களாக இருக்கிறார்கள்; திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் நிறைய பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அரசினுடைய கொள்கையின் விளைவாக இப்போது திடீரென்று இந்தச் சட்டத்தைப் போடுகின்ற காரணத்தால், நம்மையெல்லாம் விலைக்கு வாங்கி அவர்களுடைய எண்ணிக்கையைக் குறைத்து விடுவார்களோ என்ற எண்ணம் அவர்களுக்கு இருப்பது உண்மைதான். ஆகவே இதை நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

மூன்று அடுக்கு முறையைப் பொறுத்த வரையில், அது சரியில்லை, அதை மாற்ற வேண்டும், மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று பேசியிருக்கிறோம். ஆனால், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சட்டத்திலே இடம் இல்லையென்று கூறியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் நீங்கள் அந்தச் சட்டத்தைத் திருத்தி மத்திய அரசுக்கு அனுப்பி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்தான் கண்டிப்பாகப் பெருந்தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று சட்டத்தை நிறைவேற்றினால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டுவிடும். அதேபோல் ஒன்றியத் தலைவரைப் பொறுத்தவரையில் அவர்களுடைய இஷ்டம் போல் நடக்க முடியாது. ஏனென்றால் அவர்கள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அதற்கு majority கிடைத்தால்தான், அவர்கள் செயல்பட முடியும். ஆகவே நீங்கள் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்றால் ஏற்கெனவே 1994 ஆம் ஆண்டு சட்டத்திலேயே அதற்கெல்லாம்



வழிவகை இருக்கிறது. ஆகவே அந்தச் சட்டத்தில் இருக்கின்ற வழிவகையைப் பயன்படுத்தி, பதவி நீக்கம் செய்ய வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டே நான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் கூறினேன். அவசரக் கோலத்திலே ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தீர்கள். ஊராட்சி மன்றத் துணைத் தலைவருக்கு Cheque-ல் கையெழுத்து போடுகின்ற Power கொடுக்க வேண்டாம் என்று எவ்வளவோ பேசினோம். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவேயில்லை. அதனால் இன்றைக்கு எத்தனை ஊராட்சி மன்றங்களில் வேலைகள் ஸ்தம்பித்திருக்கின்றன என்பது உங்களுக்கு நேரிடையாகத் தெரியும்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த ஊராட்சி ஒன்றியங்கள் என்ற விவரத்தை திரு. சுந்தரம் அவர்கள் இப்போது தர வேண்டும். இல்லை என்றால் அவர் சொன்னதைத் திரும்பப் பெற வேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** எதற்கெடுத்தாலும் அந்த இடத்திலேயே அதைக் கொடுக்க வேண்டும் என்று நீங்கள் கேட்கிறீர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. திரும்பப் பெறுகிற பேச்சுக்கே இடமில்லை.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** நீங்கள் எதை வேண்டுமானாலும் பேசுவதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இரண்டு பேரும் கொஞ்சம் உட்காருங்கள். அந்த மாதிரி cheque power கொடுத்ததனாலே ஸ்தம்பித்துப் போயிருக்கிறது என்று நீங்கள் சொன்னால் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம் என்கிற அர்த்தத்தில்தான் அவர் சொல்கிறார். ஆகையினாலே நீங்கள் இதை ஒரு பெரிய பிரச்சினையாகப் பேச வேண்டாம். பேசி முடியுங்கள்.

*முற்பகல் 11-20*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** என்னுடைய மாவட்டத்திலே, என்னுடைய இராசிபுரம் தொகுதியிலே காக்காவழி ஊராட்சியிலே இதேமாதிரி பிரச்சினை வந்தது. எதற்காகச் சொல்லுகிறேன் என்றால் அந்தச் சட்டத்தை எல்லோரும் எதிர்த்தோம். நீங்கள் அதை

ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனென்றால் அரசாங்கம் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து பிடித்தபிடியாக இருக்கக்கூடாது. எதிர்க்கட்சிகள் சொல்லுகின்ற கருத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு இடத்திலும் Vice-President இருக்கிறார். அந்த Vice-President-க்குப் பின்னால்தான் அத்தனை members-ம் இருக்கிறார்கள். ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு தலைவர் இருக்கிறார் என்றால், அங்கே 7, 8 Members, Vice-President கூடச் சேர்ந்து அவர்கள் ஒரு majority-ஆக இருந்து கொண்டிருக்கிறார்கள். எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், ஏற்கெனவே இருக்கிற சட்டத்திலே வழிவகை இருக்கிறது. ஆகவே இந்தச் சட்டத்தை நாங்கள் எதிர்க்கிறோம் என்று கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தைப் பொறுத்தவரையில் நான் ஒன்றும் அதிகமாகச் சொல்ல அவசியமில்லை என்று கருதுகிறேன். ஆனால் ஒன்றைக் குறிப்பிட நான் விரும்புகிறேன். மாண்புமிகு ஞானசேகரன் அவர்களுடைய இயக்கத்தைச் சார்ந்த தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் தினசரி ஊராட்சி மன்றத்திற்கு, உள்ளாட்சித் துறைக்கு அதிக அதிகாரத்தை இந்த அரசு அளிக்கவில்லை; அளிக்க வேண்டும் என்று குரல் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தப் பிரிவைப்பற்றிப் பேசுகின்றபொழுது என்னவோ தெரியவில்லை. அனுபவம் அற்றவர்கள்...

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்க வேண்டும் என்று கூறுவது என்னவோ உண்மை. அதிகாரத்தைக் கேட்டால், நீங்கள் அவர்களுடைய அதிகாரத்தைப் பறிப்பதற்கான வழிமுறைகளைத்தான் இப்பொழுது கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறீர்கள். அதாவது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவது பெரிய அதிகாரம் அல்ல. அதிகாரம் என்றால் ஊரில் நடக்கக்கூடிய சில வளர்ச்சிப் பணிகளை அவர்கள் ஆற்ற வேண்டும். அதற்கு அவர்களுக்கே முழு அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்றுதான் சொல்லுகிறோமேயொழிய வேறல்ல. அவர்களுடைய பதவியைப் பறிக்கும் வகையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு



வருவது என்பது இப்பொழுது அதிகாரததைக் கொடுக்கிறோம் என்று சொல்வதாக அர்த்தம் ஆகாது என்பதை மட்டும் நான் மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோபம் மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கும் வரக்கூடாது. அமைச்சருக்கு மட்டும் வரக்கூடாது என்று சொல்லக்கூடாது. உறுப்பினர்களுக்கும் வரக்கூடாது. ஏனென்றால் இரண்டு பேரும் மனிதர்கள்தான். மாறி மாறி உட்காருவோம். மறந்துவிடக் கூடாது.

நான் குறிப்பிட விரும்புவது, சென்ற 29-5-1998-ல் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இதுபோன்ற பிரிவை ஏற்கெனவே கொண்டு வந்தபோது, இந்த அவையில் மிகப் பெருந்தன்மையோடு இதை என்னிடத்திலே அவர்கள் குறிப்பிட்டு இதைத் திரும்பப் பெற வேண்டுமென்று சொன்னபோது, அவர் குறிப்பிட்டதை நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். 'ஓரளவுக்கு நாம் அதிகாரங்கள் வழங்குவது, உரிமைகள் வழங்குவது இவைகளைப்பற்றி ஆய்வு செய்வதற்கு ஒரு முடிவெடுத்திருக்கிறோம் ஒரு Committee அமைத்திருக்கிறோம். அந்த விவரமும் தெரிந்தபிறகு இன்னும் சில அனுபவங்கள் கிடைத்தபிறகு கொஞ்சநாள் கழித்து இதைப் பார்த்துக் கொள்ளலாம். தற்போது நீ இதைத் திரும்பப் பெற்றுக் கொள்' என்று என்னிடத்திலே அறிவித்ததையொட்டித்தான் நான் இங்கே தற்காலிகமாக இதைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன் என்று நான் குறிப்பிட்டேன். அதைத் திரும்பப் பெற்றுக்கொண்டேன்.

இரண்டு வருஷம் ஆகிவிட்டதே, இப்பொழுது கொண்டு வருகிறீர்களே என்று சொன்னால், அவர்கள் சொல்வதுபோல இப்படிப்பட்ட உள்நோக்கம் இந்த அரசுக்கு இருந்திருக்குமானால் அப்பொழுதே கொண்டு வந்திருப்போம். அதைக் கொண்டு வர வேண்டிய அவசியம் இல்லை என்றும் கருதவில்லை. கொண்டு வர வேண்டுமென்ற ஒரு நெருக்கடியும் எங்களுக்கு இல்லை.

மேலும் அரசியல் கூட்டு எல்லாம் பேசி, காலம் தள்ளுவது என்பது அவ்வளவு நல்லது அல்ல. இரண்டு பேரும் கையைக் கோர்த்துக் காட்டுகிறார்கள். அப்பொழுது சேர்ந்திருந்தோம். இப்பொழுது விலகி இருக்கிறோம் என்று அவர்களே விலகிக்கொண்டு போனதை அவர்களே விவரமாக இந்த அவையிலே அறிவிக்கிறார்கள். நான் என்ன பொறுப்பேற்க முடியும்?

ஆனால் ஒன்று உங்களுக்குச் சொல்ல விரும்புவது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பிரதிநிதியை நம்பாமல், அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை நம்புவது என்பது என்ன அடிப்படை என்பதே எனக்குத் தெரியவில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் கூடி மறைமுகத் தேர்தலில் தலைவரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அவர்களுக்கு ஆபத்து வந்துவிடக்கூடாது; அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தால், இந்த ஜனநாயகத்தை, அவர்களுக்கு இருந்த உரிமையை நீங்கள் மறுப்பதற்கு என்ன காரணம்? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களுக்கு இப்பொழுது என்ன அதிகாரம் இருக்கிறது என்று நினைக்கிறீர்கள்? ஒன்றுமே கிடையாது. (குறுக்கீடு) நான் சொல்கிறேன். கொஞ்சம் கேளுங்கள். உண்மை. அதாவது J.V.V.T. Scheme-ஐ அவர்களிடத்திலேயிருந்து இப்பொழுது பஞ்சாயத்துக்கு மாற்றியாகிவிட்டது. E.A.S. திட்டத்தைக் கூட இப்பொழுது மாவட்டப் பஞ்சாயத்துக்கு மாற்றப்போவதாக நான் அறிகிறேன். இப்பொழுது அவர்களுக்கு என்ன கொடுத்திருக்கிறீர்கள் என்றால் சட்டமன்ற உறுப்பினருடைய நிதியின்கீழ் பணிகளை tender வைத்து எடுக்கிறார்கள், வேலை செய்கிறார்கள் அதேபோல பாராளுமன்ற உறுப்பினர்கள் கொடுக்கிற நிதியிலும் tender வைத்து வேலை செய்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது)

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரிமை இல்லை என்று நீங்கள் சொல்கிறபோது, Union Chairman-க்கு இருக்கிற உரிமைகூட எங்கள் யாருக்கும் இல்லை என்று எல்லோரும் பேசினார்கள். Chairகூட எம்.எல்.ஏ.வு-க்குக் கிடையாது, Chairman-க்கு உண்டு என்று பேசினார்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நான் என்ன சொல்கிறேன் என்றால், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களை control செய்ய இரண்டு B.D.O.-க்கள் இருக்கிறார்கள். இரண்டு ஒன்றியப் பொறியாளர்கள் இருக்கிறார்கள். ஒரு துணை B.D.O. இருக்கிறார். ஏராளமான அதிகாரிகள் இருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியத்தில் அந்த நாற்காலியில் போய் உட்காருவதைத் தவிர அவருக்கு என்ன அதிகாரம் இப்போது



இருக்கிறது? அவர் என்ன தவறு செய்ய முடியும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அதைப்பற்றி நான் அமைச்சரிடம் விளக்கம் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பலமுறை இங்கே பேசப்பட்டு இருக்கிறது. அதற்கான அறிவிப்பும் தரப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி இப்போது பேசுவதற்கு கால அவகாசம் இல்லை. போகப்போக அதைப்பற்றிப் பேசிக்கொள்ளலாம். அவர்கள் சொல்கிற அடிப்படையில் நான் குறிப்பிடுவது, அனுபவம் பெற்றவர்கள், அவர்கள் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவார்கள். அவர்களிடத்திலே, இந்தப் பிரிவை மட்டும் உபயோகப்படுத்தக்கூடாது என்று பெருந்தன்மையோடு வாதாடுகிறார்கள். ஆனால் நான் ஒன்று குறிப்பிட விரும்புவது, நான் போகின்ற இடங்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாக இருக்கிறவர்கள், எங்களை மதிக்கமாட்டேன் என்கிறார்கள், நாங்கள் சொல்வதைக் காதால் கேட்க மாட்டேன் என்கிறார்கள். ஏற்கெனவே இப்படி இருந்த அதிகாரத்தை வைத்துக்கொண்டு ஓரளவுக்குச் சீராக நிர்வாகம் நடந்தது; இப்போது பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற நிலை இல்லாதபோது இரகசிய வாக்கெடுப்பு நடந்தபோது, ஏன் இதை நீங்கள் கொண்டு வரவில்லை என்று தினசரி என்னிடத்தில் உறுப்பினர்கள் சொல்கிற வார்த்தைகள் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. முதலமைச்சரிடத்திலேயும் பலபேர் பலமுறை சொல்லியிருக்கிறார்கள். அவரே என்னிடத்திலேயும் இதைப்பற்றி கேட்டிருக்கிறார். இப்போது இருக்கிற பிரச்சினைகள் எல்லாம், நாம் சேர்ந்திருந்தபோது, ஏதோ அவர்களும் நாமும் செய்துகொண்ட ஒப்பந்தத்தைப் போல இந்த ஒப்பந்தம் எல்லாம் எப்போதும் நடந்ததில்லை. அப்படி ஒப்பந்தம் போடுகிற முதலமைச்சரும் இல்லை. இதை அப்போது வெற்றி பெற்று வந்தபிறகு, அதைப்பற்றிப் பரிசீலிக்கிற காலங்களிலும் தந்ததில்லை. ஆனால் இதையெல்லாம் அவர்களாகவே இப்போது சேர்த்து பேசிக் கொண்டிருப்பது, காலம் கடத்துவது, அவ்வளவு நல்லதல்ல. என்னைப் பொறுத்தவரையில், இந்த அரசு, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கு உள்ள உரிமையைப் பறிப்பதுபோல அவர்கள் கருதுகிறார்கள் என்பதை உணருகிறது. அதை நான் மறைக்காமல் சொல்ல விரும்புகிறேன். அவர்களுக்கு இந்த உரிமையைக் கொடுப்பதற்கு இந்த அரசு விரும்புகிறது. அதிகாரம் என்று கூட அல்ல, உரிமையைக் கொடுக்க விரும்புகிறது. இங்கே அவசரப்பட்டு, ஓர் உள்நோக்கத்தோடு

[திரு. கோ.சி. மணி] [1999 மே 17

ஏதுவும் செய்யப்படவில்லை. பல மாநிலங்களில் சரி பாதிக்கு மேல் ஒருவர் ஓட்டளித்துவிட்டாலே, அன்றைக்கே பதவியை விட்டு இறங்குகிற நிலைமை ஆங்காங்கே இருக்கிறது. பாதிக்குமேல், 100-க்கு 51 பேர், மகாராஷ்டிரா மாநிலத்தில் வாக்களித்துவிட்டால், அவர் அன்றைக்கே பதவியை விட்டு இறங்க வேண்டும். மூன்றில் இரண்டு பங்கு வாக்களித்தால்தான் என்று இங்கே கொண்டு வந்திருக்கிறோம். ஏற்கெனவே இருந்த விதி, துணைத் தலைவர் வரை—இன்று வரை இருப்பது—தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்மீது, 6 மாத காலத்திற்குப் பிறகுதான் இதைக் கொண்டு வர வேண்டும் என்று இருக்கிறது.

இப்போது நாம் இதை ஓராண்டுக்குப் பிறகுதான் கொண்டு வர வேண்டும் என்று திருத்தியிருக்கிறோம். அதேபோல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து, ஒருக்கால் தோற்றுவிட்டால், இன்னொரு முறை முயற்சிக்கலாம் என்று இப்போது இல்லை. அதை இஷ்டத்திற்குச் செய்வார்கள். இதே தொல்லையாக இருக்கும் என்று குறிப்பிட்டு, 6 மாதம் என்பதை ஓர் ஆண்டு கழித்துத்தான் திரும்பவும் கொண்டு வரலாம் என்றும் திருத்தியிருக்கிறோம். தயவுசெய்து, திரு. ஞானசேகரன் அவர்களைக் கேட்கிறேன். உள்நோக்கம் இருந்தால் ஏன் அதைத் திருத்த வேண்டும். 6 மாதம் என்பது அப்படியே இருந்துவிட்டுப் போகட்டும் என்று வைத்திருக்கலாம் அல்லவா?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டரை ஆண்டுகளில் இந்த அரசுக்கு ஊராட்சி ஒன்றியத் தலைவர்களைப் பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்று எத்தனை மனுக்கள் வந்திருக்கின்றன? எந்தெந்த மாவட்டங்களிலிருந்து எத்தனை மனுக்கள் வந்து, அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனு வந்திருக்கிறது. நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நீதிமன்றங்களுக்குச் சென்றிருக்கிறார்கள். தடை ஆணை பெற்றிருக்கிறார்கள். உங்கள் கட்சியிலே உள்ள நான்கு பேர் கூட— மாண்புமிகு அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களைக் கேட்டால் தெரியும். அவர்களும் வழக்குமன்றத்தின் படிக்கட்டுகளில் ஏறி இறங்கிக் கொண்டிருக்கிறார்கள். வழக்கம் போல் இதற்கும் உண்டு, அதற்கும் உண்டு. இது ஒரு கருப்புச் சட்டம் என்று கூடச் சொன்னதாகப் பத்திரிகையில் செய்தி படித்தேன். இது கருப்புச் சட்டமல்ல.



1999 மே 17] [திரு. கோ.சி. மணி]

படிப்படியாக, உயர் நீதிமன்றம் வரை செல்லக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. சென்றும் இருக்கிறார்கள். இன்னமும் செல்ல இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு இந்தத் திருத்தம் வரவில்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொண்டு, ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன்...

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்திலே இருக்கிற சிக்கல் என்னவென்று சொன்னால், உறுப்பினர்கள், ஒன்றியப் பெருந்தலைவரிடம் சென்று, பல பணிகள் நடக்கிறபோது, அந்தப் பணிகள் எங்களுக்கு வேண்டும் என்று மறைமுகமாக அல்லது நேரடியாக மிரட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதிலே பல தவறுகள் நடைபெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. காரணம் உறுப்பினர்களுடைய எண்ணிக்கையின் அடிப்படையிலேதான், பெருந்தலைவர்களுடைய பதவி இருக்கிற காரணத்தினால், நிச்சயமாக உறுப்பினர்கள், இந்தப் பணிகளை எங்களுக்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்கின்றபோது, பெருந்தலைவர்கள் அதற்குக் கட்டுப்பட வேண்டிய நிர்பந்தத்திற்குத் தள்ளப்படுகிறார்கள். இல்லையென்று சொன்னால, பணிகள் கிடைக்காதபோது, அவர்களுக்குள்ளே ஒரு Syndicate form செய்து. அந்தத் தலைவரைப் பதவியை விட்டு நீக்கிவிட முடியும் என்கின்ற சூழ்நிலை இருக்கின்றபோது, தமிழகத்தினுடைய வளர்ச்சிப் பணிகள் எல்லாம், வளர்ச்சித் திட்டங்கள் எல்லாம் சீர்குலையும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

*முற்பகல் 11-30*

அதுபோல குதிரை வியாபாரம் என்பது நிச்சயமாக நடக்கும். தமிழகம் முழுவதிலும் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுகின்றவர்கள் ஆதிக்கத்தைக் கையில் எடுக்க வேண்டும் என்பதற்காக, இதிலே ஈடுபடுகின்ற மிகப் பெரிய ஓர் அபாயம் இருக்கிறது என்ற காரணத்தினால்தான் தமிழ் மாநில காங்கிரஸ் இதை எதிர்க்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், நீங்கள் கொஞ்சம் இருங்கள். திரு. மு. அப்பாவு, நீங்கள் சொல்லி முடியுங்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் எல்லாவற்றிற்கும் சேர்த்து மொத்தமாக பதில் சொல்லிக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** சரி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறும்போது, தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கு இல்லாத உரிமை, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவருக்குத் தேவையா என்று கேட்டார்கள். ஓர் ஊராட்சி ஒன்றியத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர், நிம்மதியாக அங்கே நடைபெறுகின்ற பணிகளைச் செவ்வனே செய்ய வேண்டுமென்றால், உறுப்பினர்களால் மிரட்டலின்றி இருந்தால்தான், அவர் செம்மையாக அந்தப் பணிகளைச் செய்ய முடியும். மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களை அவர் எப்போதும் தன் பக்கம் இழுத்து வைத்துக்கொண்டு, அவர்களைச் சரிக்கட்டிக் கொண்டு வந்தால்தான் தொடர்ந்து அவர் பதவியில் இருக்க முடியும் என்பதை முதலில் தன்னுடைய முதல் பணியாக நினைப்பாரா அல்லது அந்த மக்களுக்குப் பணியாற்றுவதை முதல் பணியாக நினைப்பாரா என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இப்போது மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் சொன்னதுபோன்று, தேர்தல் நடைபெறும்போது என்ன சட்டம் இருந்ததோ, அதை மீதி இருக்கின்ற 2½ ஆண்டுக் காலத்திற்கும் நீட்டித்துக் கொண்டு, வரவிருக்கின்ற காலங்களில் எல்லா மாவட்டப் பஞ்சாயத்துத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் எல்லாம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், மக்களால்தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசிலே இருந்து— Simple majority இருந்தால்போதும்— இதை நாம் சட்டமாகப் பெற்றுக் கொள்ளலாம். அந்த அடிப்படையில் நீங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டத் திருத்தம் கொண்டுவரும்போது, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் ஒப்பந்தக்காரர்களுக்கு அரசுத் துறை மூலம் வழங்கிக் கொண்டிருந்த பைப், சிமெண்ட், கம்பிகள் இவற்றை நிறுத்தி, ஒப்பந்தக்காரர்களே, வாங்கிக்கொள்ளலாம் என்று நிர்ணயித்த பின்பு, பல இடங்களில் பணிகள் ஸ்தம்பித்து விட்டன. காரணம் அவர்களே இதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஓர் உதாரணத்திற்குச் சொல்கிறேன்......



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை. நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் செல்லக்குமார் அவர்களும், அப்பாவு அவர்களும் ஒரு பிரச்சினையைச் சொன்னார்கள். உறுப்பினர்கள், தங்கள் விருப்பப்படி ஒரு தலைவர் நடக்காவிட்டால், நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னார்கள். பெரும்பாலும் நம்முடைய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர்கள், காமராசர் ஆட்சி வர வேண்டும் என்றுதான் விரும்புகிறார்கள். 1958 ஆம் ஆண்டு சட்டத்தின்படி அப்போது ஊராட்சி மன்றத் தலைவர்கள் indirect election மூலமாகத்தான் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 1978-லேதான் நேரடியாக ஊராட்சி மன்றத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கக்கூடிய ஒரு சட்டம் வந்ததே தவிர, 1958ஆம் ஆண்டு சட்டப்படி அப்போது indirect electionதான். உறுப்பினர்கள்தான் ஒன்றியத் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பார்கள். அப்போதும் இந்த முறைதான் இருந்தது. அப்போதும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரக்கூடிய சட்டம் இருந்தது. இடையிலே, 1994-லே மறுபடியும், indirect election மூலம் மாவட்ட ஊராட்சித் தலைவர்களும், ஒன்றியத் தலைவர்களும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஓர் அவசியம் ஏற்பட்ட காரணத்தினால், அந்தச் சட்டத்தைத்தான்—காமராசர் ஆட்சிக் காலத்திலே கொண்டு வரப்பட்ட அந்தச் சட்டத் திருத்தத்தைத்தான்—கொண்டு வந்திருக்கிறோமே தவிர, நாங்களாகவே ஒன்றும் கண்டுபிடிக்கவில்லை.

முற்பகல் 11-35

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் சொல்கிறேன். அதாவது காமராஜர் கொண்டு வந்தபோது அந்தச் சட்டத்திலேயே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரலாம் என்று இருந்தது. இந்தச் சட்டத்திலே அப்படி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரலாம் என்று இல்லை. அதை இப்போது இடையிலே கொண்டு வர வேண்டும் என்பதுதான்.....

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** தேர்தல் விதிமுறைகளே மாற்றப்பட்டிருக்கிறபோது, இருக்க வேண்டும் என்று எப்படி எதிர்பார்ப்பது? எப்படி எதிர்பார்ப்பது? (குறுக்கீடு)

[1999 மே 17

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு) டாக்டர் அ. செல்லக்குமார், நீங்கள் முதலில் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்னும் இதிலே குறிப்பிட விரும்புவது, சாதாரணமாக, குடிநீர் வடிகால் வாரியத்திலே இருக்கிற நிர்வாக விவரங்களைப் பற்றிச் சட்டத் திருத்தத்திலே பேசுவது அவ்வளவு நல்லதல்ல. அதற்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை. ஆனால் ஒன்று நான் குறிப்பிட விரும்புவது இப்படிப்பட்ட காலகட்டங்களில் ஏற்படுகிற விளைவுகளுக்கு, முதலமைச்சர்மீது நம்பிக்கை இருக்கிறது; இந்த அரசின்மீது நம்பிக்கை இருக்கிறது; இருந்தாலும் இது வேண்டாம் என்றால் இதனுடைய உள்நோக்கம் என்ன என்று எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடு) அதைச் சொன்னார். நீங்கள் சொன்னதை நான் சொல்லிவிடுகிறேன். அதற்குத்தான் வருகிறேன். முதலமைச்சர் சொன்னால்கூட, எத்தனைபேர் கேட்பார்கள்; கேட்கமாட்டார்கள் என்று ஒரு வார்த்தை சொன்னார். மிக வேதனையோடு அதற்குத்தான் பதில் சொல்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் அவர் கிழித்த கோட்டைத் தாண்டுகிறவர்கள் இந்த இயக்கத்திலே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இருக்க முடியாது என்பதை மட்டும் நான் சொல்லிக்கொள்கிறேன். காரணம் அரசியலில் நீங்கள் எவ்வளவு பேசுவது, நாங்கள் எவ்வளவு கேட்டுக்கொண்டிருப்பது? விதியை மட்டுமா பேசிக் கொண்டிருக்கிறீர்கள். இப்போது ஏதோ உங்களுக்குச் சங்கடம் வந்துவிட்டது. அந்தச் சங்கடத்தைத் தீர்த்துக்கொள்வது எப்படி என்பதற்குத்தான் பிரச்சினைக்குள் போகிறீர்களே தவிர, நியாயம் எது, ஜனநாயகம் எது, கேட்பது சரிதானா அல்லது அவர்கள் இதுவரையில் கொடுக்காமல் இருக்கிற அதிகாரங்களை, உரிமைகளைக் கொடுக்க வேண்டும் என்று கேட்பது குறித்துச் சட்டத்திலே இருக்கிறதா இல்லையா என்ற விவரங்களுக்குள்ளே இங்கே யாரும் நுழைந்ததாக எனக்குத் தெரியவில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மன்னிக்க வேண்டும். அதாவது உங்களுக்குத் தெரியாதது அல்ல.



1999 மே 17] [திரு. துரைமுருகன்]

மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மசோதாமீது பேசுகிறவர்கள் பேசலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் பேசினார். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சுப்பராயன் பேசினார். பிறகு அமைச்சர் அவர்களை பதில் அளிக்கத் தாங்கள் அழைத்துவிட்டீர்கள். அதற்குப் பிறகு, அவர் பதிலளித்த பிறகு யாராவது சந்தேகமிருந்தால் ஒன்றிரண்டு கேட்பார்கள். பேசிக்கொண்டிருக்க மாட்டார்கள். உடனடியாக வாக்கெடுப்புக்குவிட வேண்டியதுதான் முறையே தவிர மறுபடியும் ஒவ்வொருவரும் எழுந்து பேசிக்கொண்டே போவது, அமைச்சருடைய பதிலுக்குப் பிறகு ஓர் உரை நிகழ்த்துவது இந்த மன்றத்தினுடைய மரபல்ல என்பதைத் தங்களுக்குப் பணிவன்போடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் எல்லோரும் உட்காருங்கள். நான் இப்போது பேசி முடிக்கிறேன். மன்ற மரபுகள் என்ன என்று எனக்குத் தெரியும். அதைக் காப்பாற்றுவதற்கு நான் கடுமையாக முயற்சி செய்வேன். நான் இந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரையில் சற்றுத் தளர்த்தி இருப்பதற்கு ஒரே காரணம், விவாதத்தில் இருப்பது நான்கு சட்டமுன்வடிவுகள். நான்கு சட்டமுன்வடிவுகளை ஒன்றாக அமைச்சர் ஆய்வுக்கு விட்டிருக்கிறார். நீங்கள் பேச வேண்டியதைப் பேசுங்கள் என்று சொல்லிவிட்டேன். மாண்புமிகு அமைச்சர் திரு. துரைமுருகன் சொல்வது நியாயம். நீங்கள் எல்லாம் பேசி, கடைசியாகத்தான் அமைச்சர் பதில் சொன்னார். பதில் சொன்னதிலே நீங்கள் சொல்கிற கருத்தை அவர் ஏற்கவில்லை. அவர் சொல்கிற கருத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. நான் இனிமேல் வாக்கெடுப்புக்குத்தான் விடவேண்டும். அதற்குள் நீங்கள் மாற்றி, மாற்றிப் பேசிக் கொண்டேயிருந்தால் என்ன அர்த்தம்? இப்போது திருநாவுக்கரசுகூட பேச வேண்டும் என்றால் நான் அனுமதி கொடுக்க மாட்டேன். காரணம் உறுப்பினர்கள் எல்லாம் பேசி, மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிற நேரத்தில் அவர் உள்ளே நுழைந்து நான் பேச வேண்டும் என்றால் நான் எப்படி அனுமதி கொடுப்பேன்? (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள். நான் இப்போது வாக்கெடுப்பு நடத்தப்போகிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய தீர்ப்பை அப்படியே மதித்து ஏற்றுக் கொள்கிறேன். நான் இப்போது பேசவில்லை. Point of order தான். இதில் என்ன பிரச்சினை என்றால் இந்தச் சட்டத்தைப்

பொறுத்தவரையில் நம்பிக்கைதான் பிரச்சினை. இப்போது, இந்தச் சட்டமுன்வடிவிலே தவறுகள் இருப்பதாக இரண்டு பக்கத்திலேயும், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி சார்பிலும் மற்றவர்கள் சார்பிலும் சொல்லவில்லை. இதில் என்ன பிரச்சினை என்றால் தமிழ் மாநில காங்கிரஸிற்கு அரசியல் சூழ்நிலைகள் மாறுகிறபோது என்ன பாதிப்பு வந்துவிடுமோ, என்று அவர்களுக்குச் சந்தேகம் இருக்கிறது. அதனால் வெளிப்படையாகப் பேசுகிறோம் என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே பேசுகிறபோது, அப்படிச் சந்தேகப்பட வேண்டிய அவசியமே கிடையாது. இந்தச் சட்டம் தவறு செய்கிற, அங்கே இருக்கிற மக்களுக்கு விரோதமாக, பெரும்பான்மை உறுப்பினர்களுக்கு விரோதமாக இருப்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்கிற வாய்ப்பே இல்லை, என்பதற்காகத்தான் வருகிறதே தவிர அரசியல் நோக்கங்களோடு இது பயன்படுத்தப்பட மாட்டாது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆகவே இதுவரை தி.மு.க.-வின்மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருந்த தமிழ் மாநில காங்கிரஸ் இப்போதும் முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவாதத்தை, உறுதிமொழியை நம்பலாம் என்பது என்னுடைய அபிப்பிராயமாகும். என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால் அரசியல்ரீதியாகத் தி.மு.க-வும் தமிழ் மாநில காங்கிரசும் இரண்டு அணிகளிலே மாறுபட்டு இருக்கிற சூழ்நிலை எதிர்காலத்திலே வந்தாலும்கூட எப்படிப்பட்டச் சூழ்நிலையிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில், 120 பஞ்சாயத்து ஒன்றியங்கள், 10 மாவட்டப் பஞ்சாயத்துகளில் இருக்கிற தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் எல்லோரையும் நீக்குகிற வகையிலே ஒட்டுமொத்தமாக ஜனநாயத்திற்குப் புறம்பாக நிச்சயமாக எந்த நடவடிக்கையும் எடுக்கமாட்டார்கள் என்கிற அந்த நம்பிக்கை எனக்கிருக்கிறது. அதனால் அந்த நம்பிக்கையின் அடிப்படையிலே, தவறு செய்தால் அவர்கள்மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு இந்தச் சட்டமுன்வடிவில் வாய்ப்பு இருக்கிற காரணத்தால் அந்த நம்பிக்கை உத்தரவாதத்தை, தமிழ் மாநில காங்கிரஸ் ஏற்றுக்கொண்டு இந்தச் சட்டமுன்வடிவை ஏற்கலாம் என்பது என்னுடைய வேண்டுகோளாகும். அரசியல்ரீதியாக கருத்து வேறுபாடு வந்தாலும், அந்தக் கருத்து வேறுபாட்டை கலைஞர் அவர்களோ, மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களோ, களத்திலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது point of order?



*முற்பகல் 11-40*

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** அரசியல் மாறுபாடு வந்தாலும் டாக்டர் கலைஞர் அவர்களும் மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களும் நேரடியாகத்தான் களத்திலே ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்வார்களே தவிர, ஒருத்தரை ஒருத்தர் நிச்சயமாக முதுகிலே குத்திக்கொள்ள மாட்டார்கள். அந்தக் கலாச்சாரம் நிச்சயமாக இரண்டு பேருக்குமே இருக்காது. எனவே இதை ஏற்கலாம் என்பது என்னுடைய வேண்டுகோள். தமிழ் மாநில காங்கிரஸைப் பொறுத்தவரை....

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பஞ்சாயத்துச் சட்டம் என்பதால் மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் பஞ்சாயத்து செய்யப் பார்க்கிறார். எந்தப் பஞ்சாயத்திற்கும் நாங்கள் கட்டுப்படுவதாக இல்லை. இந்தச் சட்டத்தை நாங்கள் எதிர்க்கின்றோம்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பஞ்சாயத்திற்கும் கட்டுப்படுவதாக இல்லை என்ற ஒரு தீர்மானத்தோடு வந்திருக்கின்றவர்களிடத்தில், என்னதான் நியாயமான கருத்துக்களைச் சொன்னாலும் எடுபடப் போவது இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இதைப் பஞ்சாயத்துத் தலைவர் உணர்ந்து பார்த்து தான் செய்த தவறை அவர் புரிந்துகொள்ள வேண்டுமென்று தம்பி திருநாவுக்கரசு அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். இதில் உள்நோக்கம் இருப்பதாக ஒரு நாள் சொல்லப்பட்டு, நான் உடனடியாக அதற்குப் பதில் அளித்திருக்கின்றேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள், அதற்குப் பிறகு தொடர்ந்து பேசிய நம்முடைய மாண்புமிகு மரியாதைக்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எல்லாம்கூட அதைக் குறிப்பிட்டார்கள். பொதுவாக இந்தச் சட்டமுன்வடிவு ஜனநாயக அடிப்படையிலே, ஒரு பொதுவான விவாதத்தை இங்கே உருவாக்கி இருக்க வேண்டுமேயல்லாமல், அரசியல் ரீதியாக விவாதத்தை உருவாக்கியது, உண்மையிலே, உள்ளபடியே வருந்தத்தக்கது. மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் ஜனநாயக அடிப்படையிலே இந்தச் சட்டமுன்வடிவு எவ்வளவு அவசியமானது என்பதை எடுத்துச் சொன்னார்கள். அதே வழியை பின்பற்றித்தான் ஆளும் கட்சித் தரப்பில் ஆகட்டும் அல்லது எதிர்க்கட்சித் தரப்பில் ஆகட்டும், விவாதம் நடைபெற்று இருக்கவேண்டுமேயல்லாமல்,

இதிலே தேவையில்லாமல் அரசியல் புகுந்து விட்டதற்காக நான் வருத்தப்படுகிறேன். அரசியல் புகுந்துவிட்ட காரணத்தால், நான் ஒன்றிரண்டு சான்றுகளைச் சொல்ல வேண்டியிருக்கின்றது. தமிழ் மாநில காங்கிரசுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இடையிலே இப்போது சில காரணங்களால் ஏற்பட்டிருக்கின்ற கருத்து மாறுபாடுகள், இன்றல்ல, 5, 6 மாத காலமாகவே இருந்து வருகின்றன. அதற்கு மூலகர்த்தா மூப்பனார் அவர்கள் அல்ல, நானும் அல்ல. இடையிலே உள்ள சில பேர் இந்த நிலை ஏற்பட வேண்டுமென்பதற்காக வெகு பிரயாசைப்பட்டு, பகீரதனைப் போலத் தவமிருந்து இந்த நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். அவர்கள் "எங்கிருந்தாலும் வாழ்க" என்று அண்ணா அவர்கள் சொன்னதைப்போல நான் சொல்ல விரும்புகின்றேன். ஆனால் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

கடந்த 2 அல்லது 3 மாதங்களுக்கு முன்பு நம்முடைய அவை நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, ஒரு நாள் நம்முடைய அமைச்சர் வீராசாமி அவர்கள் என்னிடத்திலே ஒரு செய்தியைச் சொன்னார். "கோயம்புத்தூரில் மேயரை எதிர்த்து, திராவிட முன்னேற்றக் கழகக் கவுன்சிலர்கள் வெளிநடப்புச் செய்யப் போகிறார்களாம், ஒரு செய்தி வந்திருக்கிறது" என்று சொன்னார். என்ன காரணம் என்று கேட்டேன். அவர் சொன்னார், கோயம்புத்தூர் மேயர் அவர்கள் தமிழ் மாநில காங்கிரஸைச் சேர்ந்தவர். எனக்கும் நீண்ட நாளைய நண்பர்தான். அவர் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி மேயராக இருக்கிற காரணத்தால் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுடைய பகுதிகளுக்கு எந்த நன்மையும் செய்யவில்லை, எனவே அதைக் கண்டித்து வெளிநடப்புச் செய்யப் போகிறார்கள் என்று சொன்னார். உடனடியாக நான், சி.டி தண்டபாணி அவர்களுக்கு—அவர் மாநகரத்தினுடைய மாவட்டச் செயலாளர் என்ற காரணத்தால்—சி.டி. தண்டபாணி அன்றைக்கு இல்லை, அப்போது இங்கே இல்லை. கோவையிலே இருந்தார். உடனடியாகத் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு, இத்தகைய காரியங்களில் ஈடுபடக் கூடாது, நாமே ஒரு மேயரை அங்கே தேர்ந்தெடுத்துவிட்டு, ஏதோ இருக்கின்ற சின்னச் சின்னப் பிரச்சினைகளுக்காக, அரசியல்ரீதியாக ஒரு மாறுபாட்டை அங்கே காட்டக்கூடாது, வெளிநடப்புச் செய்யக்கூடாது என்று நான் சொன்னதாக, நான் ஆணையிட்டதாகச் சொல்லுங்கள் என்று சொன்னேன். அடுத்த 5 நிமிடங்களுக்கு எல்லாம், சிடி தண்டபாணி என்னைத் தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, உங்களுடைய ஆணையைத் தெரிவித்துவிட்டோம். அவர்களும் வெளிநடப்புச் செய்வது இல்லை





என்ற தீர்மானத்திற்கு வந்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். இதே ஒரு நிலைமை தமிழ் மாநில காங்கிரசிலே இருந்து இருக்குமேயானால் இப்படி விவாதிக்க வேண்டிய அவசியமே வந்திருக்காது. நான் சொன்னேன், உடனே கட்டுப்பட்டார்கள். இப்படிப்பட்ட பிரச்சினைகள் வருகிற நேரத்திலே அதை, அந்தந்தக் கட்சியினுடைய தலைமை சரி செய்திருக்க வேண்டும். என்ன காரணத்தாலோ, அப்படிச் சரி செய்ய முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. அதுமாத்திரமல்ல. நிலைமை வளர்ந்து, வாஜ்பாய்க்கு, அந்த அரசுக்கு ஆதரவாக திராவிட முன்னேற்றக் கழகம் வாக்களித்து, வாக்களித்ததற்கான காரணத்தை நாங்கள் சொல்வதற்கு முன்பு, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக, வாக்களித்ததற்கான காரணத்தைத் திருவல்லிக்கேணியிலே கூட்டம் போட்டுச் சொல்லி, அதிலேகூட திராவிட முன்னேற்றக் கழகத்தையோ, அரசையோ அல்லது முதலமைச்சரைப் பற்றியோ எதுவும் பேசவில்லை என்று நம்முடைய அழகிரி அவர்கள் Sun TV பேட்டியிலே சொன்னால்கூட, அவரே சொன்னார், Sun TV பேட்டியிலே சொன்னார், Tape Recorder இருக்கிறது போட்டுப் பார்க்கலாம் என்று நான் போட்டுப் பார்த்துதான் சொல்கிறேன். என்ன என்ன பேசப்பட்டது என்பதை. அந்தப் பிரச்சினைக்குச் செல்ல விரும்பவில்லை.

*முற்பகல் 11-45*

அதற்குப் பிறகுகூட, இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற உள்ளாட்சி மன்றங்களுடைய பல்வேறு இடைத் தேர்தல்கள் 400-க்கும் மேற்பட்ட இடைத் தேர்தல்களில், தலைவர் தேர்தல், உறுப்பினர் தேர்தல், இவைகளில் ஒரு பெரும் போட்டி வந்து, எல்லோரும் Nomination எல்லாம்கூடப் போடப்பட்ட ஒரு சூழ்நிலையில், நம்முடைய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய பொருளாளர் திரு. சுதர்சனம் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொருளாளர் திரு. வீராசாமி அவர்களும் இரண்டு பேரும் சந்தித்து, கலந்து பேசி ஒரு கருத்தை என்னிடத்திலே சொன்னபோது, நானும், பொதுச் செயலாளர், நம்முடைய கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்களும், அதைப்பற்றிச் சிந்தித்து, ஏற்கெனவே நடைபெற்று வெற்றி பெற்ற இடங்களிலே உள்ள தமிழ் மாநில காங்கிரஸ் அப்படியே தொடர்ந்து இந்தத் தேர்தலிலும் போட்டியிடட்டும். அதைப்போலவே, தி.மு.க.-வும் போட்டியிடட்டும் என்ற அந்த ஒருமித்த கருத்துக்கு நாங்கள் இணங்கினோம் என்றால், உள்நோக்கம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருப்பதாக யாரும் கருதத் தேவையில்லை. எனவே இதே

நிலை, உள்ளாட்சி மன்றங்கள் எல்லாம் அதனுடைய ஆயுட்காலம் முடிகிற வரையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தால் கடைப்பிடிக்கப்படும் என்ற உறுதியை மாத்திரம் இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல என்னுடைய தொகுதியில் இரண்டு ஊராட்சி ஒனறியங்கள், ஒன்று கமுதி, இன்னொன்று முதுகுளத்தூர். கமுதி ஒன்றியத்தைத் தமிழ் மாநில காங்கிரஸ் எடுத்துக்கொண்டது. முதுகுளத்தூரை தி.மு.க.-விற்கு என்று நாங்கள் ஒதுக்கினோம். ஆனால் தி.மு.க. கவுன்சிலர்கள் வெறும் *3* பேர்தான் வெற்றி பெற்றார்கள். தமிழ் மாநில காங்கிரஸ்காரர்கள் சுயேட்சையாகப் பல இடங்களில் போட்டி இட்டு *8* இடங்களில் வெற்றி பெற்றார்கள். அங்கே தமிழ் மாநில காங்கிரஸ்தான் வர வேண்டுமென்று போராடினார்கள். அதேநேரத்தில் நான் சொன்னேன். நம்முடைய ஒப்பந்தம் பிரகாரம் இதை தி.மு.க.-விற்குத்தான் கொடுக்க வேண்டும் என்று சொல்லி அங்கே தி.மு.க.-வைச் சேர்ந்த ஒரு பெண் த.மா.கா-.வினுடைய முழு ஆதரவோடு இன்றுவரை தலைவியாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். ஆகவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, தமிழ் மாநில காங்கிரசும் பண்பாட்டோடு, ஏற்கெனவே பேசிக்கொண்டபடி நடந்துகொள்வதில் இதுவரையில் எந்தவிதமானக் குறைபாடும் வைத்துக்கொள்ளவில்லை என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருதரப்பிலும் அந்தப் பண்பாடு தொடர வேண்டும் என்பதற்காகத்தான் கேட்டுக்கொள்கின்றேன். இது யாரையும் வேண்டுமென்றே பாதிக்கக்கூடிய ஒன்று அல்ல. இப்போது தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய முக்கிய பிரமுகர்கூட என்னிடத்திலே பேசிக்கொண்டிருந்தார். நீங்கள் வேண்டுமென்றே, எங்களுடைய பஞ்சாயத்துகளிலே, ஒன்றியங்களிலே, மாவட்ட ஊராட்சித் தலைவர்களை எல்லாம் விலக்கிவிட்டால் என்ன செய்வது என்று சொன்னார். நான் சொன்னேன். நீங்கள் இதைத்தான் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். புதுச்சேரியிலே—பாண்டிச்சேரியிலே திராவிட முன்னேற்றக் கழகம் உங்களுடைய ஆதரவிலேதான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது, அந்த அரசு. இப்படிச் செய்தால் நீங்கள்



அங்கே செய்யமாட்டீர்களா, அந்த பயம் எங்களுக்கு இருக்காதா என்று அரசியல்ரீதியாகக்கூட அவர்களிடத்திலே நான் சொல்லியிருக்கின்றேன். ஆகவே பயப்படத் தேவையில்லை, தீர்மானத்தை ஆதரியுங்கள் (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

பிரிவு *2*, திருத்தங்கள் இல்லை.

பிரிவு *2*, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு *1*, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. கோ.சி. மணி] [1999 மே 17

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/1999) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/1999). மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/1999)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

@ 29-4-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1999 மே 17] [பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 15 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 15 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

முற்பகல் 11-50

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஈ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/1999), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/1999)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 8 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 7-5-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/1999) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (உ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/1999), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[1999 மே 17

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/1999)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"*
*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(குறுக்கீடு)*

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை ஓட்டுக்கு விடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்போர் 'ஆம்' என்க என்ற உடன் 'ஆம்' என்று சொல்வார்கள். 'மறுப்போர் இல்லை' என்க என்று சொன்னவுடன் நீங்கள் 'இல்லை' என்று சொல்ல வேண்டும். நான் 'ஏற்போரே அதிகம்' என்று சொன்னால், நீங்கள் இல்லை, இல்லை, Division வேண்டுமென்று கேட்க வேண்டும். அதுதான் முறை.

தீர்மானத்தை ஆதரிப்போர் 'ஆம்' என்க *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் *(குறுக்கீடுகள்)*

அப்போது இல்லை என்று சொல்ல வேண்டும்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது என்று சொல்கிறேன். நீங்கள் இல்லையென்று சொல்ல வேண்டும். *(இல்லை)* சரி.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன பேசுகிறீர்கள் என்று முழுமையாகப் புரியவில்லை. We press for the Division.

---

@ *7-5-1999* ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1999 மே 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முழுவதும் புரியவில்லை என்றால், நான் என்ன உங்களுக்குப் புரியாத மொழியிலே பேசிக் கொண்டிருக்கின்றேனா? நான் procedure-ஐத்தான் சொன்னேன். Division வேண்டுமென்று வலியுறுத்தப்படுகின்றது. எனவே, பேரவை விதி...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, சொக்கர் பேசியதால், நானும் பேசுகின்றேன். 'Division' தவிர்க்க முடியாததாகிவிட்டதற்காக நான் வருந்துகின்றேன். *(சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 99-ல் குறிப்பிட்டுள்ளதுபோல், எண்ணிக் கணிக்கும் முறைப்படி தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படுகிறது. அதற்கு முன்னதாக Division Bell-ஐ அழுத்துமாறு செயலாளரைக் கேட்டுக்கொள்கின்றேன்.

*(அழைப்பு மணி இரண்டு நிமிடங்கள் அடிக்கப்பெற்றது)*

வாக்கெடுப்பு நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அவரவர்கள் இருக்கையிலேயே இருந்திட வேண்டும். உறுப்பினர்கள் தங்கள் இருக்கையிலேயிருந்து இன்னொருவர் இடத்திற்குச் செல்லக் கூடாது. வாக்கு எண்ணி முடிக்கும் வரை அவரவர்கள் இருக்கையிலேயே இருக்கவேண்டும் என்பது விதி.

பேரவையின் வெளி வாயில்களை மூட உத்தரவிடுகிறேன்.

*(நுழை வாயில்கள் மூடப்பட்டன)*

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை) (குறுக்கீடுகள்)*

Division வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தப்படுகின்றது. எனவே இப்போது எண்ணிக் கணிக்கும் முறைப்படி வாக்கெடுப்பு.

பேரவைச் செயலாளர், தற்போது பிளாக் வாரியாக உறுப்பினர்களைப் பெயர் குறிப்பிட்டுப் படிப்பார்.

முற்பகல் 11-55

பிளாக்-1

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

1. திரு. மு.க. ஸ்டாலின்
2. மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி
3. திரு. ஏ. இராமலிங்கம்
4. திரு. அன்பில் பொய்யாமொழி
5. திரு. பா.மு. முபாரக்
6. திரு. ச. அழகுவேலு
7. திரு. வ. அன்பழகன்
8. திரு. பெ. ஆசையன்
9. திரு. அ. அசோகன்
10. திரு. வெ.அ. ஆண்டமுத்து
11. திரு. இரா. ஆவுடையப்பன்
12. திரு. பா. பரணிகுமார்
13. திரு. தி.ப. ஆறுமுகம்
14. திரு. பால. ஆனந்தன்
15. திரு. பி. இராசமாணிக்கம்
16. திரு. வி.பி. இராசன்
17. டாக்டர் வை. இராமசாமி
18. திரு. மா. இராமச்சந்திரன்
19. திரு. பா. அருண்குமார்

தீர்மானத்தை மறுப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன் —ஒருவருமில்லை.



பிளாக்-2

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

20. மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி
21. மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்
22. மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி
23. மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்
24. மாண்புமிகு திரு. கோ.சி. மணி
25. மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்
26. மாண்புமிகு திரு. துரைமுருகன்
27. மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்
28. மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்
29. மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி
30. மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்
31. மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி
32. மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி
33. மாண்புமிகு திரு. இ. பெரியசாமி
34. திரு. செ. இராமலிங்கம்
35. திரு. நபூ. இராமஜெயம்
36. திரு. தா. உதயசூரியன்
37. திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா
38. திரு. ஏ. ராசேந்திரன்

39. திரு. டி. கருப்புசாமி
40. திரு. குத்தாலம் பி. கல்யாணம்
41. திரு. க. கன்னையன்
42. திரு. சைதை கா. கிட்டு
43. திரு. சீ.வெ. கிருஷ்ணன்
44. திரு. டி. குண்டன்
45. திரு. ஏ. கோதண்டம்
46. திரு. பா. கோபால்
47. திரு. சி. கோபு
48. திரு. வெ. கோவிந்தன்
49. திரு. ஆர். சக்ரபாணி
50. திரு. கோ. சண்முகம்
51. திரு. சி. சண்முகம்
52. திரு. ம. சண்முகம்
53. திரு. சி. சந்திரசேகரன்
54. திரு. துரை. சந்திரசேகரன்
55. திரு. மு.பெ. சாமிநாதன்
56. திரு. வி.பி. சிங்காரவேலு
57. திரு. இ.ஏ.பி. சிவாஜி
58. திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்
59. திரு. இ.ஜி. சுகவனம்
60. திரு. கே. சுந்தர்

**தீர்மானத்தை மறுப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன். —ஒருவருமில்லை.**



***பிளாக்-3***

**நண்பகல் 12-00**

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி **கேட்டுக்** கொள்கிறேன்.

61. மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி
62. மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்
63. மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்
64. மாண்புமிகு திரு. கா.நா. நேரு
65. மாண்புமிகு திரு. க. சுந்தரம்
66. மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்
67. மாண்புமிகு திரு. ஆலடி அருணா
68. மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்
69. மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்
70. மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு
71. மாண்புமிகு திரு. அந்தியூர். ப. செல்வராசு
72. திருமதி சுப்புலட்சுமி செகதீசன்
73. திருமதி கோமதி சீனிவாசன்
74. திருமதி ஆர். சரஸ்வதி
75. திருமதி வாசுகி முருகேசன்
76. திருமதி ஏ.ஆர். வேடம்மாள்
77. டாக்டர் காஞ்சனா கமலநாதன்
78. திரு. சி. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி
79. திரு. பி.என். சுப்பிரமணி
80. திரு. அ.லெ. சுப்பிரமணியன்

81. திரு. செங்கை சிவம்

82. திரு. ரெ. செல்வம்

83. திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்

84. திரு. ஜி. சொக்கலிங்கம்

85. திரு. சுப. தங்கவேலன்

86. திரு. அ.ல. தங்கவேல்

87. திரு. தங்கம் தென்னரசு

88. திரு. சி.டி. தண்டபாணி

89. திரு. குழந்தை தமிழரசன்

90. திரு. ஆர். தமிழ்ச்செல்வன்

91. திரு. வீ. தமிழ்மணி

92. திரு. கோ. தளபதி

93. திரு. கே.ஆர்.ஜி. தனபாலன்

94. திரு. வி.ஜி. தனபால்

95. திரு. உ. திசைவீரன்

96. திரு. பெ.சு. திருவேங்கடம்

97. திரு. கே. துரை

98. திரு. பா. துரைசாமி

99. திரு. ஆ நடராசன்

100. திரு. த. நடராஜன்

101. திரு. கோ. நயினா முகமது

102. திரு. கொ.வீ. நன்னன்

தீர்மானத்தை மறுப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்

ஒருவருமில்லை.



**பிளாக்-4**

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

103. திரு. ஐ. கணேசன்

104. திரு. எஸ். திருநாவுக்கரசு

105. திரு. டி. மணி

106. திரு. சி. வேலாயுதன்

107. திரு. ஜி.கே. மணி

108. திரு. ப. கோவிந்தன்

109. திரு. ந. பாண்டுரங்கன்

110. திரு. ப. பாலசுப்பிரமணியன்

111. திரு. இ. புகழேந்தி

112. திரு. த. பூவேந்தன்

113. திரு. பே. மாரி அய்யா

114. திரு. எஸ்.எஸ். பொன்முடி

115. டாக்டர் அ. மணி

116. திரு. ஆசெ. மணிக்கண்ணன்

117. திரு. இரா. மணிமாறன்

118. திரு. செ. மதிவாணன்

119. திரு. கு. மனோகரன்

120. திரு. தி.ப. மாயவன்

121. திரு. அ. மாரிமுத்து

122. திரு. வி. முத்து

123. திரு. பொ. முருகேசன்

124. திரு. கோ. மோகனதாசன்

125. திரு. கு. ரவிசங்கர்

V211, 3, N99
N99. 83. 1
2,21,202

[பேரவைத் தலைவர்] [1999 மே 17

**பிற்பகல் 12-05**

126. திரு. ஏ.எம். ராமசாமி
127. திரு. செ. ராமச்சந்திரன்
128. திரு. எஸ். ராஜு
129. திரு. எஸ்.கே. ராஜேந்திரன்
130. திரு. கே.சி. கணேசன்
131. திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்
132. திரு. கே.எம். விஜயகுமார்
133. திரு. டி.சி. விஜயன்

**தீர்மானத்தை** மறுப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஒருவருமில்லை.

**நடுநிலை** வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1. டாக்டர் க. கிருஷ்ணசாமி

**பிளாக்-5**

**தீர்மானத்தை** ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

134. திரு. கே. சுப்பராயன்
135. திரு. ஜி. பழனிசாமி
136. திரு. நா. பெரியசாமி
137. திரு. லி. அய்யலுசாமி
138. திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்
139. திரு. அ.வ. அப்துல் நாசர்
140. திரு. எஸ்.வி. கிருஷ்ணன்
141. திரு. வை. சிவபுண்ணியம்
142. திரு. ஜி. நிஜாமுதீன்
143. திரு. ஜி.எல். வெங்கடாசலம்
144. திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்
145. திரு. ச.க. வெங்கடேசன்
146. திரு. ஜி.பி. வெங்கிடு



1999 மே 17] [பேரவைத் தலைவர்]

147. திரு. கும்மிடிப்பூண்டி கி. வேணு
148. திரு. வ. வேலுசாமி
149. திரு. கே. தங்கமணி
150. திரு. க. வேல்சாமி
151. திரு. மீ.அ. வைதியலிங்கம்
152. திரு. மு.ந. ஜோதிகண்ணன்
153. திரு. எஸ்.கே. வேதரத்தினம்

தீர்மானத்தை மறுப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1. திரு. சோ. பாலகிருஷ்ணன்
2. திரு. வி.கே. லட்சுமணன்
3. திரு. ஆர். சொக்கர்
4. திரு. சி. ஞானசேகரன்
5. திரு. ப. ரங்கநாதன்
6. டாக்டர் தே. குமாரதாஸ்
7. திரு. ச. அழகிரி
8. திரு. பி.ஆர். சுந்தரம்
9. திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்
10. டாக்டர் அ. செல்லக்குமார்
11. திரு. கே. ரவி அருணன்
12. திரு. கே.ஆர். இராமசாமி
13. திரு. மு. அப்பாவு
14. திரு. டி. அமரமூர்த்தி
15. திரு. ஓ.ஆர். இராமச்சந்திரன்
16. திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம்
17. திரு. என்.ஆர். அழகராஜா
18. திரு. ந. கருப்பண்ண உடையார்
19. திரு. சு. சிவராஜ்
20. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

*பிளாக்-6*

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன். —ஒருவருமில்லை.

தீர்மானத்தை மறுப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

21. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்
22. திரு. டி. சுதர்சனம்
23. திரு. ஆ.மு. முனிரத்தினம்
24. திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்
25. திரு. ரா. ஈஸ்வரன்
26. திரு. ப. மோகன் கந்தசாமி
27. டாக்டர் பத்மா
28. செல்வி க. ராணி
29. திரு. வெ. சின்னையா
30. திரு. ந. சுந்தரம்
31. திரு. ஆர்.ஆர். சேகரன்
32. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்
33. திரு. எ. தெய்வநாயகம்
34. திரு. ச. புரட்சிமணி
35. திரு. க. மணிவர்மா
36. திரு. எஸ்.எஸ். மணிநாடார்
37. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்
38. டாக்டர் எம். மோசஸ்
39. திரு. பா. வேல்துரை (குறுக்கீடு)

பேரவைத் தலைவருக்கு ஓட்டு இருக்கிறதா என்று கேட்டார்கள்; இருக்கிறது என்று சொன்னேன். மரபுப்படி போட முடியாது.

(வாக்குகள் எண்ணிக் கணிக்கப்பெற்றன)



வாக்கு எண்ணிக்கையின் முடிவு— மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தீர்மானத்தை ஆதரித்தோர் 153 பேர்; தீர்மானத்தை எதிர்த்தோர் 39 பேர்; நடுநிலை வகித்தோர் 1.

எனவே தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்று அறிவிக்கிறேன்.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/1999) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஊ) தமிழ்நாடு நகரப் பரப்பிடங்களில் உள்ள விலங்குகள் மற்றும் பறவைகள் (கட்டுப்படுத்துதலும் ஒழுங்குமுறைப்படுத்துதலும்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரப் பரப்பிடங்களில் உள்ள விலங்குகள் மற்றும் பறவைகள் (கட்டுப்படுத்துதலும் ஒழுங்குமுறைப்படுத்துதலும்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/1999), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரப் பரப்பிடங்களில் உள்ள விலங்குகள் மற்றும் பறவைகள் (கட்டுப்படுத்துதலும் ஒழுங்கு முறைப்படுத்துதலும்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/1999)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தச் சட்டமுன்வடிவை நான் இங்கே முழுமையாக ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் நிர்வாகம் புரிந்து கொண்டிருக்கக்கூடிய நம்முடைய சென்னைப் பகுதியிலே, மாடுகள்

@ 11-5-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



வைத்துக் கொண்டிருக்கக்கூடிய யாதவர்கள் தங்களுக்கு இடமாற்றம் என்று வருகிறபோது, உடனடியாகச் செய்ய முடியவில்லை; 6 மாத கால அவகாசம் வேண்டுமென்று கேட்டவர்கள், இப்போது இன்னும் 3 மாதம் வேண்டுமெனக் கேட்டிருக்கிறார்கள். அந்த 3 மாதங்களைக் கொடுத்து 9 மாதமாக உயர்த்தி அதற்குள்ளே அவர்கள் இடமாற்றம் செய்ய வேண்டுமென்று ஒரு 'time' கொடுத்திருக்கிறீர்கள். இருந்தாலும் இந்தக் கால அவகாசம்கூட அவர்களுக்குப் போதுமானதாக இல்லாத காரணத்தால், மேலும் 3 மாத காலம் அவகாசத்தை நீட்டிக்கொடுத்து, அவர்களுக்குரிய இடத்தைப் பார்த்து, அவர்களைக் குடியமர்த்துவதற்கான வழிமுறையை இந்த அரசு செய்து கொடுக்குமேயானால், யாதவ குடும்பங்களைச் சார்ந்த, மாடு வளர்த்து, கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய அந்த நண்பர்கள் நிச்சயமாக நமக்கு நன்றியுடையவர்களாக இருப்பார்கள் என்று நான் இந்த அரசுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது 3 மாதம் time கொடுத்திருக்கிற நேரத்தில்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் அவரவர்களுடைய இருக்கையில் தயவுசெய்து அமரவும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 9 மாதம் என்பதை இன்னும் 6 மாதம் நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென்று அருமை நண்பர் அழகிரி சார்பாகக்கூட நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், அதற்குள்ளாக முடியாது. இப்போது அவரைச் சந்தித்திருக்கக்கூடிய நண்பர்களெல்லாம் 6 மாத காலம்—அதைப்போல எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும் அவர்கள் கேட்டிருக்கிறார்கள், 6 மாத காலம்—அவகாசம் வாங்கிக் கொடுங்கள் என்று. ஆகவே 6 மாத காலம் நீட்டித்து, அவர்களைக் குடியமர்த்துவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பல நகரங்களிலே இருக்கக்கூடிய பன்றிகளை ஆங்காங்கு இருக்கக்கூடிய நகராட்சி நிருவாகங்கள், அப்புறப்படுத்தாத காரணத்தினாலே, ஆங்காங்கே 'Brain fever' போன்ற நோய்கள் மற்றும் சுகாதாரக் கேடுகள் எல்லாம் நிறைய வந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக எங்களுடைய வேலூரில்—நான் 1991-லிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து, எவ்வளவோ கத்திக் கொண்டிருக்கிறேன். ஆனால்--பன்றிகளினுடைய பெருக்கம் கிட்டத்தட்ட 30, 40 மடங்கு அதிகமாகி, இப்போது ஆயிரக்கணக்கிலே

பன்றிகள் வேலூரில் இருக்கின்றன. 48 கவுன்சிலர்கள் இருக்கிறார்கள். 48 பன்றிகளைச் சுட்டார்கள் ஒரு முறை. பிறகு 76 பன்றிகளைச் சுட்டார்கள். அதற்குப் பின்னாலே இந்தப் பணிக்கு யாருமே வரவில்லை. காரணம் அங்கேயுள்ள சிக்கலையும் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே பன்றிகளை வளர்ப்பவர்கள் பெரிய இலட்சாதிபதிகளாக இருக்கிறார்கள். அந்த இலட்சாதிபதிகள் யார், யாரை, எங்கே கவனிக்க வேண்டுமோ, அங்கே கவனித்து விடுகிற காரணத்தினாலே உடனடியாக இதைச் செய்ய முடியவில்லை. யாராவது குருவிக்காரர்களை இராணிப்பேட்டையிலிருந்து அழைத்து வந்து சுடுகிறோம். அப்படி சுடக்கூடிய குருவிக்காரர்களை இவர்கள் அடித்துத் துரத்திவிடுகிறார்கள். அது குறித்து காவல் நிலையத்திலே புகார் கொடுத்தாலும் அவர்களுக்குப் பாதுகாப்பு—அந்தப் பன்றிகளைச் சுடக்கூடிய குருவிக்காரர்களுக்கு—கிடைக்காத காரணத்தினாலே, குருவிக்காரர்கள் யாருமே இப்போது பன்றியைச் சுடுவதற்கு வர மாட்டேன் என்கிறார்கள் என்கிற காரணத்தைச் சொல்லி, நகராட்சி நிருவாகம் காலத்தைத் தள்ளிக் கொண்டிருக்கிறது. ஆகவே நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம், ஒருவேளை குருவிக்காரர்கள் வந்து சுடுவதற்குத் தயாராக இல்லாவிட்டாலும்கூட, காவல் துறையினரையோ அல்லது மற்ற ....

***திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லும்போது, யாதவர்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும்தான் மாடு வளர்ப்பதாகச் சொன்னார். அது தவறு. எல்லா சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் வியாபார நோக்கத்தோடு மாடுகளை வளர்த்து பால் விற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான்கூட மாடு வைத்திருக்கிறேன். இருந்தாலும் அதை வைத்துக்கொண்டு தொழிலாகச் செய்து கொண்டிருப்பவர்கள் அவர்கள். நாம் மற்ற தொழிலை வைத்துக்கொண்டு கூட அதையும் வைத்துக்கொண்டிருக்கிறோம். அவ்வளவுதான். அந்தத் தொழிலையே நம்பிப் பிழைத்துக் கொண்டிருக்கிற அந்தச் சமுதாயத்திற்கு நாம் இங்கே முதற்கண் முன்னுரிமை கொடுத்துப் பேச வேண்டியிருக்கிற காரணத்தினாலே பேசிக் கொண்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் செங்கை சிவம் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். மற்ற சமுதாயத்தினரும் மாடுகள் வைத்திருக்கிறார்கள். சில அதிகாரிகளும் மாடுகள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் பெரிய பெரிய Jail Superintendent-ஐப் பார்த்தீர்கள் என்றால், ஜெயிலுக்கு வாங்குகிற புல்லை வைத்துக்கொண்டு, 10,15 மாடுகளை ஆங்காங்கே வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி ஆங்காங்கே அதிகாரிகளே நிறைய வளர்த்துக்கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே நான் செங்கை சிவம் அவர்களுடைய கருத்தை ஏற்றுக்கொள்கின்ற அதேவேளையில், நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, பன்றிகளை ஒழிப்பதற்கான பணியை இந்த அரசு எல்லா நகராட்சிகளிலும் மேற்கொள் வேண்டும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மோகன் கந்தசாமி அவர்கள்கூட திருச்செந்தூர் சென்றபோது, அங்கே பன்றிகள் நிறைய சுற்றிக்கொண்டிருப்பதால், சுவாமி கும்பிடக்கூட நிம்மதியாகப் போக முடியவில்லை என்று குறைபட்டுக்கொண்டார்கள். எனவே பன்றிகளை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்கு இந்த அரசு ஒரு pilot scheme ஆவது போட்டு, ஒரு மாத காலத்திற்குள் அவற்றை அப்புறப்படுத்துவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





*பிற்பகல் 12-20*

அதேபோல நாம் எல்லாவற்றுக்கும் சட்டம் போடுகிறோம். ஆங்காங்கே பாம்புகள் அதிகமாக வந்துவிட்டன. இந்தப் பாம்புகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு ஒரு முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். ஏனென்றால், சமீபத்தில்கூட 15 வயதுப் பையன் பாம்பு கடித்து இறந்துவிட்டான். நான்கூட முதலமைச்சரிடம் மனு கொடுத்திருந்தேன். ஆனால் அவன் குடும்பத் தலைவன் இல்லை என்று சொல்லி நிதி கிடையாது என்று மாவட்ட நிருவாகம் அதைப் புறக்கணித்துவிட்டது. நிதியுதவி செய்யவில்லை. ஆங்காங்கே இருக்கின்ற பாம்புகளைப் பிடித்து, நீங்கள் வெளிநாடுகளுக்குக்கூட தோல் விற்பனைக்காக அனுப்பலாம். அரசுக்கு வருவாய்க்கு ஏதாவது வழியிருந்தால், அதைப்பற்றியும் நீங்கள் யோசித்து, பாம்புகளை முழுமையாகத் தடுக்க முடியாவிட்டாலும், அவற்றைப் பிடிப்பதற்கு ஆட்களைக் கொண்டு வந்து அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும்.

அதேபோன்று குரங்குகள். எங்கு பார்த்தாலும் குரங்குத் தொல்லையினால் வீடுகளில் துணிகளைக்கூட உலர்த்த முடியவில்லை. நகராட்சிகளால் ஆட்களைக் கொண்டுவர முடியவில்லை. குரங்குகள் தொல்லை அதிகமாக இருக்கிறது. *(மணியடிக்கப்பெற்றது)* எனவே, அந்தத் தொல்லையையும் போக்குவதற்கு அரசு உடனடியாக

நடவடிக்கை எடுத்து, நகராட்சியைச் சேர்ந்தவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து, மனித சமுதாயத்திற்கு ஒரு நல்வாழ்வை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1997 ஆம் ஆண்டு இந்த மாமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட மாநகராட்சிப் பரப்பிடங்களிலுள்ள விலங்குகள், பறவைகள் கட்டுப்பாட்டு சட்டத்தினை நடைமுறைப்படுத்துகிறபோது மாநகராட்சிக்கு ஏற்பட்டிருக்கிற நெருக்கடியின் காரணமாகவும், மாநகராட்சி எல்லைக்குள் வாழ்கின்ற பல்லாயிரக்கணக்கான ஏழைகள் கறவை மாடுகளையும், எருமைகளையும் வைத்து பால் வியாபாரம் செய்து வருகின்றனர். அந்த ஏழைகளின் வாழ்க்கையைப் பாதுகாப்பதற்காக சட்டத்தை அமல்படுத்த முனைந்தபோது, அவர்களுக்கு மேலும் கால அவகாசம் கொடுக்க வேண்டியது அவசியம் என்று கருதி மூன்று மாத காலம் இந்தச் சட்டத்திருத்தத்தின் மூலமாக வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. வருகிற மே மாதம் 26 ஆம் தேதியோடு அந்தக் கால அவகாசம் நிறைவுற்று, சட்டத்தை அமலாக்க வேண்டிய நிர்பந்தம் மாநகராட்சிக்கும், நகராட்சிகளுக்கும் ஏற்படும் என்று நான் கருதுகிறேன்.

ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் கேட்டுக்கொண்டதைப் போல, இதற்கு ஒரு கால அவகாசம்—ஆறு மாதம் என்று இல்லாமல்—மேலும் ஆறு மாதம் அல்லது ஒரு வருடம் கொடுக்க வேண்டியது மிகமிக அவசியம் என்றே நானும் வலியுறுத்துகிறேன். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகவும் வலியுறுத்துகிறேன். ஏனென்றால், சென்னை மாநகாத்திலே ஏற்கெனவே பால் வியாபாாம் செய்து வருகின்ற ஏழைகள், மாடுகளை அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கை ஜீவனமாக வைத்திருக்கின்ற ஏழைகளுக்கு என்று ஓர் இடத்தை ஒதுக்கிக் கொடுத்துவிட்டால், அவர்கள் பால் விற்பனை செய்யவோ அல்லது விலங்குகளை அடிப்படையாகக் கொண்ட தொழில் நடத்தவோ வசதியாக இருக்கும். மாநகராட்சியோ அல்லது நகராட்சிகளோ ஊரின் கோடியில் இட ஒதுக்கீடு செய்து கொடுத்தால் வாழ்க்கையில் அவர்களுக்கு சிரமமில்லாமல், இடர்ப்பாடு இல்லாமல் இருக்கும் என்பதை அரசு கருத்தில் கொள்ளவேண்டும். இந்தச் சட்டத்தினுடைய நோக்கம்





உயர்வானது. நகரத்தில் தூய்மை, ஏற்படுத்துவது அதனுடைய அழகை மேம்படுத்துவது ஆகிய நோக்கங்கள் உயர்வானவை. ஆனால் நகரத்தில் தொன்றுதொட்டு வாழ்ந்து வருகின்ற ஏழைகளுடைய வாழ்க்கையைப் பாதுகாக்கின்ற வகையில், அழகுபடுத்தும் முறையை, இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலம் அணுக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் பாம்புகள் பிடிக்கப்பட வேண்டுமென்று ஒரு கருத்தைச் சொன்னார். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சோவியத் யூனியன் ஒன்றாக இருந்தபோது, ஒரு மனிதனைப் பாம்பு கடித்து, அவன் இறந்துவிட்டான்; மனிதனைக் கொல்கின்ற அளவுக்கு விஷப் பாம்பு இருக்கிறது என்று சொல்லி பாம்புகளை அழித்துவிட்டார்கள். அந்த தேசத்தில், பாம்புகளை அழித்ததற்குப் பிறகு, தவளைகளும், எலிகளும் அதிகமாகிவிட்டன. எலிகள் அதிகமாகி விட்டதால், சொத்துக்களுக்குச் சேதாரம் ஏற்பட்டு, இனி பாம்புகளை வளர்க்க வேண்டும் என்ற அவசியம் ஏற்பட்டதாக அந்த அரசு கருதியதாம். ஒரு நெருக்கடி அங்கே ஏற்பட்டது. பாம்பு என்பது விஷமுள்ள பாம்பு என்றாலும் திட்டமிட்டு மனிதனை தாக்குகிற நச்சுப் பாம்புகள் எங்கும் இல்லை. திட்டமிட்டு பாம்புகள் தாக்குவதும் இல்லை, தீண்டுவதும் இல்லை. எனவே பாம்புகளை ஒழிப்பது என்பதை ஒரு தீவிர நடவடிக்கையாக எடுக்கக்கூடாது. பாம்புகள் மனிதரை பாதிக்கின்றபோது நிச்சயமாக அந்தப் பாம்புக்கு முடிவு ஏற்பட்டுவிடும். எனவே அதைப்பற்றி எல்லாம் அரசு சிந்திக்க வேண்டும். இந்தச் சட்டத்தை ஆதரிக்கின்ற அதே நேரத்தில் ஏழைகளுடைய வாழ்க்கையை மனதில் வைத்து 6 மாத அவகாசம் என்ற அளவுக்கு இல்லாமல் ஒரு வருட காலத்திற்காவது உயர்த்தி எல்லோரும் ஏற்கத்தக்க வகையிலே, ஏழைகளுடைய வாழ்க்கை பாதிக்காத அளவிலே உங்களுடைய அணுகுமுறையை, அரசினுடைய அணுகுமுறையை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு சட்டத் திருத்தத்தை ஆதரித்து அமைகிறேன்.

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தின் அடிப்படையில் நாம் விரும்புவது, மாநகராட்சி 3 மாத காலம் அவகாசம்

[திரு. கோ.சி. மணி] [1999 மே 17

வேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் இதைக் கொண்டுவந்தோம். உயர் நீதிமன்றத்தில் இதுசம்பந்தமான வழக்கு ஒன்றும் நிலுவையில் இருக்கிறது. அந்த வழக்கு போடப்படுவதற்கு முன்னாலேயே இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டு மன்றம் தீர்மானித்து அறிவித்ததையொட்டித்தான் இதைக் கொண்டுவந்திருக்கிறோம். நீதிமன்றத்தின் தீர்ப்பு என்னவோ, அது வருகிறவரையில் காத்திருப்பதற்கு இந்த அரசாங்கமும், மாநகராட்சியும் தயாராக இருக்கின்றன.

இதற்கிடையில் மாநகராட்சியின் மூலமாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கமாட்டோம் என்ற உறுதியை இந்த அவையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தரச் சொல்லியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் அந்த உறுதி மொழியை நான் தருகின்றேன். எனவே இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



1999 மே 17] [பேரவைத் துணைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரப் பரப்பிடங்களில் உள்ள விலங்குகள் மற்றும் பறவைகள் (கட்டுப்படுத்துதலும் ஒழுங்கு முறைப்படுத்துதலும்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஏ) தமிழ்நாடு ஹேக்னி வாடகை வண்டிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஹேக்னி வாடகை வண்டிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/1999), மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஹேக்னி வாடகை வண்டிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/1999)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'எங்கும் தமிழ் . எதிலும் தமிழ்' என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற நாம் இன்னும் இதிலே ஹேக்னி சட்டம் என்றே சொல்லிக்கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக இதற்குத் தீர்வு கண்டு ஹேக்னி என்பதற்குச் சரியான தமிழ் வார்த்தையைப் போட்டு சட்டத்தைச் சொன்னால்தான் இதை மக்களிடத்திலே உடனடியாக எடுத்துச் செல்ல முடியும். ஹேக்னி என்று சொன்னால் எங்களுக்கே புரியாமல் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெள்ளைக்காரன் காலத்தில் சொன்னபடி follow செய்கிறார்கள். Dictionary-ல் பார்த்தால் வாடகை வண்டி என்றுதான் இருக்கிறது. வேறு ஒன்றும் இல்லை. ஹேக்னி என்றால் வாடகை என்று அர்த்தம்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஆகவே தமிழ்ப்படுத்துகின்றபோது சரக்குகளை எடுத்துச்செல்லும் வண்டிகளை நெறிமுறைப்படுத்தும் சட்டம் என்றுகூட மாற்றியமைத்து 'ஹேக்னி' என்ற வார்த்தையைப் பயன்படுத்தாமல் இருக்கலாம். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சரக்கு வண்டி என்று மட்டும் போட்டுவிடலாம் என்று சொல்லுகிறார்கள். அப்படியே போட்டு இதை மொழிபெயர்த்துக் கொண்டுவந்தால் நல்லது என்பதை என்னுடைய கருத்தாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்டு வழக்கில் இது மீன்பாடி வண்டி என்று சொல்லப்படுகிறது.

@ 7-5-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'ஹேக்னி' என்பது ஒரு பழைய ஆங்கிலச் சொல். வாடகை வண்டியை பொதுவாகக் குறிக்கின்ற ஒரு வார்த்தையாகத்தான் 'ஹேக்னி' என்ற வார்த்தை உபயோகிக்கப்படுகிறது. மீன் வண்டி வகைக்குக்கூட கிடையாது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவந்திருப்பதை நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் அதேநேரத்தில் ஏற்கெனவே இயற்றப்பட்ட சட்டம் என்று எடுத்துக்கொண்டாலும்கூட ஆட்டோக்களையே இன்னும் நம்மால் சரியாக நெறிமுறைப்படுத்த முடியவில்லை. அதேபோல மீன் வண்டிகள் தாறுமாறாக சென்னை மாநகரத்திலே போய்க்கொண்டிருக்கின்ற காரணத்தால் நிறைய விபத்துக்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. எனவே இதுபோன்ற வண்டிகளை நாம் நெறிமுறைப்படுத்துகின்றபோது, நகரப் பகுதிகளிலே காவல் துறையினரின் தொல்லைக்கு இவர்கள் ஆளாகாமல் பார்த்துக்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நிச்சயமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் எந்தச் சட்டம் வந்தாலும் உடனடியாக காவல் துறையில் சிலபேர் மாமுல் கேட்க ஆரம்பித்தால், அவர்கள் மிகவும் பாதிக்கக்கூடியவர்களாக ஆகிவிடுவார்கள். ஆகவே காவல் துறையிடமிருந்து எந்தவிதமான சிக்கலும் இவர்களுக்கு இல்லாமல் பார்த்துக்கொள்வதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்கிறேன்.

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொன்னதுபோல், பொதுவாக இது வாடகை வண்டிகளைத்தான் குறிக்கின்றது. மீன் வண்டிகளைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த அரசு நடவடிக்கை எடுத்து, அவற்றையெல்லாம் பதிவு செய்ய வேண்டுமென்ற ஏற்பாடுகளையும் செய்து வைத்திருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்து வைத்திருப்பார்கள். ஆனால் இந்தச் சட்டத் திருத்தத்தைப் பொறுத்தவரையில், வாடகை வண்டிச் சட்டத்திலே இதுவரை

[டாக்டர் க. பொன்முடி] [1999 மே 17

விலங்குகள் இழுக்கிற, ஆனால் மனிதர்கள் சவாரி செய்யக்கூடிய வண்டிகளை மட்டுமே குறித்துக்கொண்டிருந்தது. விலங்குகள் மற்றும் மனிதர்கள் இழுக்கிற, பொருட்கள் எடுத்துச் செல்கின்ற வண்டிகளை இந்தச் சட்டத்திலே உட்படுத்தமுடியாமல் இருந்தது. அவ்வாறு பொருட்களையும் இழுத்துச் செல்கின்ற, விலங்குகள் மூலமாக அல்லது மனிதர்கள் மூலமாக பொருட்களை ஏற்றி இழுத்துச் செல்கின்ற வண்டிகளையும் இந்தச் சட்டத்திற்குள் கொண்டுவர வேண்டுமென்பதுதான் இதன் நோக்கம். இதன்மூலமாகத்தான் அவற்றைக் கட்டுப்படுத்த முடியும். இதற்குரிய விதிகளை வருங்காலத்திலே காவல் துறை உருவாக்கும். ஆகவே அதுபோன்ற விதிகளை உருவாக்குகின்ற பொறுப்பு காவல் துறையிடம் இருக்கிறது. சட்டத்திற்குள் கொண்டுவரவேண்டும் என்பதற்காகத்தான் இந்த சட்டமுன்வடிவைக் கொண்டுவந்திருக்கிறோம். ஆகவே இதனை உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.



1999 மே 17] [பேரவைத் துணைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"*1999* ஆம் ஆண்டு தமிழ்நாடு ஹேக்னி வாடகை வண்டிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் *17/1999*) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஏ) தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, *1999* ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் *22/1999*), மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"*1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1999) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்*" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 14-5-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"*1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்*"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஐ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, *1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/1999)*, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"*1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/1999), @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்*".

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

*பிற்பகல் 12-35*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறையின்கீழ் இருக்கக்கூடிய சொத்துக்களுடைய வருவாயை வசூலிப்பதற்கான சட்டத் திருத்த முன்வடிவை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கிறார்கள். கோவில், மடம், தரும ஸ்தாபன நிலையங்களைப் பற்றி சட்டமன்றத்திலே ஏற்கெனவே கருத்துக்கள் சொல்லப்பட்டு விவாதிக்கப்பட்டிருக்கின்றன. அது பற்றிய ஒரு கருத்து இடையிலே இருக்கின்றபோது, ஏற்கெனவே இருக்கின்ற சட்டத்தை வைத்து அதை வசூல் பண்ணுவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. நான் அந்தத் துறை மானியக் கோரிக்கையிலே பேசுகிறபோதுகூட ஒரு கருத்தைக் குறிப்பிட்டுச் சொன்னேன். விவசாயிகளிடமிருந்து வசூல் செய்வதற்கான முறையைக் கையாளுகிறபோது வருவாய் நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டு அதன் மூலமாக குத்தகை விவசாயிகள் நிலத்தை விட்டு வெளியேற்றப்படுகிற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது; அதனால் மிகப் பெரிய பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள் என்ற ஒரு கருத்தை நான் சொல்லி வருவாய் நீதிமன்றங்களைக்கூட மூடிவிட வேண்டும் என்று நான் சொன்னேன். அதைவிட இப்போது கூடுதலாக அதை இரத்து செய்வதற்கான அதிகாரம் வழங்குவதுபோல இந்தக் கருத்து சொல்லப்பட்டிருப்பதும் ஒரு மாவட்ட ஆட்சியருக்கு உள்ள அதிகாரத்தைத் துணை ஆணையர் அந்தஸ்திலே இருப்பவருக்கு வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பது என்பது இப்போது உகந்த கருத்தாக எனக்குப் படவில்லை. ஆகவே இப்போது கோவில், மடம், தரும ஸ்தாபனங்களுடைய நிலங்களைப்பற்றி கருத்து தடுமாற்றத்திலே இருக்கிறபோது இப்படி ஒரு கடுமையான சட்டத்தை நிறைவேற்ற

@ *29-4-1999* ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



வேண்டியது அவசியம்தானா என்ற கேள்வியை நான் முன்வைக்க விரும்புகின்றேன். ஆகவே ஏற்கெனவே இருக்கின்ற அந்தச் சட்டங்களைக் கொண்டே வசூலைப் பெறுவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளலாம்; அதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன. பின்னாலே நல்ல முடிவு எடுப்பதற்கான வாய்ப்பும் சூழ்நிலையும் ஏற்படத்தக்க வகையிலே இந்தச் சட்டமுன்வடிவை இப்போது நிறைவேற்ற வேண்டிய அவசியம் இல்லை, ஒத்திவைக்கலாம் என்ற கருத்தை நான் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கக்கூடிய சட்டத்தின் மூலமாக குத்தகை பாக்கியை வசூல் செய்ய முடியவில்லை என்பது மட்டுமல்ல பல ஆண்டுகளாக, அதாவது கிட்டத்தட்ட 50, 100 ஆண்டுகளாக தன்னுடைய கைவசமே சொத்துக்களை வைத்து, ஆலய, தரும சொத்துக்களை வைத்துக்கொண்டு அதைக் கைமாற்றம் செய்யக்கூடிய முயற்சிகள் ஏற்படுகின்றன. தஸ்தாவேஜுகள், கோப்புகள் அறநிலையத் துறை ஆலயத்திலிருந்து துணை ஆணையருக்குச் சென்று, மாவட்ட ஆட்சியருக்குச் சென்று வர காலதாமதம் ஆகின்ற காரணத்தால் அந்தக் காலதாமதத்தைப் பலர் பயன்படுத்திக்கொண்டு ஆலயச் சொத்துக்களை அல்லது தருமஸ்தான சொத்துக்களை அபகரிக்கக்கூடிய நிலை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு இருக்கிறது. எனவே இந்தச் சட்டம் நிச்சயமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்ற அளவில் நான் இதை வரவேற்கிறேன். இதைவிட சற்றுக் கடினமாக வந்தால்கூட, அதாவது எந்த அளவுக்கு ஆகிவிடும் என்று சொன்னால் ஆலய சொத்துக்கள், தருமஸ்தாபன சொத்துக்கள் என்று சொன்னால் யார் வேண்டுமானாலும் அபகரித்துக்கொள்ளலாம், யாரும் கேட்க மாட்டார்கள், எப்படி வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம் என்ற நிலையை மாற்றி அந்தந்த ஆலயத்திற்கு அந்தந்த ஆலய சொத்துக்களைத் திரும்பவும் வரவழைத்துக் கொடுப்பதற்காக கொண்டுவரப்பட்ட இந்தச் சட்ட முன்வடிவை மனப்பூர்வமாக பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் வரவேற்று அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள், ஏற்கெனவே இருக்கக்கூடிய சட்டங்களே போதும், அதன் மூலம் இருக்கக்கூடிய பாக்கிகளை எல்லாம் நம்மால் வசூல் செய்ய முடியும் என்று சொன்னார்கள். ஆனால் நேற்று 'Sun T.V. கேள்வி நேரத்திலே' அவரும் நானும், சட்ட அமைச்சர் எல்லோரும் பங்கு கொண்டோம். ஏற்கெனவே இருக்கக்கூடிய கோயில் நிலங்களை உழுபவர்களுக்கே கொடுத்துவிடலாம் என்ற அளவில்தான் அவருடைய கருத்துக்கள் இருக்கின்றன. தமிழகத்திலே பல ஆலயங்கள் நிர்வகிக்க முடியாமல், விளக்குகூட எரியாமல் இருந்து கொண்டிருக்கின்றன. இந்த அரசாங்கமே 25,000 ரூபாய் அதற்காக ஒதுக்கித் தந்து பல ஆலயங்களிலே விளக்குகள் எரியக்கூடிய ஒரு திட்டத்தை வகுத்து இப்போது ஆலயங்களை நாம் காப்பாற்றி வந்திருக்கிறோம். மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சொன்னார்கள், ஆண்டவனுடைய பிள்ளைக்கு நிலத்தைக் கொடுத்தால் பிறகு ஆண்டவனுக்கே முதியோர் ஓய்வூதியம் கொடுக்க வேண்டிவந்துவிடுமோ என்னவோ எனக்குத் தெரியவில்லை என்று. கோயில்களுடைய எல்லா நிலத்தையும் கொடுத்துவிட்டோம் என்று சொன்னால், பிறகு கோயில்களுக்கு எந்தவிதமான வழிவகையும் இல்லாமல் போய்விடும். அதைவிட இன்னொரு கருத்தை முக்கியமாக நாம் கருத்தில் கொள்ள வேண்டியது, எனக்கு அண்ணாமலையார் பிடிக்கிறது என்று சொன்னால் நான் 50 ஏக்கர் எழுதி வைத்திருப்பேன். அல்லது எங்கள் ஊரிலே உள்ள முருகன் கோயிலுக்கு என்னுடைய குடும்பத்தார்கள் எழுதி வைத்திருப்பார்கள். ஒரு நம்பிக்கையின் அடிப்படையிலே குறிப்பிட்ட நோக்கத்திற்காக தரும சிந்தனையோடு அதற்குத்தான் அதைப் பயன்படுத்த வேண்டும் என்று நம்முடைய மூதாதையர்கள் அல்லது தனவந்தர்கள் கொடுத்த நிலத்தை நாம் மற்றவர்களுக்குத் தூக்கித் தந்துவிடுவது என்பது நாம் செய்யக்கூடாத ஒன்று. இந்த மாதிரி நிலங்கள் குறித்து எல்லோருடைய கருத்தைக் கேட்டு அதற்குப் பிறகு எடுக்கலாம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எங்களுடைய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தளவில் கோயில் நிலங்களை நாம் காப்பாற்றி வந்தால்தான் ஆலயங்கள் தரும சிந்தனையோடு அந்த இடத்திலே நிலைக்கும் என்பதாகும். ஆகவே தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பிலே பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம் இது கலந்து பேசி நிறைவேற்ற வேண்டிய சட்டம். உண்மையிலேயே வரவேற்கப்படவேண்டிய சட்டம். ஏற்கெனவே இருக்கிற சட்டம்தான். ஏற்கெனவே Revenue Department இதை Revenue Act-ன்கீழ் வசூல் செய்கிறது. ஆனால் Revenue துறையிலே இருக்கக்கூடிய பளுவை அவர்கள் சுமக்க முடியாத காரணத்தால் அவர்கள் அந்தப் பணிக்குச் செல்வதில்லை. ஆகவே இந்து சமய அறநிலையத் துறையில் இருக்கக்கூடிய Deputy Commissioner-க்கு power-ஐக் கொடுத்து கடன் பாக்கியை வசூல் செய்வதற்கு ஒரு புதிய வழிமுறையை இப்போது கண்டிருக்கிறார்கள். ஆகவே இருக்கக்கூடிய சட்டத்தை அப்படியே வைத்திருக்கிறோம். ஆனால், நிறைவேற்றக்கூடிய அதிகாரிகள் மாறுபடுகிறார்கள். அவ்வளவுதான். ஆகவே, அதிகாரிகள் உருப்படியாக—ஏற்கெனவே Revenue துறை செயல்பட்டதுபோல இந்தத் துறையும் செயல்படாமல்— கொஞ்சம் இருக்கக்கூடிய பாக்கிகளை எல்லாம் வசூல் செய்வார்கள் என்று சொன்னால், இது அரசாங்கத்திற்கும் நல்லது, ஆலயத்தின் தரும காரியங்கள் நடைபெற வழிவகுக்கும். ஆகவே நான் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக இதை வரவேற்கிறேன் என்று சொல்லி, அமைகிறேன்.



*பிற்பகல் 12-40*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களும், வேலாயுதன் அவர்களும் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதேபோல் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். அதிலே எனக்கு உடன்பாடுதான். ஆகவே பின்னாலே கலந்துபேசி எடுக்கிற முடிவில் எனக்கு மாறுபட்ட கருத்தில்லை. அப்படிப் பேசி முடிவு எடுப்பதற்கு முன்னாலே இப்போது மேலும் ஒரு கூடுதலான, கடுமையான சட்டத்தை நிறைவேற்ற வேண்டிய அவசியம் இருக்கிறதா என்பதைப் பற்றித்தான் நான் சொன்னேனே தவிர கோயில்களில் வழிபாடுகள், பூஜைகள் நடக்க வேண்டும் என்பதிலே நானும் உடன்படுகிறேன். எனக்கு அதிலே மாறுபட்ட கருத்தில்லை. ஆனால் அதைச்செய்ய இயலாத நிலைக்குக் காரணமாக இருக்கிற பிரச்சினைகள்மீது தீர்வு காண வேண்டும் என்பதுதான்

என்னுடைய கருத்து. பொதுவாக விவாதிக்கப்பட வேண்டும் என்றிருக்கிறது. குறிப்பாக ஒன்றை நான் சொல்கிறேன். நிலங்கள் விற்கப்பட வேண்டும் என்ற கருத்தை நான் சொன்னேன் என்று ஞானசேகரன் குறிப்பிட்டார். ஏற்கெனவே நீதிபதி வீராசாமி அவர்களுடைய தீர்ப்பின்படி திருவாவடுதுறை ஆதீனத்திலே நிலங்கள் விற்கப்பட்டிருக்கின்றன. அதேபோல் நான் குடியிருக்கிற ஊருக்கு அருகிலே இருக்கிற திருக்களவூர் மடத்தினுடைய 100 ஏக்கர் நிலம் விற்கப்பட்டிருக்கிறது. ஆகவே அதையெல்லாம் அப்போது ஏற்றுக்கொண்டுதான் இருந்திருக்கிறார்கள். அது அப்போது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது; நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. அதனுடைய தொகையை வாங்கி கோயில்களில் நிர்வாகம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இதை ஒரு கருத்திற்காகச் சொல்கிறேன். பின்னாலே பரிசீலிப்பதாக சொல்லப்பட்டிருக்கிறபோது, இப்போது ஒரு புதிய சட்டம் தேவையில்லை என்ற கருத்தைத்தான் நான் வலியுறுத்திச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் வேலாயுதன் அவர்களும், இந்தச் சட்டம் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும், கோயிலுக்கான நிலுவைகள் முற்றிலும் தண்டப்பட வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அவற்றை அரசு மனமுவந்து வரவேற்கிறது. அதே நேரத்தில் சிவபுண்ணியம் அவர்கள் அன்று கொடுத்த அதே குரலையே இப்பொழுதும் மீண்டும் முழக்கி இருக்கிறார். இப்போது ஏற்கெனவே இருக்கிற சூழ்நிலைக்கேற்ப அதில் எப்படி முடிவு எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையிலே தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். நானும் மானியக் கோரிக்கையின்போது தெளிவுபடுத்தியிருக்கிறேன். அதற்கெல்லாம் நிறைய காலம் இருக்கிறது. நிதானமாக செய்யப்பட வேண்டிய பணி. ஆனால் உடனடியாக செய்யப்பட வேண்டியது ஏற்கெனவே இருக்கிற நிலுவைகளை தண்டுவதற்கு சட்டத்தைக் கடுமைப்படுத்துவது என்பது தவிர்க்க முடியாதது. அதுமட்டுமல்லாமல், ஏற்கெனவே, 79 (ஆ) என்ற



பிரிவில் காவல் துறையின் துணையோடு நம்முடைய அலுவலர்கள் செயல்படலாம் என்ற அளவிற்கு ஒரு சாதாரண நிலை இருக்கிறது. சில இடங்களில் அப்படி இருக்கிறது. எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமானால், திருவொற்றியூரிலே ஒரு கோயில் நிலத்திலே 150 மீனவர்கள் 15 ஆண்டுகளாகக் குடியிருக்கிறார்கள். எங்களுடைய அலுவலர்கள், அவர்களை வெளியேற்றுவதற்கு நாங்கள் எவ்வளவோ முயன்றும் அவர்களை வெளியேற்ற முடியவில்லை என்று எழுதியிருக்கிறார்கள். இது ஒரு நிலை. இதை செய்திக்காகச் சொல்கிறேன். இதுபோன்று பல நிலைகள் இருக்கின்றன. அதே நேரத்திலே 79 (ஆ) என்ற பிரிவில் ஒரு தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. அப்படி ஆக்கிரமிப்புதாரர் என்று உறுதியாகக் கருதப்பட்டால், உறுதியாகத் தீர்ப்பளிக்கப்பட்டால், அவருக்குக் குறைந்தபட்சம் 3 மாதம் சிறை, அதிக அளவு 5 ஆண்டு சிறை வழங்கலாம் என்று 79 (ஆ) என்ற பிரிவில் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், அதோடு சேர்த்து 5,000 ரூபாய் வரைக்கும், எந்த அளவிற்கு தண்டம் விதிக்கலாமோ அதையும் விதிக்கலாம். அதாவது, சிறைத் தண்டனையும், இந்தத் தண்டம் என்ற தொகையும், இரண்டும் விதிக்கலாம் என்றிருக்கிறது. அதற்கு அடுத்த கட்டத்திலேதான், இப்போது வருவாய்த் துறையிலேதான் ஏதேனும் ஒரு நிலையில் நில வரி தரத் தவறினால் அல்லது நில வருவாயை யாரும் தரத் தவறினால் அதை முற்றிலுமாக நேரிடையாக நின்று களத்தில் இறங்கி வருவாய்த் துறை அலுவலர்கள் செயல்படுத்தி, அந்த நில வரியைத் தண்டுவது அல்லது அதற்குத் தேவையானவற்றை எதிர் நிலையிலே பறிமுதல் செய்வது என்ற சூழ்நிலைகள் கடுமையாக இருக்கின்றன. அதனால்தான் நிலவரி முழுமையாக தண்டப்படுகிறது என்பதை நம்முடைய உறுப்பினர் சிவபுண்ணியம் மறந்துவிடக்கூடாது. எனவே கோயில்களுக்கு இருக்கிற நிலுவைகளைத் தண்டுவதற்கு கடுமையான முயற்சி எடுக்க வேண்டுமென்பது இந்த அரசாங்கத்தினுடைய கடமை என்ற முறையில் இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம். எடுத்துக்காட்டாகச் சொன்னால், 30-6-1998 வரைக்கும் நன்செய் நிலத்தில் மட்டும், 5,927 இலட்சம் ரூபாய் நிலுவை இருக்கிறது. புன்செய் நிலத்தில் 670 இலட்சம் ரூபாய் நிலுவை இருக்கிறது. மனைகளில் 453 இலட்சம் ரூபாய் நிலுவை இருக்கிறது. எனவே இவற்றையெல்லாம் தண்டவேண்டும் என்று சொன்னால், கடுமையான சட்டங்களைப் பயன்படுத்தினால் மட்டும்தான் முடியும். சட்டங்களைக் கண்டு

அஞ்சுபவர்கள் நிச்சயமாக சட்டத்தை மதிப்பவர்களாக இருக்க முடியாது. எனவே சட்டத்தை மதிக்கின்ற குணம் படைத்த சிவபுண்ணியம் அவர்கள், இந்தச் சட்டத்தைக் கண்டு அஞ்சத் தேவையில்லை. உரியதை தண்டினால், உரியவற்றை காலத்தில் சிந்திக்கலாம் என்று கூறி இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு அன்போடு வேண்டிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு *2*, திருத்தங்கள் இல்லை.

பிரிவு *2*, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

பிற்பகல் *12-45*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏறபோரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு *1*, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் *9/1999*) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஒ) தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் மாற்றுதல்) திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல் சட்டமுன்வடிவு, 1999**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, *1999* ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் மாற்றுதல்) திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் *23/1999*), மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

[திரு. க. சுந்தரம்] [1999 மே 17

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் மாற்றுதல்) திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/1999) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2, மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2, மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

@ 14-5-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1999 மே 17]

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் மாற்றுதல்) திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/1999) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ഊ) தமிழ்நாடு பிழைப்பூதியப் படித்தொகை வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிழைப்பூதியப் படித்தொகை வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/1999), மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிழைப்பூதியப் படித்தொகை வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/1999) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

@ 3-5-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**திரு. கே. சுப்பராயன்:** Deputy Speaker, Sir, அடுத்து வரவுள்ள மூன்று சட்டமுன்வடிவுகளையும் விவாதத்திற்கு ஒன்றாக வைத்துவிட்டால் பேசிவிடலாம்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதையொட்டி இருக்கிற மூன்று சட்டமுன்வடிவுகளையும் விவாதத்திற்கு ஒன்றாக எடுத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்தச் சட்டமுன்வடிவும், இதற்கு அடுத்து வரும் மூன்று சட்டமுன்வடிவுகளும் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய துறை தொடர்புடையவை. எனவே கருத்துக்களைக் கூற விரும்பும் உறுப்பினர்கள், இவை அனைத்திற்குமாகச் சேர்த்து, தங்கள் கருத்துக்களைக் கூறலாம். திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிழைப்பூதியப் படித்தொகை வழங்கல் குறித்த சட்டத்தை நான் வரவேற்கிறேன். இப்போதுள்ள நிலைமையில் *3,500* என்பதை *5,000* ஆகக்கூட உயர்த்தி இருக்கலாம் என்பதுதான் என்னுடைய கருத்து.

Shops and Establishments Act-ஐப் பொறுத்தவரையில், அதில் சில மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. இதில் out of Court — அதாவது நீதிமன்றத்தில் இருக்கிற பிரச்சினையை, நீதிமன்றத்திற்கு வெளியிலே தீர்த்துக்கொள்வதற்கான அதிகாரத்தைக் கோருவதாக இது அமைந்திருக்கிறது. அதிலும் பிரச்சினை என்னவென்றால் குற்றச் செயல்களை இணக்கமாகத் தீர்த்துக்கொள்வதற்கு வகை செய்கின்ற, வகைமுறை எதுவும் மேற்சொன்ன சட்டமுன்வடிவில் இல்லை. அப்படியானால், இந்தச் சட்டத் திருத்தம் எவ்வாறு அர்த்தப்படுத்தப் பட்டது என்றால் — குற்றச் செயல்கள் தண்டிக்கப்பட வேண்டியவை. ஆனால் குற்றச் செயல்கள் இணக்கமாகத் தீர்த்துக்கொள்ளப்படுவதற்கு நாம் ஏன் வகை செய்ய வேண்டும்? சட்டத்தின்படி violation இருந்தால் அவர்கள் Magistrate Court-க்குப் போகிறார்கள். அங்கு, Court-லே நடைபெறுகின்ற ஒரு விஷயத்தில் Court-க்கு அப்பால் D.C.L. level-லிலே பிரச்சினையை Settle செய்வதற்கு வழிவகை செய்வது நல்லதல்ல. ஆனால் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புவது, அப்படி ஒரு மாற்றம் செய்ய முடியவில்லை என்றால், ஒருவேளை



அரசு இதை வலியுறுத்துமானால், நான் தெரிவிக்கின்ற மாற்று ஆலோசனை என்னவென்றால், நீங்கள் Court-க்கு அப்பால், ஒரு D.C.L. level-லிலே பிரச்சினையைப் பேசுகிறபொழுது, பேசிய அந்த விஷயத்தையாவது Court-லே கொடுத்து அதற்கு ஒப்புதல் பெறுகிற முறையிலாவது ஒரு மாற்றத்தை ஏற்பாடு செய்ய வேண்டும் என்கிற ஆலோசனையை நான் இந்த விஷயத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் *12-50*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Shops and Establishments Act-ஐப் பொறுத்தவரையில் ஏற்கெனவே இதுபோன்ற வழக்குகளைப் போடக்கூடிய அதிகாரிகள் முறைகேடாக நடந்து கொள்வதாக நிறைய புகார்கள் இருக்கின்றன. இதிலே நாம் compounding of the offences-ஐக் கொண்டுபோய் அவர்களிடத்திலே கொடுத்து சமரசம் செய்துகொள்ளக்கூடிய உரிமையை நாம் கொடுத்து விட்டோம் என்று சொன்னால இது இன்னும் பல முறைகேடான செயல்களுக்கு வழிவகுக்கும். Compounding of the offences-ஐ நாம் தனிப்பட்ட departmental people— இடம் விடுவதைவிட ஏற்கெனவே இருக்கக்கூடிய முறையே தலைசிறந்த முறை. நீதிமன்றங்களிலே போய் அவர்கள் தங்களுடைய வழக்குகளை முடித்துக் கொள்வதுதான் ஓரளவுக்குக் குற்றம் செய்பவர்களை நாம் தண்டிப்பதற்கும் வழிவகை செய்யும்; அதிகாரிகளையும் ஓரளவுக்கு நல்முறைப்படுத்தும். இல்லையென்று சொன்னால், அதிகாரிகள் இந்தச் சட்டத்தைத் தங்கள் கையில் ஏந்திக் கொண்டு, நாங்கள் compound செய்கிறோம், compound செய்கிறோம் என்று சொல்லி பணத்தை வாங்குவார்கள். Compounding fees வாங்குகிறார்களா அல்லது லஞ்சப் பணம் வாங்குகிறார்களா என்று தெரியாமலே போய் விடும். ஆகவே இந்தத் துறையே compounding of the offences-ஐ எடுத்துச் செய்ய தயவுசெய்து வழிவகை செய்யாமல் regular-ஆக நீதிமன்றங்களிலே வழக்கு நடைபெறுவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர், இந்த நான்கு சட்டமுன்வடிவுகளுக்கும் சேர்த்து பதில் சொல்லிவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிழைப்பூதியம் என்பது தற்காலிகமாகப் பணி நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் கொடுக்கிற தொகையை Subsistence Allowance-ஐக் குறிப்பிடும். Supervisory capacity-யிலே உள்ளவர்கள் 500 ரூபாய் சம்பளம் வாங்குகிற நிலையில் இருந்தால்தான் இப்பொழுது இந்தச் சட்டம் அவர்களுக்குப் பொருந்தும். ஆனால் இப்பொழுது ரூ. 1,000-க்கும் மேலே ரூ. 2,000 எல்லாம் சம்பளம் வாங்குகிறார்கள். ஆகையினாலே இந்த உச்சவரம்பை ரூ. 3,500 என்று மாற்றி சட்டத் திருத்தம் கொண்டு வருகிறோம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் ரூ. 5,000 என்கிறார். அதுகுறித்துப் பரிசீலிக்கலாம். எல்லோரும் ஏற்றுக்கொண்டால் தாராளமாகவைத்துக் கொள்ளலாம். அதிலே பிரச்சினையே கிடையாது.

அடுத்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்களும், ஞானசேகரன் அவர்களும், 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் நிறுவனச் சட்டம் பற்றிய திருத்தம் குறித்து சில சந்தேகங்களைக் கிளப்பினார்கள். இதிலே முக்கியமான பிரச்சினை என்னவென்று கேட்டால், ஏராளமான வழக்குகள் நிலுவையிலே இருக்கின்றன. அந்த வழக்குகளுக்கு முடிவு தெரிய காலதாமதம் ஆகிறது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்தச் சட்டத்தின்கீழே inspection — சோதனை— செய்ய முடியாத சூழ்நிலைகள் இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்கிறேன். 1996 ஆம் ஆண்டு முடிவிலே 23,537 வழக்குகள் இருக்கின்றன; 1997 இலே 32,381 வழக்குகள் முடியவில்லை; 1998 இலே 32,447 வழக்குகள் முடியவில்லை.

எனவே இப்படிப்பட்ட சூழ்நிலையிலே நிர்வாகச் சிரமம் இருக்கிற காரணத்தினாலேதான் இந்த இசைவு முறை கொண்டு வரப்படுகிறது. ஞானசேகரன் அவர்கள் வழக்கறிஞர். இந்த இசைவு முறையிலே முறைகேட்டிற்க்கு வழிவகை கிடையாது. காரணம் இந்தச் சட்டத்திலே எது குற்றம் என்று கருதப்படுகிறதோ அதற்கு பத்து ரூபாயா, 20 ரூபாயா -- இன்னும் விளம்பரப் பலகை, பெயர்ப் பலகை வைக்கவில்லை என்றால் 1,000 ரூபாய் என்றுகூடச் சொல்லியிருக்கிறோம். இதிலே Commissioner அவர்கள், இந்த compounding-க்கு, இசைவு மூலமாக Court-க்கு அப்பாலே தீர்க்கப்படுகிற இந்தப் பிரச்சினைக்கு இவ்வளவு தொகை என்று நிர்ணயித்து விடுகிறார். அந்தத் தொகையைத்தான் வசூலிக்க முடியும். சட்டத்தில் எவ்வளவு தொகை இருக்கிறதோ அதற்கு மேல் வசூலிக்க முடியாது. ஆகையினாலே



ஆணையரோ அல்லது ஆணையராலே நியமிக்கப்படுகிற D.C.L., போன்ற அதிகாரிகளோ எல்லா வகையான offence-களுக்கும் இசைவு முறையிலே செலுத்த வேண்டிய தொகை எவ்வளவு என்று ஏற்கெனவே நிர்ணயித்து பட்டியல் கொடுத்து விடுகிற காரணத்தினாலே முறைகேடு எதுவும் இல்லாமல் அந்தப் பட்டியலின் அடிப்படையில் வசூல் செய்து அது அரசாங்கத்திற்குச் செலுத்தப்படுகிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிற குற்றச்சாட்டுக்கு இடமில்லை.

ஆனால் இணக்க முறை என்பதில் Delay ஆகிறது. ஏராளமான வழக்குகள் இருக்கின்றன. காரியங்களை ஆற்ற முடியவில்லை. ஆகையினால்தான் நான் இதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே மற்ற சட்டங்களைப் பொறுத்தமட்டில் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கருத்துக்கள் சொல்லவில்லை என்று சொன்னாலும்கூட, குறிப்பாக, தமிழ்நாடு தொழில் நிறுவனம் தொழிலாளர்களுக்குப் பதவி நிரந்தர அந்தஸ்து வழங்குகிற சட்டத்திலேயும் இதே நிலைமைதான் உள்ளது. இப்பொழுது 1,000 ரூபாய் சம்பளம் வாங்குகிறவர்களுக்கு மட்டும்தான் இந்தச் சட்டம் applicable என்ற நிலைமை இருக்கிறது. இப்போது அந்த ceiling-ஐ நாம் enhance செய்து அதை 3,500 ரூபாய் என்று வைத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள், இன்னும் தொகையை உயர்த்த வேண்டுமென்று சொன்னாலும் உயர்த்தலாம் என்று சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன்.

பிற்பகல் 12-55

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் என்ன ஆலோசனை சொல்கிறேன் என்றால், out of Court என்று வருகிற காரணத்தால், இணக்கமான முறையில் பிரச்சினைகளைப் பேசி, அந்தப் பிரச்சினைகளை அவர்களே தீர்த்துக்கொள்ளாமல். தீர்க்கப்பட்ட விஷயங்களைக் குறித்து, நீதிமன்றங்களுக்குத் தெரிவித்து, ஒப்புதல் பெறுகிற முறையில் ஒரு மாற்று ஏற்பாடு செய்யப்படுமா என்றுதான் நான் கேட்டேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கருத்து நடைமுறைக்குச் சாத்தியமா என்பதை அரசு கவனத்தில் கொண்டு பரிசீலிக்கும்.

[1999 மே 17

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் எனறு கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிழைப்பூதியப் படித்தொகை வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு



1999 மே 17] [திரு. அ. இரகுமான்கான்]

எண் 11/1999) நிறைவேற்றப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஔ) தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/1999), மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/1999) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@ 3-5-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/1999) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஆறு) தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் [வேலையாட்களுக்கு நிலையான தகுதி (அந்தஸ்து) வழங்குதல்] திருத்தச் சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் [வேலையாட்களுக்கு நிலையான தகுதி (அந்தஸ்து) வழங்குதல்] திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/1999), மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் [வேலையாட்களுக்கு நிலையான தகுதி (அந்தஸ்து) வழங்குதல்] திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/1999) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்." எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

---

@ 4-5-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவில் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் [வேலையாட்களுக்கு நிலையான தகுதி (அந்தஸ்து) வழங்குதல்] திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/1999) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.





**(ஆஆ) ஊதியம் வழங்கல் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/1999), மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

பிற்பகல் 1-00

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/1999) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@ 7-5-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/1999) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஏ) தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்பு திருத்தச் சட்டமுன்வடிவு, 1999 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு.



"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்பு திருத்தச் சட்டமுன்வடிவைப் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/1999) பேரவையில் ஆய்வு செய்ய, மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்."

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (அஇ) தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்பு திருத்தச் சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல். 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்பு திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/1999), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்பு திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/1999) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், சுருக்கமாகப் பேச வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நிதி நிறுவனங்களை பலபேர் தமிழகத்திலே ஏற்படுத்தி, கோடிக்கணக்கான ரூபாயை கொள்ளை அடித்து சிறைக் கம்பிகளை எல்லாம் சில பேர் எண்ணினார்கள்; சிலபேர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னும் முழுமையான நிவாரணம் கிடைக்கவில்லை என்பது வருந்தத்தக்க செய்தியாக இருக்கிறது. ஏற்கெனவே இந்தச் சட்டத்தை நாம் நிறைவேற்றி, இதற்கு ஜனாதிபதியினுடைய assent எல்லாம் பெற்று பிறகு வந்திருந்தாலும்கூட, தனி நீதிமன்றங்களை இன்னும்

@ 4-5-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

அமைக்கவில்லை. தனி நீதிமன்றங்களிலே ஏற்கெனவே இந்த வழக்கை நடத்திக் கொண்டிருக்கிறபோது, பணத்தையெல்லாம் இழந்தவர்கள் உடனடியாக பணத்தைப் பெற முடியாமல், அப்படியே அவர்களுடைய Deposit-கள் எல்லாம் நீதிமன்றங்களிலே இப்போது முடங்கிக் கிடக்கின்றன. அப்படி முடங்கிக் கிடக்கக்கூடிய பணத்தை உடனடியாக written-off property என்ற வகையிலே ஒரு வழிவகையைக் கண்டு, அவர்களுக்கு, விசாரணை முடிவதற்கு முன்பாகவே, இடைக்காலத்தில் அந்தப் பணத்தை அவர்களுக்குக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். ஏனென்றால் இப்போதெல்லாம் stay-வை absolute செய்வதற்கு, நீங்கள் 15 நாட்கள், 30 நாட்கள் என்று வைத்திருக்கிறீர்கள். அதனால் அவர்களுக்கு பணம் உரிய முறையில் போய்ச் சேருவதில்லை. ஆகவே அந்தப் பணம் உடனடியாகக் கிடைப்பதற்கு -- ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதைவிட இன்னொரு சட்டத்தை நாம் கொண்டுவர வேண்டும். இவ்வளவு பெரிய சட்டத்தை நாம் இயற்றியிருந்தாலும்கூட இன்னும் நிறைய பேர் நிதி நிறுவனங்களை தமிழகத்திலே நடத்தி, இன்னும் மோசடி வேலையிலே ஈடுபட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். பொது மக்களுக்குச் சரியான விழிப்புணர்ச்சி இன்னும் ஏற்படவில்லை. இன்னும்கூட, படித்தவர்கள், பேராசிரியர்கள், பெரிய பெரிய தனவந்தர்கள் எல்லாம் பணத்தை அதிலே deposit செய்துவிட்டு ஏமாந்து கொண்டேயிருக்கிறார்கள். அன்றாடம் செய்தித்தாள்களிலே பார்க்கிறபோது 'நிதி நிறுவன மோசடி' என்று சொல்லி வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. எனவே அதைத் தடுத்து நிறுத்துவதற்கான முழு முயற்சியையும் இந்த அரசாங்கம் கடுமையாக மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்போது, Public Prosecutor-ஐ எப்படி appoint செய்வது என்பதற்கான வழிமுறைகளையெல்லாம் சொல்லியிருக்கிறீர்கள். இருந்தாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக deposit பணம் எல்லாம் போய்ச் சேருவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டும். இல்லையென்று சொன்னால், இந்த Special Court முழு மூச்சோடு வேலை செய்து 3 மாத காலத்திலே, trial எல்லாம் முடிந்து அந்தப் பணம் அவர்களுக்குப் போய்ச் சேருவதற்கும், குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

* **திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே தனியார் நிதி நிறுவனங்களில் வைப்பீடு செய்திருந்த பொது மக்கள் ஏறத்தாழ ஒரு இலட்சம் பேர் பாதிக்கப்பட்டு ஏறத்தாழ 250 கோடி ரூபாய்க்கு மேலாக சூறையாடப்பட்டு இருக்கிறது என்கிற செய்தியை நாம் அனைவரும் அறிவோம். அப்படி தனியார் நிதி நிறுவனங்களுடைய விளம்பரங்களையும், வேறு வகையான ஆசை வார்த்தைகளையும் நம்பி ஏமாந்த மக்களைப் பாதுகாக்கின்ற வகையில் 1997 ஆம் ஆண்டிலேயே இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது என்றாலும், அதன் மூலம் நிவாரணம் கிடைக்காமல் இப்போதும் இலட்சக்கணக்கான பேர் பரிதவித்துக் கொண்டிருக்கிற சூழ்நிலையை மாற்றத்தக்க வகையில், நடவடிக்கையை வேகப்படுத்துகின்ற வகையில் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வந்திருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக ஆதரிக்கிறேன். இப்படிச் சட்டத் திருத்தம் கொண்டு வருகிறபோது, நம்பிக்கையூட்டுகிற வகையில் நம்பிக்கையை நடைமுறையிலே உறுதிபடுத்துகிற வகையில் அரசின் செயல்பாடுகள் அமைவதில்லை என்கிற துரதிருஷ்டத்தை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். சட்டம் வேகமாக தன் கடமையைச் செய்வதற்காக, திருத்தங்களோடு வருகிறது. அந்தச் சட்டத் திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதிலேயும் இந்த அரசு அக்கறை செலுத்த வேண்டுமென்று வலியுறுத்தி இந்த சட்டத் திருத்தத்தை ஆதரித்து, அமைகிறேன்.





பிற்பகல் 1-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நிதி நிறுவனங்கள் செய்த மோசடி காரணமாக, அந்த நிதி நிறுவனங்களுடைய உரிமையாளர்களுடைய சொத்துக்களை நாம் முடக்கி வைத்திருக்கிறோம். வீடு, கார் மற்றும் பல நகைகள் போன்றவைகளை முடக்கி வைத்திருக்கிறோம். அதிலே வீடுகள், வாகனங்கள் போன்றவை முறையான பாதுகாப்பு இல்லாமல் இருக்கின்றன. அதாவது, இப்போது எந்த அளவிற்கு விலை பெறக்கூடியதாக இருக்கிறதோ, அந்த அளவிற்கு காலப்போக்கில் விலை பெறக்கூடிய சூழ்நிலை இல்லாமல் ஆகிவிடுமோ என்று தோன்றுகிறது. எனவே அதன் மூலமாக நமக்குக் கிடைக்க வேண்டிய பணம் கிடைக்காமல் போய்விடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. ஆகவே அப்படி முடக்கி வைத்திருக்கின்ற பொருட்களையெல்லாம் சரியான முறையிலே பாதுகாத்தால்தான், வழக்குகள் எல்லாம் முடிந்து வருகிற காலத்தில் உத்தேசிக்கக்கூடிய விலையைப் பெறக்கூடிய சூழ்நிலை

ஏற்படும். பாதிக்கப்பட்டவர்களுக்கு அந்த நிதியைப் பெற்றுக் கொடுப்பதற்கான ஒரு முக்கிய மூலதனமாக அவற்றைக் கருதி, முடக்கி வைக்கப்பட்டிருக்கும் சொத்துக்களை அரசாங்கம் பாதுகாத்து வைக்க வேண்டும்; அல்லது இப்போதே அதை விலைக்குக் கொடுத்து, அந்தப் பணத்தை ஒரு வைப்பு நிதியாக வங்கியில் போட்டு வைக்கக்கூடிய அளவிற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதி நிறுவனங்கள் மோசடி குறித்து, இந்த அரசு முறையாக நல்ல நடவடிக்கை எடுத்து வருவதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேசமயத்தில் அந்த நிதி நிறுவனங்களில் வைப்பீடு வைத்திருப்பவர்கள், அவர்கள் செலுத்திய தொகையைத் திரும்பப் பெறுவதற்கு மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது. இதனால் மக்கள் நீதியின்பால் வைத்துள்ள நம்பிக்கையை இழக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏதாவது புகார் கொடுத்தால், அவர்கள் I.P. கொடுத்துவிடுவார்கள், நமக்கு பணம் கிடைக்காது என்ற நிலைகூட ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்தக் காலதாமதத்தைப் போக்கி உடனடியாக அவர்களுக்கு நிதி கிடைக்க ஆவன செய்ய வேண்டும். சில நிதி நிறுவனங்களை நாம் தடை செய்திருந்தாலும், நிதி நிறுவனங்களின் சார்பாக அவர்கள் கொடுத்துள்ள சொத்துக்கள் அதிகமாக இருக்கின்றன; கொடுக்க வேண்டிய தொகை மிகக் குறைவாக இருக்கிறது. இந்த மாதிரி நிறுவனங்களில், அதிகமான அளவுக்குச் சொத்துக்களை நாம் முடக்கம் செய்து வைத்திருக்கிறோம். அந்தச் சொத்துக்களை உடனடியாக எடுத்து, சமாதானப் பேச்சு வார்த்தையின் மூலமாக வைப்பீட்டாளர்களுக்கு தொகையினை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டத் திருத்தத்தை வரவேற்று, ஆதரித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதி நிறுவனங்களின் மோசடியைத் தடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்த அரசு 1997-ல் முனைப்போடு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது. அந்தச் சட்டத்தைத் தீவிரமாக, வேகமாக



அமல் நடத்த வேண்டும் என்பதில் இரண்டுபட்ட கருத்துக்கு இடமில்லை. அந்தச் சட்டம் அமலாக்கப்படுவதற்கு இந்த அரசு எவ்வளவு முயற்சிகளை எடுத்து இருக்கின்றது என்பதை இந்த மாமன்றம் தெரிந்துகொள்ள, கடமைப்பட்டிருக்கிறது. 59 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. 1,12,197 புகார்கள் அரசுக்கு வந்திருக்கின்றன. இவற்றில் மோசடிக்கு உள்ளான பணம் எவ்வளவு என்றால் 231.4 கோடி ரூபாய். இதிலே இந்த நிதி நிறுவனங்களுக்கு என்ன சொத்து இருக்கிறது என்பதைக் கண்டறிவதற்குச் சென்றபோது 386.98 கோடி ரூபாய் சொத்துக்கள் அவர்களுக்கு இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இன்றையதினம் அரசு அதனுடைய பற்றுகை, அதாவது attachment எவ்வளவு இருக்கிறது என்றால் 306.21 கோடி ரூபாய்; இன்றையதினம் அரசாங்கம் attach செய்திருக்கிறது. இதிலே 7 நிதி நிறுவனங்கள் பணத்தைக் கொடுப்பதற்கு முன்வந்துவிட்டன. அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக, பணத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. 3 நிதி நிறுவனங்கள் மீது நடவடிக்கை கைவிடப்பட்டுவிட்டது. ஏனென்றால் பணத்தை எல்லாம் அவர்கள் கொடுத்துவிட்டார்கள். இன்னும் மற்றவர்கள்மீது நடவடிக்கைகள் எல்லாம் துரிதமாக எடுக்கப்பட்டிருக்கின்றன. இன்றையதினம் விசாரணையில் இருக்கிற வழக்குகள் 19 ஆகும் என்று இந்த மாமன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 3 வழக்குகளில் விசாரணையே முடிந்துவிட்டன என்றாலும் உயர்நீதி மன்றத்திலே stay வாங்கியிருக்கிறார்கள். அதாவது நாம் நிறைவேற்றிய இந்தச் சட்டத்தையே எதிர்த்து, இது செல்லத்தக்கதா என்று வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். அதற்கு சென்னை உயர்நீதிமன்றம் தடை கொடுத்திருக்கிறது. தடை கொடுத்திருக்கின்ற காரணத்தால், முடிந்த 3 வழக்குகளில் கூட தீர்வு சொல்ல, முடியாத நிலையெல்லாம் இருக்கிறது. நான் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவதெல்லாம், அரசைப் பொறுத்தளவில் எந்தத் தயக்கமும், தடுமாற்றமும், காலதாமதமும் நிச்சயமாக இல்லை. நம்முடைய சட்ட நடைமுறையில் இருக்கிற பலவீனத்தைப் பயன்படுத்துகிறார்களே என்பதைத் தவிர அரசு இதிலே முனைப்போடு செயல்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே அந்த அடிப்படையிலேதான் இன்றையதினம் இருக்கின்ற வழக்கறிஞர்கள் — இப்போது சென்னையிலே ஒரு தனி நீதிமன்றம் இருக்கிறது. அதேநேரத்திலே பிற மாநிலங்களிலும் இது தொடர்பாக 4 வழக்குகளுக்கு மேல் இருக்கின்றன. எனவே இருக்கின்ற வழக்கறிஞர்கள்

[திரு. ஆலடி அருணா] [1999 மே 17

— போதாது என்ற அடிப்படையில்தான் மேலும் வழக்கறிஞர்களை நியமிப்பதற்காக ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இப்போது ஜப்தி செய்வதற்கு அரசாங்கத்திலே order போடுகிறோம். Competent authority என்று சொல்கின்ற ஆணையாளர் அதைப் பரிசீலிக்க வேண்டிய நிலை இருக்கிறது. அவர் பரிசீலித்து அதற்குப் பிறகு Court-லேயிருந்து ஆணை பெறுகிறார். அதற்கு அவகாசம் போதாது. ஏனென்றால் விசாரிக்க வேண்டியிருக்கிறது — சொத்து எங்கேயிருக்கிறது என்பதையெல்லாம் பார்த்து அதனுடைய மதிப்புகளையெல்லாம் கழித்து — இதற்கு காலம் போதாது என்ற காரணத்தினாலேதான் 15 நாட்களை நாம் 30 நாட்களாக உயர்த்தியிருக்கிறோம்; காலதாமதப்படுத்துவதற்காக அல்ல. நீதிமன்றத்திலே ஒரு வழக்கில் நாம் attachment-ஐக் கேட்கும்போது நியாயமான பதில் கிடைக்காத ஒரு நிலை ஏற்பட்டுவிடும். அதையெல்லாம் தவிர்ப்பதற்காகத்தான் இப்போது கொண்டு வந்திருக்கிறோம். எனவே உங்களுடைய கருத்துகளுக்கேற்ப அரசு தீவிரமாக, முனைப்போடு செயல்படுகிறது என்பதைச் சொல்லி இந்தத் திருத்தத்தை நிறைவேற்றித் தரும்படி அன்போடு வேண்டிக்கொள்கிறேன்.

**பிற்பகல்** 1-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



1999 மே 17] [பேரவைத் துணைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்பு திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/1999) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(அ ஈ) தமிழ்நாடு வழக்குரைஞர்களுக்கான எழுத்தர்களின் நல நிதிச் சட்டமுன்வடிவு, 1999**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்களுக்கான எழுத்தர்களின் நல நிதிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/1999), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்களுக்கான எழுத்தர்களின் நல நிதிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1999)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குழந்தை தமிழரசன்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இருக்கின்ற வழக்கறிஞர்களுடைய எழுத்தர்களின், நலனுக்காக நல நிதியம் ஒன்று அமைப்பதற்காக தமிழக அரசால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவை நான் மனதார வரவேற்கிறேன். தமிழகத்திலே வாழ்ந்துகொண்டிருக்கின்ற வழக்கறிஞர்களின் குமாஸ்தாக்களுடைய குடும்பங்களின் சார்பாக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்தச் சட்ட முன்வடிவை கொண்டு வந்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது தமிழகத்திலே இருக்கின்ற வழக்கறிஞர்களின் எழுத்தர்களுடைய பல ஆண்டுகாலக் கோரிக்கை. 1996 ஆம் ஆண்டு இந்தச் சட்டமன்றத்திலே பேசுகின்றபோது இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி நான் பேசினேன். வழக்கறிஞர்களுடைய எழுத்தர்களுக்கென நல நிதியம் அமைக்க வேண்டுமென்று, குமாஸ்தாக்களிடமிருந்து தொடர்ந்து கோரிக்கை வந்திருக்கிறது என்று. எனவே இதையெல்லாம் அரசு மனதிலே கொண்டு, அமைச்சர் அவர்கள் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதுகுறித்து அரசுக்கு ஒரு வேண்டுகோள். குமாஸ்தாக்களிடமிருந்து பெறுகின்ற தொகையைத்தான் நாம் அவர்களுக்குத் திரும்பக் கொடுப்பதற்காக இதிலே வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. எனவே

@ 14-5-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



இந்த நல நிதியத்திற்கு அரசின் சார்பாக குறைந்தது 10 இலட்சம் ரூபாயை முன்பணமாக அரசு வழங்கி, இந்த நல நிதியைத் தொடங்கி வைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, இந்தச் சட்டமுன்வடிவை ஆதரித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

பிற்பகல் 1-15

***திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை ஆதரித்து நான் ஒரேயொரு கருத்தைக் கூற விரும்புகிறேன். 1989, 1990-91 ஆம் ஆண்டுகளில் நான் சட்டமன்றத்தில் இருந்தபோது Advocates' Welfare Fund என்று வழக்கறிஞர்கள் நல நிதிக்கான ஒரு சட்டமுன்வடிவை அப்போது சட்டத் துறை அமைச்சராக இருந்து மறைந்த மாண்புமிகு சாதிக்பாட்சா அவர்கள் கொண்டு வந்தார்கள். அப்போது வழக்கறிஞர்களுக்கு 30 ஆயிரம் ரூபாய் maximum என இருந்தது. அதை ஒரு இலட்சமாக உயர்த்த வேண்டுமென்றும், அதே நேரத்தில், வழக்கறிஞர்களுக்கு உறுதுணையாக இருக்கின்ற வழக்கறிஞர்களுடைய எழுத்தர்களுக்கு ஒரு நல நிதியம் அமைக்க வேண்டுமென்றும் அப்போது நான் கோரிக்கை வைத்தேன். மாண்புமிகு சாதிக்பாட்சா அவர்கள் அதை, கொள்கையளவிலே ஒத்துக் கொண்டார்கள். இன்று நிச்சயமாக அவர்கள் இருந்திருந்தால் மகிழ்ச்சி அடைந்து இருப்பார்கள். இதற்காக இதை நான் வரவேற்கிறேன். இதிலே ஒன்றே ஒன்று. இப்போது வழக்கறிஞர்களின் Registered Association இருக்கிறது. நாங்கள் Bar Council-லில் உறுப்பினராக இருக்கிறோம்; என்றைக்கு வேலைக்கு வருகிறோமோ அல்லது என்று நாங்கள் வழக்கறிஞர் தொழிலை ஆரம்பிக்கிறோமோ அன்று Bar Council-லில் நாங்கள் Register செய்துவிட்டு வருகிறோம். அதற்கான ஆவணம் வழக்கறிஞர் சங்கத்திலே இருக்கிறது. குமாஸ்தாக்களைப் பொறுத்தவரையில், அவர்கள் யாரிடத்திலேயாவது குமாஸ்தாவாக இருப்பார்கள். சில பேர் touts என்று சொல்லப்படுகின்ற இடைத்தரகர்களாக இருக்கிறார்கள். ஆகவே இதிலே சட்டம் அதை define செய்கின்றபோது, Section 2(c) 'Advocates' Clerk' means a clerk employed by an Advocate and recognised by such authority and in such manner.." என்று இருக்கிறது. இது அந்தச் சங்கத்திலே ஒரு பட்டியலைப் பெறுவதற்கு உதவுமே தவிர,

வழக்கறிஞர்களிடத்திலே அவர்கள் உண்மையிலேயே குமாஸ்தாக்களாக இருக்கிறாரா என்பதை அறிய முடியாது. ஆகவே இன்றைக்கு இருக்கிற சட்டம் என்ன சொல்கிறது என்றால், வழக்கறிஞர் சட்டத்திலே, ஒரு வழக்கறிஞர் இருந்தால், அவரிடத்திலே குமாஸ்தா வேலை பார்த்தால், அவர் அந்த வழக்கறிஞரிடத்திலே பதிவு செய்துகொள்ள வேண்டும்; அதாவது District Judge அதிலே கையெழுத்திட்டு, அதற்காக ஒரு ஆவணத்தை வைப்பார். ஆகவே அந்த செக்ஷன் 2 (சி) "Advocates' Clerk" means a clerk என்பதைவிட, "a registered clerk under employment of an Advocate" என்று திருத்திக்கொண்டால், இது misuse ஆகாமல் இருப்பதற்கு வழியாக இருக்கும். இந்தச் சட்டத்தை வழக்கறிஞர் என்ற முறையில் மனதார வரவேற்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர்களுடைய எழுத்தர்களுக்காக நல நிதியைக் கொடுப்பதற்காகக் கொண்டுவரப்படக்கூடிய இந்தச் சட்ட முன்வடிவை தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி சார்பாக நான் வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆனால், இந்தச் சட்டத்தை முறைப்படுத்துகிறபோது touts-ஐ அதாவது இடைத்தரகர்களை முழுமையாக ஒழிப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். சில நேரங்களிலே வழக்கறிஞர்களைவிட, இந்த இடைத்தரகர்கள்தான் நிறைய பேர் இன்று சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களால்தான் பிரச்சினைகளே பல நீதிமன்றங்களில் வந்துகொண்டு இருக்கின்றன. ஆகவே, Advocates' Clerk என்கிற போது முறையாக வழக்கறிஞரிடம் பணியாற்றிக்கொண்டு இருப்பவருக்கு ஒரு பதிவு முறையை உருவாக்கி அவர்களுக்குத்தான் இந்தப் பணம் போய்ச் சேர வேண்டும். என்ற அத்தகைய நிலையை உருவாக்க வேண்டும். நான் கேட்டுக்கொள்வதெல்லாம், அவர் இறந்தால் ரூ. 50,000 கொடுப்பதற்காக இப்போது சட்டத்திலே வழிவகை செய்யப்பட்டு இருக்கிறது. ஆனால் ரூ. 50,000 என்பது போதாது. 2 ரூபாய் நாம் Court Fee அவர்களுக்காக வசூல் செய்து, பிறகு அதிலிருந்து கொடுக்கக்கூடிய நிலை இருக்கிறது. Section 12-ன்கீழ் இருந்து Advocate Clerk Welfare Fund என்று 2 ரூபாய்க்கு ஒரு stamp ஒட்ட வேண்டும் என்று போட்டு இருக்கிறார்கள். அதை 5 ரூபாயாகக்கூட நாம் வசூலித்து, ஒரு Advocate's Clerk இறந்தால் ஒரு இலட்சம் ரூபாயாவது கொடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல 30 ஆண்டு காலம் ஒருவர் குமாஸ்தாவாக இருந்தால், அவருக்கு 30 ஆயிரம் ரூபாய்; 29 ஆண்டு காலம் இருந்தால், அவருக்கு 29 ஆயிரம் ரூபாய் என்று வருடத்திற்கு ஆயிரம் என்று போட்டு இருக்கிறீர்கள். அது போதாது. ஆகவே அவர் இறந்தாலும் சரி அல்லது அவர் ஓய்வு பெற்றாலும் சரி, குறைந்தது ஒரு இலட்சம் ரூபாயாவது அவருக்குக் கொடுக்கக்கூடிய வகையில் இதைக் கொண்டுவர வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.





*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

அதேபோல வழக்கறிஞர்களுக்காக ஏற்கெனவே சட்டம் வந்து, அவர்களுக்கும் நிதி போதாது என்று கூறிக்கொண்டு இருக்கிறார்கள். Advocates' Welfare Fund-ஐயும் நாம் 5 இலட்சம் ரூபாய்க்கு உயர்த்த வேண்டும். Advocates' Clerk-க்கிற்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கு உயர்த்த வேண்டும். அதற்கு மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் வழிவகை காண வேண்டும் என்று கேட்டு, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

*பிற்பகல் 1-20*

* **திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர்களுக்கான எழுத்தர்களின் நலன் காக்க அரசு கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்ட முன்வடிவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் வரவேற்கிறேன், ஆதரிக்கிறேன். தமிழ்நாடு முழுவதும் இந்த வழக்கறிஞர்களின் எழுத்தர்களாக இருக்கக்கூடிய ஏறத்தாழ ஒரு இலட்சம் பேருக்கு இதுவரையிலும் எந்தவிதமான சட்டப் பாதுகாப்பும் இல்லை. இப்போதுதான் முதன்முறையாக சட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது என்ற அளவில் வழக்கறிஞர்களுடைய குமாஸ்தாக்கள், எழுத்தர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு இந்தச் சட்டத்தை வரவேற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதிலே சில திருத்தங்கள் செய்ய வேண்டுமென்கிற அவர்களுடைய கருத்தை நான் இங்கே எதிரொலிக்க விரும்புகிறேன். வழக்கறிஞர்களுக்காக இந்தச் சட்டத்திலே ஒரு நிதியம் ஏற்படுத்துவதற்கான வழிவகை செய்யப்பட்டு இருக்கிறது. அதிலே வழக்கறிஞர்களுடைய எழுத்தர்கள் பிரதிநிதிகளாக மூன்றே மூன்று பேர் மட்டும்தான் இருக்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மற்றவர்களைப் பார்த்தீர்களேயானால், Bar Council தலைவரிலிருந்து பதவி வழியாக உறுப்பினர் என்ற முறையிலே இடம் பெறுபவர்கள்தான்

அதிகமாக இருக்கிறார்கள். அதிலே திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் இருப்பதாக நான் கருதுகிறேன். குமாஸ்தாக்களிலிருந்து பொருளாளர் ஒருவர் நியமிக்கப்படுகிறார் என்ற உத்தரவாதம் இந்தச் சட்டத்திலே தெரிவிக்கப்பட்டிருந்தாலும், தமிழ்நாடு அளவிற்கு 3 உறுப்பினர்கள் என்பது போதுமான அளவிற்கு இல்லை. பதவி வழி உறுப்பினர்களைவிட அவர்கள் சிறுபான்மை என்ற அளவிலேதான் இருக்கிறார்கள் என்பதைக் கருத்திலே கொண்டு, தமிழ்நாட்டில் சென்னை நகரத்திலேயிருந்து ஒருவருமாக, மற்றப் பகுதிகளிலேயிருந்து இருவருமாக மொத்தம் 3 பேர்கள் என்று இருப்பதை, மேலும் இரண்டு பேர்களைச் சேர்த்து 5 உறுப்பினர்கள், குமாஸ்தாக்கள் பகுதியிலேயிருந்து இடம் பெறுவதற்கு இந்தச் சட்டத்திலே வழிவகை செய்யப்பட வேண்டுமென்று நான் வலியுறுத்துகின்றேன்.

அதுபோல இங்கே உறுப்பினர் விண்ணப்பக் கட்டணம் 50 ரூபாய், அனுமதிக் கட்டணம் 50 ரூபாய், பிறகு ஆண்டுதோறும் புதுப்பிக்க வேண்டிய கட்டணம் என்ற அடிப்படையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த விண்ணப்பக் கட்டணத்தைக் குறைப்பதற்கும் அல்லது விண்ணப்பக் கட்டணமோ அல்லது அனுமதிக் கட்டணமோ இதில் ஏதேனும் ஒன்றை மட்டும் வைத்துக்கொண்டு, ஒன்றை எடுத்துவிடவும் வாய்ப்பிருக்கிறதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும். ஆண்டுதோறும் 1,000 ரூபாய் செலுத்தக்கூடிய இந்த எழுத்தர்களுக்கு (குறுக்கீடு) ஒரே ஒரு முறை மட்டும்தான் என்றாலும் 1,000 ரூபாய் என்பதை இரண்டு தவணைகளாக, இரண்டு சம தவணைகளாகச் செலுத்துவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருப்பதை மாற்றி, 4 தவணைகளாகப் பிரித்துச் செலுத்துவதற்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் குழந்தை தமிழரசன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இது வழக்கறிஞர்களின் குமாஸ்தாக்கள். ஒட்டக்கூடிய முத்திரை, stamp-லிருந்து கிடைக்கக்கூடிய நிதியை மட்டும் ஆதாரமாகக் கொண்டு இயங்கக்கூடிய நிதியமாக இல்லாமல், அரசும் ஒரு பங்களிப்பு செலுத்த வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, ஈரோட்டிலே பணியாற்றக்கூடிய வழக்கறிஞரின் எழுத்தர் ஒருவர், அவருடைய பணி நிமித்தமாக மதுரைக்குச் சென்று பணியாற்ற விரும்பினால், அப்போது அவருடைய `service continuity' பணித் தொடர்ச்சி என்பது எந்த அளவிலே வரைமுறைப்படுத்தப்படும் என்பதுபற்றியெல்லாம் இந்தச் சட்டத்திலே தெளிவில்லாமல் இருக்கிறது. அதற்கும் ஒரு தெளிவை ஏற்படுத்த வேண்டும்.





அதைப்போல வழக்கறிஞர்களுக்கான குமாஸ்தாக்களுக்கு ஓய்வு பெறுகிற வயது எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. அதற்கு வயது நிர்ணயிக்கப்பட வேண்டும். 65 வயதிற்கு மேற்பட்டவர்கள்கூட குமாஸ்தாக்களாகப் பணியாற்றுகிறார்கள். இதையும் நாம் பார்க்கிறோம். பெரும்பாலும் வழக்கறிஞர்களினுடைய குமாஸ்தாக்களுக்கு ஊதிய நிர்ணயம் எதுவும் இல்லை. அனேகமாக பல வழக்கறிஞர்களுடைய எழுத்தர்கள் `client-ஐச் சார்ந்துதான் இருக்கிறார்கள். வழக்கறிஞர்களைச் சார்ந்தல்ல. பல நேரங்களில் 'client-ஐச் சார்ந்து வாழ வேண்டிய அளவிற்கு, அவல நிலையில் இருக்கின்ற அவர்களுடைய வாழ்க்கைக்கு இது ஒரு தீர்வாக ஏற்படும். இந்தச் சட்டம் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தும் என்ற அளவில் இந்தச் சட்டத்தை ஆதரித்து முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர்களுடைய எழுத்தர்களின் நலனுக்காக ஒரு நிதி அமைக்கப்பட்டு, எழுத்தர்களுக்கு உறுதுணை செய்ய வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது மூலச் சட்டம், முக்கியமானச் சட்டம்; முதன்முதலாக அவர்களுடைய நலனுக்காக கொண்டுவரப்படுகின்ற சட்டமாகும். எனவே இந்தச் சட்டத்தை அமல் நடத்துவதன்மூலம், அனுபவரீதியாக என்ன மாற்றங்கள் இதிலே செய்யலாம் என்பதை எதிர்காலத்திலே தெரிந்து, திருத்திக்கொள்ளலாம்.

ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் A.L.S. அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று, வழக்கறிஞர்களுக்கென, தனி நல நிதி இருக்கிறது. அதே அடிப்படையில்தான், இதுவும் தயாரிக்கப்பட்டிருக்கின்றது. எந்த மாற்றமும் இல்லை. மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் குறிப்பிட்டதைப்போன்று—அவர்களுக்கு முதலிலே பதிவுக் கட்டணம்தான் 50 ரூபாய். அதற்குப் பிறகு பதிவுக் கட்டணம் என்பது எதுவும் கிடையாது. பிறகு சந்தா என்பது மொத்தத்திலே 1,000 ரூபாய்தான். வருடத்திற்கு 1,000 ரூபாய் அல்ல.

மொத்தத்திலே *1,000* ரூபாய்தான். அதை *2* முறையாகக் கட்டலாம் என்று சொல்லியிருக்கிறோம். அவ்வளவுதான். *1,000* ரூபாய் கட்டிவிட்டால் அதற்குப் பிறகு பணம் கட்ட வேண்டிய அவசியமே அவர்களுக்கில்லை என்ற அடிப்படையில்தான் இதை எளிமைப்படுத்தியிருக்கிறோம். எனவே இன்றைய தினம் வழக்கறிஞர்களுக்கும், இவர்களுக்கும்—அதே நேரத்தில் அரசு சார்பில் *2* ரூபாய் Stamp ஒட்டி—அதை அனுமதித்திருக்கிறோம். அதற்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்திருக்கிறது. இது அரசு சார்பாக அவர்களுக்கு அளிக்கப்படுகிற சலுகையாகும். நம்முடைய குழந்தை தமிழரசன் அவர்கள், அரசு சார்பிலே நிதியும் தரலாமே என்று சொன்னார். நல்ல ஆலோசனைதான். ஆனால் அது ஒரு கொள்கை முடிவு. அதைப் பற்றி அமைச்சரவைதான் முடிவெடுக்க வேண்டுமே தவிர, ஆலடி அருணா அறிவிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அவர் சொல்வது நல்ல ஆலோசனை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோன்று இப்பொழுது வழக்கறிஞர்கள் தங்களுடைய பணிக் காலத்தில் இறந்தால் ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. ஆனால் இவர்களுக்கு *50* ஆயிரம் ரூபாய்தான் இருக்கிறது, இதையும் உயர்த்த வேண்டும் என்று ஞானசேகரன் அவர்கள் சொன்னார்கள். உண்மையிலேயே நல்ல கருத்து. அது நியாயமான கருத்துதான் என்றாலும், இன்னும் நீதித் துறையில் நமக்கு பெரிய மாற்றங்களையெல்லாம் செய்வதற்கு வழக்கறிஞர்களுடைய ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. அந்தச் சந்தர்ப்பத்திலேதான் இவைகளைப் பற்றியெல்லாம் நாம் சரியாகப் பரிசீலிக்க முடியும் என்றாலும் ஒரு முதல் முயற்சி, நல்ல முயற்சி. எழுத்தர்கள் *1985*-ஆண்டிலிருந்தே இதைக் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். *1985*-ஆம் ஆண்டிலிருந்து அவர்கள் கொடுத்துக் கொண்டிருக்கிற குரலுக்கு கலைஞர் இன்றைக்கு முக்கியத்துவம் கொடுத்து இதைச் சட்டமாக நிறைவேற்றுகிறார்கள் என்றால் தமிழ்நாட்டில் இருக்கிற எழுத்தர்களெல்லாம் இன்றையதினம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றார்கள்.

*பிற்பகல் 1-25*

மாண்புமிகு உறுப்பினர் A.L.S. அவர்கள் பேசுகின்றபொழுது, பிரிவு *2*(சி)யில் இருக்கிற 'What do you mean by an Advocate's Clerk?'



என்பதைப் பற்றிச் சொல்லும்போது, அதற்கு ஒரு தவறான விமர்சனம் அளிக்க இடம் அளித்துவிடும் என்று சொன்னார்கள். இதிலே நாங்கள் என்ன தெளிவுபடுத்தியிருக்கிறோம் என்றால், Clerk என்றால் நாங்கள் ஏதோ *10* ஆம் வகுப்பு படித்து இருக்கவேண்டும் அல்லது மேல்நிலைப் படிப்பு படித்திருக்க வேண்டும், அல்லது பட்டதாரியாக இருக்க வேண்டும். இவ்வளவு அளவுக்கு இருக்க வேண்டும் என்று சொல்லவில்லை. இதெல்லாம் அவர்கள் விருப்பப்படி செய்கிற தொழில். ஒருவர் B.A. படித்திருப்பார், ஆனால் திறமை இல்லாமல் இருக்கும். இன்னொருவர் *10* ஆம் வகுப்பு படித்திருப்பார், நல்ல திறமை இருக்கும். வழக்கறிஞர்கள் தமக்கு விருப்பப்பட்டவரை வைத்துக்கொள்கிறார்கள். எனவேதான் 'Advocate's Clerk means a Clerk employed by an Advocate.' அதனால் ஒரு வழக்கறிஞர் யாரை வைத்திருக்கிறாரோ அது போதும். தகுதியை நிர்ணயிப்பதே வழக்கறிஞர்தான். அதற்காக ஒரு வழக்கறிஞர் தன்னிடத்திலே இருக்கிற *10* பேரை, *20* பேரைச் சொல்ல முடியாது. எனவே அவருக்குத்தான் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே அவர் தவறு செய்தால், வழக்கறிஞர்......

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னது அவர்களுடைய கல்வித் தகுதியைப் பற்றி அல்ல. ஒரு வழக்கறிஞரிடத்தில் பல குமாஸ்தாக்கள் இருக்கிறார்கள். ஒருவர்தான் பதிவு செய்யப்பட்ட குமாஸ்தா. மற்றவர்களெல்லாம் Touts கூட, இப்பொழுது குமாஸ்தாக்களைப் போல இருக்கிறார்கள். ஆகவே 'Employed under Advocate' என்பது 'A registered Clerk' என்றால், இப்பொழுதுள்ள சட்டப்படி register செய்து அதை approve செய்து அது *3* ஆண்டுகாலம், *5* ஆண்டுகாலம் நிலுவையில் இருக்கும். அப்படிப் போட்டால் mis-use ஆகாது என்பதைத்தான் நான் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** 'Employed' என்று சொல்லும்போதுகூட, நாங்கள் அவர்களிடமிருந்து அனுமதியைப் பெற்றுக்கொள்கிறோம். வழக்கறிஞரிடத்திலே ஒப்புதல் பெற்றுத்தான் அதைச் செய்கிறோம். அதில் பிரச்சினைக்கே இடமில்லை. அதில் ஒன்றும் mis-use -க்கு வாய்ப்பே கிடையாது. அதற்காக வழக்கறிஞர் தன்னிடத்தில் நிறைய பேர் வேலை செய்வதாகச் சொல்லிவிட முடியாது. எனவே இதிலெல்லாம் தவறுக்கு இடமில்லை. என்றாலும் நடைமுறையில் எதிர்காலத்தில் சிக்கல் இருக்குமானால், வேண்டிய திருத்தங்களைச் செய்து கொள்ளலாம். *1985* ஆம் ஆண்டிலிருந்து

கோரிக்கையாக வைத்திருக்கிற எழுத்தர்களுக்கு ஒரு நல்ல சட்டமுன்வடிவை இன்றைக்குக் கொண்டு வந்து சட்டமாக்கி தமிழகமெங்கும் இருக்கிற வழக்கறிஞர்களுடைய எழுத்தர்களுக்கு பாதுகாப்பையும், நிதி உதவியையும் உண்டாக்குகிறோம். எனவே இந்தச் சட்டமுன்வடிவை எல்லோரும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று அன்போடு வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 26 வரை மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 26 வரை மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.



**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்களுக்கான எழுத்தர்களின் நல நிதிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/1999) நிறைவேற்றப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (அஉ) தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/1999), மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/1999)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

---

@ 29-4-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது. (குறுக்கீடு) ஞானசேகரன், என்ன, Point of Order- ஆ?

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, விவாதத்தில் பேசுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசாமல் இருக்கமாட்டீர்களா? அடுத்த சட்டமுன்வடிவின் மீதும் சேர்த்துப் பேசிவிடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய முத்திரைச் சட்டத்தில், வெளி மாநிலங்களில் ஒரு சொத்து பதிவானால், அதாவது 4 ஆண்டுகளுக்குள் இருந்தால், அந்த difference கட்டணத்தைச் செலுத்த வேண்டும் என்று இருக்கிறது. இப்போது நீங்கள் கொண்டு வந்திருக்கின்ற சட்டத்திலே On receipt of document நீங்கள் 4 வருடங்கள் கேட்டிருக்கிறீர்கள். அது தேவையில்லாத கால அவகாசமாகும். இதில் document வந்தவுடனே அரசுக்கு ஏன் 4 வருடங்கள் தேவைப்படுகின்றன என்று புரியவில்லை. அதாவது on receipt of documents , within a year it should be over. நீங்கள் அதை ஓராண்டுக் காலத்திற்குள்ளே முடித்துக்கொள்வீர்களேயானால் நல்லதாக இருக்கும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல முத்திரைச் சட்டத்திலே பிழை திருத்தும் ஆவணத்தைத் தயாரிக்கின்றபோது original ஆவணத்தைத் தயாரிப்பதற்கு எவ்வளவு கட்டணமோ அதே கட்டணத்தை இப்போது அந்த அலுவலகத்திலே வசூலித்துக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு ஒரு எளிமையான முறையை அமைச்சர் அவர்கள் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மறைமலை நகர் குறித்து நான் ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். வீட்டுவசதி வாரியத்திற்கான நிலத்திற்கு குறைந்த கட்டணத்தை நீங்கள் மறைமலை நகரில் முத்திரைக் கட்டணமாக வசூலிக்கிறீர்கள். ஆனால் M.M.D.A. நிலத்திற்கு அதிகமான கட்டணத்தை வசூலிக்கிறீர்கள். அதைச் சீர் செய்து, வீட்டுவசதி வாரியத்திற்கு எவ்வளவு கட்டணத்தை வசூலிக்கிறீர்களோ அதே கட்டணத்தை வசூலித்து M.M.D.A வீடுதாரர்களுக்கு document-களை உடனடியாகப் பதிவு செய்து கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் ஏற்கெனவே கோரியிருக்கிறேன். அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தரவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களில் பதிவு செய்கின்ற ஆவணங்கள் மற்ற மாநிலங்களிலே குறைந்த மதிப்பிலே பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் நம்முடைய மாநிலத்திற்கு மாற்றம் செய்கின்ற முறையிலே 4 வருட காலத்திற்குள்ளாக வந்தால் அதற்குரிய வித்தியாசப்படுகின்ற தொகையை மாநில அரசு வசூல் செய்து கொள்ளலாம் என்றுதான் ஏற்கெனவே உள்ள பிரிவு 19(பி)-யிலே இருக்கிறது. இப்போது கொண்டுவரப்பட்டிருக்கின்ற திருத்தச் சட்டம், மற்ற மாநிலங்களிலே, குறைவான முத்திரைத்தாள் மதிப்பு இருக்கின்ற மாநிலங்களிலே பதிவு செய்துகொண்டு, அவர்கள் நகலையும் கையிலே வாங்கிக்கொண்டு 4 ஆண்டுகள் கழித்துத்தான் கொண்டு வருகிறார்கள். ஏற்கெனவே இருக்கின்ற சட்டம் 19(பி) ன்படி 4 ஆண்டுகள் முடிந்துவிட்டால் அவர்களிடத்திலே அந்தக் கட்டணத்தை வசூல் செய்ய இயலாது. வசூல் செய்ய இயலாது என்பதற்குக் காரணம் 4 ஆண்டுகள் முடிந்து இன்னும் பல கோடிக்கணக்கான ரூபாய் நம்முடைய அரசுக்கு, தமிழகத்திற்கு அண்டை மாநிலமான கேரளாவிலிருந்து வரவேண்டிய தொகை இருக்கிறது. நம்முடைய மாநிலத்திற்கு அவர்கள் 4 ஆண்டுக் காலம் கழித்து வந்தால் அதை வசூல் செய்ய இயலாத சட்டமாக இருக்கின்ற காரணத்தால்தான், 19(பி) இருக்கின்ற காரணத்தால்தான், என்றைக்கு இங்கே இருக்கின்ற பதிவாளர் அலுவலகத்தில் அந்த நகலைப் பெறுகின்றோமோ அந்தத் தேதியிலிருந்து 4 வருடங்கள் என்று வைத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். ஒரு வருடம் போதும் என்று சொன்னார். ஒரு வருடம் போதும். இருந்தாலும் 4 வருடங்கள் என்று வைத்திருப்பதற்குக் காரணம், ஏற்கெனவே இருக்கக்கூடிய முறையிலே அவர்களுக்கு Notice கொடுக்க வேண்டும்; Notice கொடுத்த உடனே, அந்தப் பதிவாளர் Notice கொடுத்ததற்குப் பிறகு அவர்கள் கட்டவில்லையென்றால் Stamp Duty Collector-க்கு அனுப்பப்படும். அதற்குப் பின்னால் அந்த வித்தியாசத்தை வசூல் செய்கின்ற நிலை இருக்கிறது. ஏற்கெனவே இருக்கக்கூடிய 47(ஏ)-ல் இன்று தமிழகத்தில் ஒரு இலட்சம் ஆவணங்கள் நிலுவையில் இருக்கின்றன. அதற்காகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புதிய திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். சமாதானத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். 47(ஏ)-ல் பாதித் தொகை கட்டினால் போதும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக ஒரு வருடம் என்பது

போதாது. 4 வருடம் என்பதை நாம் பெயரளவிலே வைத்திருக்கின்றோம். இருந்தாலும் அதைக் குறைக்க முடியுமா என்பதைப் பற்றி எதிர்காலத்திலே சிந்திக்கலாம்.

எப்படி வீட்டுவசதி வாரியம், கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு சலுகையை வழங்குகின்றதோ அதேபோல் M.M.D.A.-வுக்கும் சலுகை வழங்க வேண்டுமென்று உறுப்பினர் கேட்டிருக்கிறார். நான் ஏற்கெனவே என்னுடைய மானியக் கோரிக்கையில் பதில் சொல்லும்போது சொல்லியிருக்கிறேன். நிச்சயமாக அதை அரசு பரிசீலிக்கும். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை அரசு எதிர்காலத்தில் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



பிற்பகல் 1-35

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/1999) நிறைவேற்றப்பெறவேண்டும்*"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(அ) இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1999). மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. இ. பெரியசாமி] [1999 மே 17

"1999 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1999) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்..

@ 14-5-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1999 மே 17]

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1999) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 7. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசினர் தீர்மானம்.
மாண்புமிகு பேரவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 18-5-1999 அன்று தளர்த்தி, அந்த நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"
என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க.
மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

[பேரவைத் தலைவர்] [1999 மே 17

மறுப்பாரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (18-5-1999) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1-38 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

181. திருநெல்வேலி சந்திப்புப் பேருந்து நிலையத்தில், 19-06-1997 அன்று நண்பகல் 12-00 மணிக்கு கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கும் (தற்போது தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், மதுரை கோட்டம்-II) காவல் துறையினருக்கும் இடையே மோதல் ஏற்படுவதற்கு வழிவகுத்த சம்பவங்கள் குறித்தும், அரசு மற்றும் போக்குவரத்துக் கழக வண்டிகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் உட்பட பின்னர் ஏற்பட்ட சட்டம் ஒழுங்குப் பிரச்சனைகள் குறித்தும் விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட நீதிபதி திரு. எஸ்.ஏ. காதர் விசாரணை ஆணையத்தின் அறிக்கை. (1952ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

182. மதுரையில் 30-10-1998 அன்று அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் திரு. அய்யணன் அம்பலம், இன்னும் இருவர் மரணம் மற்றும் ஒன்பதின்மர் காயமடைந்த சம்பவம் பற்றிய திரு. ம.அ. முருகேசன், பி.ஏ., பி.எல்., மாவட்ட நீதிபதி (ஓய்வு) விசாரணை ஆணையத்தின் அறிக்கை. [1952ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்)

183. 1976-77 முதல் 1982-83 வரையிலான கால அளவில், சித்திரங்கள் உள்ளடக்கிய கண்ணாடிகள், கம்பி இணைக்கப்பட்ட கண்ணாடிகள், உறுதியான (L.S.G.) கண்ணாடிகள் மற்றும் குளிர்ச்சி கண்ணாடிகள் ஆகியவற்றின் விற்பனை மீது 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் வணிகர்கள் செலுத்தத்தக்க வரித் தொகையினை தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் துறையின் 03-11-1998-ஆம் நாளிட்ட 301 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)]



1999 மே 17]

184. 1998-ஆம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (நுண்ணறிவுத் திறன் தொழில், வணிகத் தொழில், மரபுத் தொழில், பணித் தொழில் ஆகியவற்றிற்காக வரி வசூலித்தல்) விதிகளை வகுப்பது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 28-12-1998ஆம் நாளிட்ட 219ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348 (டி) பிரிவு, 1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432 (2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431 (2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 1994-ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11 (3) பிரிவு மற்றும் 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) 11 (3) பிரிவு, ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

185. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (நுண்ணறிவுத் திறன் ஆற்றல், வணிகத் தொழில், மரபுத் தொழில், பணித் தொழில் ஆகியவற்றின் நிலுவைத் தொகை வசூலித்தல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 05-03-1999ஆம் நாளிட்ட 71ஆம் எண் அரசாணையில் வெளியிடபட்ட அறிவிக்கை. [1919ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348 (டி) பிரிவு, 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவு, 1971ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432 (2) பிரிவு, 1981ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின்

[1999 மே 17

(தமிழ்நாடு சட்டம் 25/1981) 431 (2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11 (3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11 (3) பிரிவு மற்றும் 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) 11 (3) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

186. 1997-98 ஆம் ஆண்டிற்கான அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் இருபதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

187. 1998 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாள் முடிய காலவரைக்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (எண். 3) (சிவில்) [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (ஆங்கிலம்)

188. தமிழ்நாடு அரசின் 1997-98 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கக் கணக்குகள் [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (ஆங்கிலம்)

189. தமிழ்நாடு அரசின் 1997-98 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் கணக்குகள் [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

251. 'பெரியார் நினைவு சமத்துவபுரம்' என்ற கையேடு. (தமிழ்)

252. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் பயனாளிகளின் கையேடு. (தமிழ்)

253. பொதுக் கணக்குக் குழுவின் நூற்றுத் தொண்ணூற்று ஒன்பதாவது அறிக்கை, 1998-99.

254. பொதுக் கணக்குக் குழுவின் இருநூறாவது அறிக்கை, 1998-99.



1999 மே 17]

255. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஒன்றாவது அறிக்கை, 1998-99.

256. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இரண்டாவது அறிக்கை, 1998-99.

257. பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூறாவது அறிக்கை, 1998-99.

258. பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று ஒன்றாவது அறிக்கை, 1998-99.

259. பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று இரண்டாவது அறிக்கை, 1998-99.

260. பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று மூன்றாவது அறிக்கை, 1998-99.

D

2, 21, 282

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.